Regested No. QD/130/News/2011

YARL OSAI


# யாழ் ஓசை

வார இதழ்

ஓசை : 01 நாதம் : 47 வெள்ளிக்கிழமை 23.09.2011 வார இதழ் விலை ரூபா: 15.00

# குடாநாட்டில் வன்முறைச் சம்பவங்கள் சமூகவிரோத செயல்கள் மீண்டும் அதிகரிப்பு

## ஒருவர் பலி; 9 பேர் படுகாயம்; மக்கள் மத்தியில் அச்சம்



யாழ். கொக்குவில் கிழக்குப் பகுதியில் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்ற வீடு ஒன்றினை படத்தில் காணலாம். (படப்பிடிப்பு- வண்ணார்பண்ணை நிருபர்)

(வண்ணார்பண்ணை, காவலூர் நிருபர்கள்)

யாழ். குடாநாட்டில் வன்முறைச் சம்பவங்கள், சமூகவிரோதச் செயல்கள் என்பன மீண்டும் அதிகரித்துள்ளன. நேற்று கொக்குவில், இருபாலை மற்றும் ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் ஒருவர் கொல்லப்பட்டும் 9 பேர் காயமடைந்தும் உள்ளனர்.

மேலும் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். ஊர்காவற்றுறையில் நேற்று அதிகாலை ஒருமணியளவில் வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். சவரிமுத்து ஜேசுராஜா (57 வயது )

(6ஆம் பக்கம் பார்க்க)

## தருஷ்மன் அறிக்கை மனித உரிமைப் பேரவைக்கு வந்தாலும் அதனை எதிர்கொள்ள தயார்

### அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா சூளுரை

(ரொபட் அன்டனி)

ஜெனிவாவில் அமைந்துள்ள மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஐக்கிய நாடுகளின் தருஷ்மன் அறிக்கையை பேரவையில் விவாதத்துக்கு உட்படுத்துவதற்கு சர்வதேச மனித உரிமை காப்பகம் மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபை உள்ளிட்ட அமைப்புக்கள் பாரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. எனினும், அந்த முயற்சியை முறியடிக்கும் வகையில் பல வழிகளிலும் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.(6ஆம் பக்கம் பார்க்க)

## வாகனங்களில் பயணிப்போர் ஆசனப்பட்டி அணிவது கட்டாயம்

### இல்லையேல் அபராதம்; முதலாம் திகதி முதல் அமுல்

(எம். நேசமணி)

வாகனங்களின் முன் ஆசனங்களில் பயணிப்போர் ஆசனப்பட்டியை அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறையானது அக்டோபர் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மெக்ஷி புரொக்டர் தெரிவித்தார்.

அதிகரித்துவரும் வாகன விபத்துக்களை கட்டுப்படுத்துவதற்காகவே இந்த விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அதனை (6ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு உள்ளூராட்சி தேர்தலில் சு.க. தோல்வியடைந்தாலும் வெற்றியே

### அமைச்சர் ராஜித சேனாரத்ன

வடக்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஆளும் கட்சி தோல்வியடைந்திருந்தாலும் வடக்கில் தேர்தலை மிகவும் ஜனநாயக ரீதியிலும் சுதந்திரமாகவும் நடத்தக் கிடைத்தமையே நாங்கள் அடைந்த பாரிய வெற்றியாகும். வரலாற்றில் முதல் தடவையாக வடக்கில் சுதந்திரக் கட்சி பிரதிநிதிகளை பெற்றுக்கொண்டுள்ளது என்று மீன்பிடித்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் விசேட செய்தியாளர் (6ஆம் பக்கம் பார்க்க)



# நள்ளிரவில் இனந்தெரியாதோரின் வாகன நடமாட்டம்; அச்சத்தில் மண்டைதீவு மக்கள்

(மண்டைதீவு நிருபர்)

மண்டை தீவில் இரவு நேரங்களில் வாகனங்களின் நடமாட்டம் அதிகளவில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மண்டைதீவு கிழக்குப் பகுதியில் மக்களின் குடியிருப்புக்கள் ஊடாக நள்ளிரவு நேரத்தில் இனந்தெரியாதோரின் வாகனங்கள் அதிகளவில் பயணிப்பதாகவும் இவற்றின் செயற்பாடுகள் அச்சமூட்டும் விதத்தில் உள்ளதாகவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

மிக வேகமாக வரும் வாகனங்கள் வீட்டு வாசல்களினை அண்டி மெதுவாக செலுத்தப்படுவதாகவும் ஒலி எழுப்பியபடி ஆட்கள் இறங்கும் ஒலிகள் கேட்பதாகவும் பின் அவை புறப்பட்டுச் செல்வதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

வீடுகளில் எவ்வித அசம்பாவிதங்களும் இடம்பெறாதபோதும் மக்கள் அச்சத்தின் காரணமாக எல்லோரும் ஒன்றாக இரவுகளில் தங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.இதேவேளை கடந்த வாரம் பிரதேசத்திற்கு புதிய நபர் ஒருவர் மக்கள் குடியிருப்பு பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் வந்தமையை அவதானித்த சிலர் அவரை அணுகி விசாரித்துள்ளனர்.

இதன்போது மன நிலை பாதிக்கப்பட்டவர் போன்று பதிலளித்தமையால் அவர்கள் பிரதேச இளைஞர்களுக்கு கூறியுள்ளனர். சந்தேகமடைந்த இளைஞர்கள் அவரை பிடிக்க முற்பட்ட போது அந் நபர் மிகவேகமாக மோட்டார் சைக்கிளில் யாழ். நகர் நோக்கி சென்று தப்பிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு அச்சமூட்டும் செயற்பாடுகள் அதிகரித்து வருவதனால் இயல்பு நிலை பாதிப்படைந்து உள்ளதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# திரைச் சீலையின் நிறத்தைக் காரணம் காட்டி இசை நிகழ்வை நிறுத்த முனைந்த படையினர்

(மண்டைதீவு நிருபர்)

கனகராஜன் குளம் இளந்தாரி ஐயன் கோவில் பொங்கலை முன்னிட்டு இடம்பெற்ற இசை விழாவில் திரைச்சீலை நிறத்தைக் காரணம் காட்டி படையினர் குழப்பம் விளைவித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அண்மையில் இக்கோவிலின் பொங்கல் விழாவை முன்னிட்டு 'ஸப்தஸ்வராசு இசைக் குழுவின் இசை நிகழ்சியை ஆலய நிர்வாகத்தினர் ஒழுங்கு செய்திருந்தனர். நிகழ்ச்சி ஆரம்பமாவதற்கு சிறிது நேரமிருக்கையில் அங்கு அதிகளவில் திரண்ட படையினர் மேடையின் பின்புறத்தில் கட்டிய திரைச்சீலையில் சிவப்பு மற்றும் மஞ்சள் நிறங்கள் அதிகம் இருப்பதால் இசை நிகழ்ச்சி நடத்தமுடியாது எனவும் தெரிவித்தனர்.

மேடை அலங்காரம் முடிந்து இசை நிகழ்ச்சி தொடங்கவிருந்த நிலையில் படையினர் இவ்வாறு குழப்பம் விளைவித்தமையினால் அங்கு பெரும் பரபரப்பு நிலவியது.

எனினும் பின்னர் ஊர்ப் பெரியோரின் தலையீட்டினையடுத்து அத் திரைச் சீலை வேறு வெள்ளைத் துணியால் மறைக்கப்பட்ட பின்னர் இசை நிகழ்ச்சியைத் தொடர்ந்து நடத்த அனுமதி வழங்கப்பட்டது.

இந்நிகழ்வின்போது மக்களை விட அதிகளவில் அங்கு படையினர் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நாளைய பரீட்சைக்கு அனுமதி அட்டை கிடைக்காதோரின் கவனத்திற்கு

அச்சுவேலி,

பட்டதாரி ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை நாளை சனிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு 15 ஆயிரம் பட்டதாரிகள் தோற்றவுள்ளனர். இப்போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்து இதுவரை பரீட்சைக்கான அனுமதி கிடைக்காத பரீட்சார்த்திகள் 011 2785230 அல்லது 011 2784201 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு உள்ளக இலக்கம் 400 என்ற எண்ணுடனும் தொடர்பு கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.




# மோட்டார் சைக்கிள் - டிராக்டர் விபத்து இரண்டு இளைஞர்கள் படுகாயம்

## குடத்தனையில் சம்பவம்

வடமராட்சி,

குடத்தனை சந்தியில் நடைபெற்ற மோட்டார் சைக்கிள் - டிராக்டர் வண்டி விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

பொற்பதி குடத்தனையைச் சேர்ந்த சலமன்ராஜ் ஜோர்ஜ் (26 வயது) தெய்வேந்திரம் பிரபானந்தம் (வயது 24) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

காயமடைந்த இருவரில் சலமன்ராஜ் என்பவர் யாழ். போதனா வைத்தியசாலையிலும் மற்றையவர் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.பொற்பதியிலிருந்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும் குடத்தனைச் சந்தி ஊடாக அம்பனை நோக்கித் திரும்பிய வேளை அம்பனிலிருந்து பருத்தித்துறை நோக்கி வந்த டிராக்டர் வண்டியுடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இதையடுத்தே மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுகாயமடைந்தனர்.

# வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த உற்சவம் திங்களன்று ஆரம்பம்

வடமராட்சி,

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 17 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு சப்பறத்திருவிழாவும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.15 மணிக்கு தேர்த்திருவிழாவும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு சமுத்திர தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் 12 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு பட்டுத் தீர்த்தத் திருவிழாவும் இடபெறுவதுடன் மகோற்சவம் நிறைவுறும்.

மகோற்சவத்தையொட்டி விசேட போக்குவரத்து, சுகாதார குடிதண்ணீர், அன்னதான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மகோற்சவத்தின்போது ஏழாம் திருவிழா தொடக்கம் சுவாமி வெளிவீதி உலா வந்து பக்தர்களுக்கு காட்சி கொடுப்பார்.

# வவுனியா குடி நீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் திட்டத்திற்கு அரச அதிபருக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்

## ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அமைச்சர் ரிசாட் பதியுதீன்

(யாழ். மத்தி நிருபர்)

வவுனியா நகர மக்களின் குடி நீர்ப்பிரச்சினை பேராற்று குடிதண்ணீர்த் திட்டத்தின் மூலம் தீர்த்து வைக்கப்படும். இதற்கு வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸுக்கு முழு ஒத்துழைப்பை வழங்கி உதவுங்கள என அமைச்சர் ரிசாட் பதியுதீன் கூறினார். வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் வவுனியா செயலகத்தில் அமைச்சர் ரிசாட் பதியூதின் மற்றும் ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி ஆகியோரின் இணைத் தலைமையில் இடம்பெற்றது.

அமைச்சர் ரிசாட் பதியூதீன் அங்கு மேலும் கூறுகையில்-

வவுனியாவில் குடிதண்ணீர் பிரச்சினை பாரிய பிரச்சினையாக உள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்ற ஆசிய அபிவிருத்தி வங்கி 3680 மில்லியன் ரூபாவைச் செலவிடவுள்ளது.

இத்திட்டம் முன்னெடுக்கப்படும் போது விவசாயிகள் பாதிக்கும் நிலை ஏற்படும் அதற்கான தீர்வை அரசாங்க அதிபர் மேற்கொள்வார்.

இதற்கான ஒத்துழைப்பை பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனும் வழங்கியுள்ளார்.

எனவே இன்றைய தீர்மானத்தோடு இத்திட்டம் விரைவு பெற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றார்.

மேற்படி கூட்டத்தில் வவுனியா மாவட்டத்திற்கான புற்றுநோய் வைத்திய சாலையைப் புனரமைப்பது மற்றும் கல்வி , சுகாதாரம் வீதி அபிவிருத்தி, உள்ளூராட்சி உட்பட 34 துறைகள் பற்றி ஆராயப்பட்டது.

மேற்படி கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், யுனை பாரூக், அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ், வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் தி. இராசநாயகம், பிரதேச சபை தலைவர், செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அபிவிருத்தி முன்னேற்றம் குறித்து விவாதித்தனர். பிற்பகல் 3.45 மணிக்கு ஆரம்பமான இக்கூட்டம் 7.30 மணியளவில் முடிவடைந்தது.




# கிளிநொச்சிக்கு குடிநீர் வழங்குமாறு பொது அமைப்புக்கள் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம் மேலதிக நிருபர்)

கிளிநொச்சி நகரப் பகுதிக்கும் புறநகர்ப் பகுதிகளுக்கும் குழாய் மூலம் குடிநீர் வசதி செய்து தருமாறு இப்பகுதி பொது மக்களும் பொது அமைப்புக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

நகரில் முன்னர் பாரிய தண்ணீர் தாங்கி அமைக்கப்பட்டு கிளிநொச்சி நகர் குளத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. கடும் யுத்தம் இடம்பெற்ற வேளை இப்பாரிய தண்ணீர் தாங்கி அழிந்து தரைமட்டமானது. தற்போது இத் தண்ணீர் தாங்கி விழுந்து கிடக்கும் இடம் இராணுவ பாவனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் தென்னிலங்கை மக்களின் காட்சிப் பொருளாகவுமுள்ளது.

இதனைப் பார்வையிட அங்கிருந்து பெருமளவானோர் வருகை தருவதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நகரில் குடிதண்ணீர் பிரச்சினை அதிகரித்துள்ளதால் மீண்டும் குழாய் மூலமான குடிநீர் வசதியை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஏற்படுத்தித் தரவேண்டுமென அவ் வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெளிநாட்டுத் தொழில்களுக்கு செல்வோருக்கு கட்டாயப் பயிற்சி

வரணி,

மத்திய கிழக்கு, மலேசியா மற்றும் மாலை தீவுகளுக்கு வீட்டுப் பராமரிப்பாளர் தவிர்ந்த ஏனைய வேலை வாய்ப்புக்காகச் செல்லும் தொழிலாளர்கள் 5 நாட்கள் கட்டாய பயிற்சியை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கிளையொன்றில் பெறவேண்டுமென பணியகத்தின் தலைவர் அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது - இப்பயிற்சியை திறம்பட பயின்று உங்கள் கடவுச்சீட்டு இலக்கத்தை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தகவல் தொழில் நுட்பத் தொகுதியில் சேமித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அவ்வாறு பயிற்சியைப் பெறாதவர்கள் எவரும் வெளிநாடுகளுக்கு தொழில்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள். இப்பயிற்சி வீட்டுப் பராமரிப்பாளர்களாகச் செல்லும் பணியாளர் தொடர்பில் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் இருந்து இவ்வாறு வேலைக்குச் செல்லவுள்ளவர்கள் யாழ்ப்பாணக்கிளை பணியகத்துடன் 021 - 222 0682 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# அரச இலக்கிய விருது வழங்கும் விழா

கலாசார திணைக்களம் ஒழுங்கு செய்துள்ள அரச இலக்கிய விருது வழங்கும் விழா எதிர்வரும் 30 ஆம் திகதி குருநாகல் மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் யாழ். மாவட்டத்திலிருந்து 25 கலைஞர்கள் பங்கு கொள்ளவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை யாழ். அரசாங்க அதிபர் மேற்கொண்டுள்ளார்.

கலைஞர்கள் தொடர்பான விபரங்கள் பிரதேச செயலக மட்டத்தில் திரட்டப்பட்டு தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இவர்களுக்கான பிரயாண ஒழுங்கு, தங்குமிடம் , உணவு வசதிகள் யாவும் கலாசார திணைக்களத்தினால் வழங்கப் படவுள்ளன.

# வடமராட்சியில் வாகன விபத்துக்கள் அதிகரிப்பு

வடமராட்சி,

வடமராட்சிப் பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள்களின் விபத்துக்கள் அதிகரித்துள்ளன.

கடந்த வாரத்தில் மட்டும் ஆங்காங்கே மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள் வண்டிகள் மற்றும் டிராக்டர் வண்டிகள் வரையான வாகனங்களுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இச் சம்பவங்களில் படுகாயமடைந்தோர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை, யாழ். போதனா வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

கடைசியாக குடத்தனைப்பகுதியில் மோட்டார் சைக்கிளும் டிராக்டர் வண்டி ஒன்றும் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவர் காயங்களுடன் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையிலும் மோட்டார் சைக்கிள் பின் ஆசனத்தில் அமர்ந்திருந்தவர் படுகாயத்துடன் யாழ். போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

## பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் இசை நிகழ்ச்சி

வடமராட்சி,

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் சுற்றாடலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நடைபெற்றுவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணிக்கு புலோலி புற்றளை மகா வித்தியாலய மாணவர்களின் இசை நிகழ்ச்சி இடம்பெறும்.

# ஆன்மிக சொற்பொழிவு

வடமராட்சி,

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிமத்தில் இடம்பெற்றுவரும் வாராந்த ஆன்மீக நிகழ்வு வரிசையில் இன்று 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு 'தேவி பாகவதம்' தொடர் சொற்பொழிவு நடைபெறும்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ. குமாரவேல் இச் சொற்பொழிவை நிகழ்த்துவார்.

## வைத்தியரிடம் கேளுங்கள்

வாசகர்களின் நோய்கள் சம்பந்தமான கேள்விகளுக்கு பண்ணை மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் பணிபுரியும் யாழ்.மாவட்ட காச நோய் கட்டுப்பாட்டு அதிகாரி

**டாக்டர் சீ. எஸ். ஜமுனாநந்தா**

பதில் அளிக்கவுள்ளார்.

நோய்கள் சம்பந்தமான கேள்விகளை பின்வரும் விலாசத்திற்கு அனுப்பினால் அதற்கான பதில்கள் யாழ்.ஓசையில் பிரசுரிக்கப்படும்

அனுப்பவேண்டிய முகவரி

வைத்தியரிடம் கேளுங்கள்
யாழ்.ஓசை வீரகேசரி கிளைக் காரியாலயம்,
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Yaal Osai
யாழ் ஓசை
2011 செப்டெம்பர் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021-2222730, Fax: 0212222730
E-mail-jaffna@virakesari.lk

# இனப் பிரச்சினைத் தீர்வும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தமும்

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகள் மற்றும் சுய நிர்ணய உரிமை தொடர்பான முன்னெடுப்புகளின்போது மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் அவசியம் எனச் சுட்டிக்காட்டியுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு அதற்கு அமெரிக்க அரசாங்கம் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் பற்றீசியா பூட்டனிஸ் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதன்போதே சிறிதரன் எம்.பி. மேற்கண்ட கோரிக்கையை அமெரிக்க தூதுவரிடம் முன்வைத்துள்ளார்.

பொலிஸ் மற்றும் காணி அதிகாரத்துடன் கூடிய அரசியல் தீர்வொன்று காணப்பட வேண்டுமானால் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் அவசியமானதாகும்.

கடந்த கால சம்பவங்கள் மற்றும் நடைமுறையிலுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டே இக் கோரிக்கையை முன்வைக்கிறோம். தமிழர்கள் தம்மைத் தாமே ஆளக் கூடிய சுயநிர்ணய ஆட்சியை மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தமின்றிப் பெற முடியாத நிலையே இன்று காணப்படுகிறது என்றும் சிறிதரன் எம்.பி. இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த காலங்களிலும் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை பல்வேறு நாடுகள் வகித்திருந்தன.

அவற்றின் தலையீடு மற்றும் அழுத்தங்களின் காரணமாக அரசாங்கமும் தமிழ் தரப்பும் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்றிருந்தன.

இருந்தபோதிலும் அவற்றின் மூலமாக சில இணக்கப்பாடுகள் எட்டப்பட்டாலும் நிலையான தீர்வினைக் காண முடியவில்லை.

இந் நிலையில்தான் தற்போது போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் அரசாங்கத்திற்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

பத்து சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்ற நிலையில் இரு தரப்பினருக்குமிடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக பேச்சுவார்த்தை தடைப்பட்டிருந்தது. இருப்பினும் அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க இராஜாங்க தூதுவர் ரொபட் ஓ பிளேக்கின் வருகையைத் தொடர்ந்து மீண்டும் பேச்சுக்களைத் தொடர்வதற்கான சூழல் தோற்றுவிக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டிருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், சர்வதேச அழுத்தம் மற்றும் தமிழ் மக்கள் ஓரணியில் திரண்டிருப்பதன் காரணமாக இலங்கை அரசின் போக்கில் தற்போது மாற்றம் ஏற்பட்டிருப்பதாகவும் பேசிப் பேசிக் காலத்தை இழுத்தடிக்காது ஆக்கபூர்வமாக எதையாவது செய்தாக வேண்டும் என்ற நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

போருக்குப் பின்னரான சூழலில் இலங்கை அரசாங்கம் தமிழ் அரசியல் தரப்புகளுடன் கட்டாயம் பேச்சுவார்த்தைகளை நடத்தி இணக்கப்பாடுகளை எட்ட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனாலும் மூன்றாம் தரப்பு ஒன்று இப் பேச்சுவார்த்தைகளில் மத்தியஸ்தம் வகிக்க முன்வருமாயின் அது வரவேற்கத்தக்கதே. ஏனெனில் பேச்சுவார்த்தைகளின்போது இரு தரப்பினருக்குமிடையில் ஏற்படும் கருத்து முரண்பாடுகளைக் களைந்து சமரசப்படுத்துவதற்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்று அவசியமாகும்.

இது தொடர்பில் இப் பேச்சுவார்த்தையுடன் சம்பந்தப்பட்ட தரப்பினரும் இலங்கை மீது அக்கறை கொண்ட சர்வதேச நாடுகளும் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

# அராஜகதந்திரிகளின் இராஜதந்திரத் தோல்வி

### இன நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்கான தொடர்பாடல் இணைவுகள்

ஒரு புறம் விடுமுறையினைக் கொண்டாட மக்கள் கூட்டம். நகர உல்லாச ஹோட்டல்கள் நிரம்பி வழிகின்றது. நயினாதீவு, காங்கேசன்துறை என வீதி எல்லாம் மிகவும் ஆடம்பரமான வாகங்களில் நிரம்பி வழிகின்றது. ஆனால் அவர்களிற்கு புரியுமா? மறுபுறம். நகரின் அருகில் உள்ள மக்கள் குடியிருப்பின் மீது இராணுவ அராஜகம். ஆண்கள் அடித்து கைகால் முடக்கப்பட்டனர். பெண்களின் அங்கங்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டன. இவற்றிற்கு மேலாக இலங்கை நீதிபதியினால் ஆண்கள் சிறையில் அடைக்கப்பட்டன. பொலிஸ் அதிகாரிகளும் இராணுவ அதிகாரிகளும் பொய் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

ஏன் இந்த அநியாயம். தமிழனாகப் பிறந்த வினையா? பொய் வழக்கை உருவாக்கியமை ஏன் நீதிபதி கண்டிக்கவில்லை.இது படித்து பட்டம் பெற்ற சட்ட வாதியின் கேள்வி அல்ல. இளம் வயதில் கணவனை இழந்து, தனது கைக்குழந்தைகளுடன் வாழ்ந்து வரும் விதவைப்பெண்ணின் கதறல். தமிழ்ப் பெண் என்றால் சிங்களவர் என்ன செய்தாலும் சரி என்பது உலக நியதியோ. மதத்தலைவர்களே, அரசியல் வாதிகளே, மனித உரிமையாளர்களே இன்று நீங்கள் எமக்காக குரல் கொடுக்காவிட்டால் நாளையும் எமது சகோதரிகள் பாதிக்கப்படுவர். இவ்வாறு நாம் இன்று நேற்று அல்ல கடந்த 30 வருடங்களாக அவலக்குரல் எழுப்புகின்றோம்.

இனியும் வேண்டாம் இன ரீதியான துன்புறுத்தல். இனியும் வேண்டாம் பாலியல் ரீதியான இனத்துன்புறுத்தல். நாகரீக உலகில் வாழும் மனிதர் அநாகரிகமாக செயற்படல் தவறு. ஆனால் அதனைக் கண்டிக்கத் தவறுவது மிகத்தவறு.

படித்தவர்களாகட்டும் பணம்படைத்தவராகவும் தவறுகளை உரிய இடத்தில் உணரத்தவறின், அவ்களது உடல் சட்டத்திற்குச் சமன். ‘மரம் போல்வார் மக்கட் பண்பு இல்லாதவர், அரம் போல் கூர்மையரேனும்’ என்பதனை இன்றைய எமது கல்வியியலாளர் மீள நினைக்கவேண்டும்.

தமிழ் மக்களிற்கு தொடர்பாடல் இணைவுகள் திருப்தியாக இன்மையினையும் தமிழ் மக்களிற்கும் சிங்கள மக்களிற்கும் இடையிலான தொடர்பாடல் இணைதல் திருப்தியாக இன்மையினையும் நாவாந்துறையில் நிகழ்ந்த சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றது.

சமூகவியல் நோக்கில் இவ்வாறு பல நிகழ்வுகள் நிகழ்வதே இனமுரண்பாட்டிற்கு அடிப்படையாக அமைந்துள்ளது. இதனை அறிவியல் சாராத புறச்சக்திகளும் அகச்சக்திகளும் விரவடைய முனையும். ஆனால் அறிவியல்சார் அணுகுமுறையினால் இவ்விடைவெளியினை குறைக்க முடியும்.

சிங்கள மக்களிற்கும் தமிழ் மக்களிற்கும் இடையே தொடர்பாடல் இணைவுகள் 9! அதாவது 362880 உண்டு. இவற்றை சரியாக பிரயோகிப்பதால் முரண்பாடுகள் நீங்கி வன்முறைகள் அகலும். மாறாக மனிதநேயத்தினைத் தொலைத்து விட்டு இன நல்லிணக்கத்தினை விலை பேச முடியாது. எமது அகச்சூழலில் இன நல்லிணக்கத்தினை ஏற்படுத்த அரசியல்வாதிகளாயினும்சரி, அரச அதிகாரிகளாயினும் சரி மக்களிடம் தொடர்பு கொள்ளல் வேண்டும். குறிப்பாக நாவாந்துறைச்சம்பவம் தொடர்பாக தமிழ் அரசியல்வாதிகள், தமிழ் நிர்வாக அதிகாரிகள், தமிழ் மதத்தலைவர்கள், சிறந்த தொடர்பாடல் இணைவுகளை சிங்கள மக்களிற்கு ஏற்படுத்தல் அவசியம்.

### அராஜகதந்திரிகளின் இராஜதந்திரத்தோல்வி

அண்மையில் மனித உரிமைகள் அவையில் இலங்கை சார்பாகச் சென்ற பிரதிநிதிகள், 2009 இலங்கைத்தமிழ் படுகொலைகள் பற்றி வாதாடினர்கள். இது போர்குற்றம் தொடர்பான செய்வடுவினை மறைப்பதற்கும் திரிபுபடுத்துவதற்குமான எத்தனமாகும். இதே இராஜதந்திரிகள் தான் சமாதான பேச்சுவார்த்தையிலும் தீவிரமாக பங்கேற்றவர்கள். ஒரு மிருகத்திற்கு தீங்கு செய்தாலும் கவலைப்பட வேண்டிய உலகில், ஒரு நாட்டில் வாழும் சிறுபான்மை பிரஜைகளை அழித்து விட்டு, அதனைப்பற்றி விவாதிப்பது சட்டரீதியற்றது என வாதிடுவார்கள். இன்னும் எவ்வளவு அநியாயங்களைத் தமிழ் மக்களிற்கு புரிவர் என்பதனை உலகம் புரிதல் வேண்டும். இதனைத் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. மாறாக அது போர்க்குற்றச்சாட்டில் இருந்து இலங்கை அரசினை மீட்பதற்காக பேச்சுவார்த்தைக்கு உறுதிமொழியினை இலங்கை அரசிடம் இருந்து பெறாமல் முன் வைத்து உள்ளது.

உதாரணமாக யுத்தத்தில் இறந்தவர்களிற்கு நடைமுறைச் சாத்தியமான நஸ்டவீட்டினை முறையான சர்வதேச விசாரணை மூலம் பெற்றுக்கொடுக்கலாம். அடுத்து சர்வதேச அரசியல் நிபுணர்களின் அனுசரணையில் தீர்வுத்திட்டத்தினை உருவாக்கலாம். இதே தீர்வுத் திட்டம் காஸ்மீர், திபெத் மேற்கு சீன மாகாணம் என்பவற்றிற்கும் பொருத்தமானதாக அமையும்.

அடுத்து அமெரிக்காவின் தென்னாசிய விவகாரத்திற்கான பிரதிநிதி றொபேட் ஒ பிளாக்கின் யாழ்ப்பாண வருகை, இற்றைக்கு 10 வருடங்களிற்கு முன் அதே பதவியினை வகித்த றிச்சாட் ஆமிட்டேஜ் இன் வருகை உடன் ஆராயப்படல் வேண்டும்.

அன்று ஆயுதத்துடன் போராடிய தமிழ் அமைப்பான புலிகளைச் சாடிய அமெரிக்க பிரதிநிதி இன்று ஆயுத்தி துடன் உள்ள தமிழ்க்கட்சியான உகாஈகயினை சாடியது.

டாக்டர். சி. யமுனாநந்தா

# 2ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் நாட்டுக்கு நஷ்டம் ஏற்படுவதைத் தடுக்க சிதம்பரம் முயற்சிக்கவில்லை

## சிதம்பரத்தை நேரடியாகச் சாடுகிறது நிதியமைச்சகம்



**டில்லி:**

2ஜி ஸ்பெக்ட்ரம் விற்பனை விவகாரத்தில் நாட்டுக்கு நஷ்டம் ஏற்படுவதைத் தடுக்க அப்போது நிதியமைச்சராக இருந்த ப.சிதம்பரம் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று நிதியமைச்சகம் நேரடியாகக் குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக நிதியமைச்சகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் இப்போதைய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜியின் ஒப்புதலுடன் பிரதமர் அலுவலகத்துக்கு அனுப்பியுள்ள கடிதம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதன்மூலம் பிரணாப் முகர்ஜி - ப.சிதம்பரம் இடையே இடம் பெற்றுவரும் மோதல் வெளியே தெரியவந்துள்ளது.

2ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில் 2007 ஆம் ஆண்டு நிதியமைச்சராக இருந்த தற்போதைய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்திடம் விசாரணை நடத்தக் கோரி ஜனதா கட்சி தலைவர் சுப்பிரமணிய சாமி வழக்கு தொடர்ந்துள்ளார். அந்த மனு மீது நீதிபதிகள் சிங்வி, கங்குலி ஆகியோர் முன்னிலையில் உச்ச நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தபோது, சிதம்பரத்துக்கு எதிரான ஒரு கடிதத்தை சுப்பிரமணிய சாமி தாக்கல் செய்தார்.


இந்தக் கடிதம் கடந்த மார்ச் 25 ஆம் திகதி நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜியின் அலுவலகத்தில் இருந்து பிரதமர் அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டதாகும். நிதியமைச்சகத்தின் Economic Affairs பிரிவின் துணை இயக்குனர் பதவியில் இருக்கும் ஒரு மூத்த அதிகாரி எழுதிய அந்தக் கடிதம் பிரணாப் முகர்ஜியின் முழு ஒப்புதலுடன் பிரதமருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அந்த 14 பக்க கடிதத்தில், 2ஜி ஸ்பெக்ட்ரம் அலைவரிசையை ஏலம் மூலம் விற்பனை செய்ய நிதியமைச்சக அதிகாரிகள் பரிந்துரைத்தனர். ஆனால், அதை நிராகரித்து விட்டு 2001 ஆம் ஆண்டு விலையிலேயே, முதலில் வந்தவர்களுக்கு முதலில் என்ற முறையில், 2007 ஆம் ஆண்டில் ஸ்பெக்ட்ரத்தை விற்க அப்போதைய தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் ராஜா எடுத்த முடிவுக்கு அப்போது நிதியமைச்சராக இருந்த ப.சிதம்பரம் அனுமதி அளித்துள்ளார்.

ராஜாவைத் தடுத்து, ஸ்பெக்ட்ரத்தை ஏலம் மூலம் மட்டுமே விற்க வேண்டும் என்று சிதம்பரம் வலியுறுத்தி இருந்தால் ஸ்பெக்ட்ரம் ஊழலே நடந்திருக்காது.

ஆனால், அவரைத் தடுக்காததால் கையடக்கத்தொலைபேசி நிறுவனங்களுக்கு ஸ்பெக்ட்ரம் ரூ. 1,600 கோடிக்கு மட்டுமே விற்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டில் விற்பனைக்கான அனுமதி தரப்பட்டாலும், ஸ்பெக்ட்ரத்தை விற்றது 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தான்.

இந்த இடைப்பட்ட காலத்தில், சிதம்பரம் நினைத்திருந்தால்,



இந்த விற்பனையை ரத்து செய்திருக்க முடியும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தை பிரதமருக்கு அனுப்பி வைத்ததன் மூலம், அதில் இடம் பெற்றுள்ள கருத்துக்களை பிரணாப் முகர்ஜி முழுமையாக ஏற்றுக் கொண்டு ள்ளார் என்பதும் தெளிவாகிறது. இதன் மூலம் மத்திய அரசுக்குள் மூத்த அமைச்சர்களான பிரணாப் முகர்ஜி - ப.சிதம்பரம் இடையே நடந்து வரும் மோதலும் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

நிதியமைச்சகம் பிரதமர் அலுவலகத்துக்கு அனுப்பிய இந்தக் கடிதத்தை தகவல் அறியும் மூலம் பெற்று அதை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் சுப்பிரமணிய சாமி. இந்த முக்கியமான கடிதத்தை உச்ச நீதிமன்றமும் ஏற்று பதிவு செய்து கொண்டுள்ளது.

## 'என்னை மன்னித்து விடுங்கள்'

**புனே:**


சமூக ஆர்வலர் அன்னா ஹஸாரேயை கடுமையாக விமர்சனம் செய்ததற்காக, அவரிடம் பகிரங்கமாக மன்னிப்பு கேட்டு காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் மணிஷ் திவாரி கடிதம் எழுதியுள்ளார்.

இதன் நகலை புனேயில் நிருபர்களை சந்தித்த ஹஸாரேயின் வழக்கறிஞர் பவார், நேற்று முன்தினம் வெளியிட்டார்.

அதில் மணிஷ் திவாரி, வயதில் மூத்தவரான அன்னா ஹஸாரேவை விமர்சித்தது தவறு. இதுதொடர்பாக, கடந்த ஆகஸ்ட் 25 ஆம் திகதியே அவரிடம் வருத்தம் தெரிவித்துக் கொண்டேன். என்னை விட வயதில் மூத்தவர்களுக்கு மரியாதை தரும்போது, சுய கௌரவம் மற்றும் தற்பெருமை போன்றவற்றுக்கு நான் முன்னுரிமை தருவதில்லை அவ்வகையில், மீண்டும் ஒருமுறை எனது வருத்தத்தை பதிவு செய்கிறேன். சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொண்டு, இந்த விவகாரத்தை மேலும் இழுத்தடிக்க நான் விரும்பவில்லை. அதேபோல நீங்களும் இத்துடன் முடித்துக் கொள்வீர்கள் என எதிர்பார்க்கிறேன் என்று கூறியுள்ளார்.

## மரண தண்டனைக்கு எதிராக பட்டினிப் போராட்டம்: நெடுமாறன்

**சென்னை**



மரண தண்டனைக்கு எதிராக மகாத்மா காந்தி பிறந்த நாளான ஒக்டோபர் 2 ஆம் திகதி தமிழகம் முழுவதும் பட்டினிப் போராட்டம் நடைபெறும் என்று மூன்று தமிழர்கள் உயிர்க்காப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள மூன்று தமிழர்களின் உயிர்களை காக்க வேண்டும், இந்தியாவில் மரண தண்டனையை அறவே ஒழிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து, காந்தி பிறந்த நாளான ஒக்டோபர் 2 ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை, தமிழ்நாடு முழுவதிலும் அனைத்து நகரங்களிலும் ஊர்களிலும் பட்டினிப் போராட்டம் நடத்த வேண்டும் என மூன்று தமிழர் உயிர்காப்பு இயக்கம் முடிவு செய்துள்ளது.

இந்த இயக்கத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும், தமிழ்த் தேசிய அமைப்புகளும், மனித உரிமை இயக்கங்களும் பங்கு கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

## இரண்டு கட்டமாக உள்ளூராட்சித் தேர்தல் ஒக்டோபர் 17, 19 இல் வாக்குப் பதிவு

**சென்னை:**

தமிழக உள்ளூராட்சி அமைப்புகளுக்கு 2 கட்டமாக தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஒக்டோபர் 17 ஆம் திகதி முதல் கட்ட வாக்குப் பதிவும், 19 ஆம் திகதி 2 ஆவது கட்ட வாக்குப் பதிவும் நடை பெறவுள்ளது.

திருச்சி தவிர மற்ற 9 மாநகராட்சிகளுக்கும் ஒக்டோபர் 17 ஆம் திகதி வாக்குப் பதிவு நடைபெறும். திருச்சிக்குப் பின்னர் தேர்தல் நடத்தப்படும்.

தேர்தல் திகதி குறித்து சமீப நாட்களாக பெரும் எதிர்பார்ப்பு நிலவி வந்தது. தேர்தல் விரைவில் வரப்போகிறது என்பதை அறிவிக்கும் விதமாக அ.தி.மு.க. தரப்பிலிருந்து அலை அலையாக வேட்பாளர் பட்டியல் வெளியாகிக் கொண்டிருந்தது.

இருப்பினும் திருச்சி மாநகராட்சியுடன், திருவெறும்பூர் பேரூராட்சியை இணைத்ததை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்புக்காக தேர்தல் ஆணையம் காத்திருந்தது. நேற்றுமுன்தினம் முற்பகலில் தீர்ப்பு வெளியானதைத் தொடர்ந்து மாலையில் தேர்தல் திகதியை மாநில தேர்தல் ஆணையர் சோ. அய்யர் அறிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறுகையில்,

தமிழ்நாட்டில் உள்ளூராட்சி அமைப்புகளுக்கு ஒக்டோபர் மாதம் 17 ஆம் திகதி மற்றும் 19 ஆம் திகதி ஆகிய நாட்களில் இரு கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது. இதற்கான வேட்புமனு தாக்கல் நேற்று ஆரம்பித்தது.

வேட்புமனுக்களை தாக்கல் செய்வதற்கான இறுதித் திகதி 29 தான்.

வேட்புமனுக்களின் மீதான பரிசீலனை மறுநாள் 30 ஆம் திகதி நடைபெறும். வேட்பு மனுக்களை வாபஸ் பெற ஒக்டோபர் 3 ஆம் திகதி இறுதி நாள்.

முதல் கட்ட வாக்குப்பதிவு ஒக்டோபர் 17 ஆம் திகதியும், இரண்டாவது கட்ட வாக்குப்பதிவு 19 ஆம் திகதியும் நடைபெறும்.

அதன்படி சென்னை, மதுரை, கோவை, நெல்லை, சேலம், தூத்துக்குடி, வேலூர், ஈரோடு, திருப்பூர் ஆகிய 9 மாநகராட்சிகளுக்கும் முதல் கட்ட தேர் தல் இடம்பெறும் 17 ஆம் திகதியன்று வாக்குப்பதிவு நடைபெறும்.

திருச்சி மாநகராட்சிக்கு இப்போது தேர்தல் நடைபெறாது. அதற்கான தேர்தல் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றார்.

## வடக்கு... (தொடர்ச்சி)

மாநாட்டிலேயே அமைச்சர் இந்த விட யங்களை குறிப்பிட்டார்.

அமைச்சர் அங்கு மேலும் கூறியதாவது அண்மையில் வடக்கில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முதற்தடவையாக 30 வீதமான வாக்குக ளை பெற்றது. அதாவது வடக்குத் தேர்தலில் சுதந்திரக் கட்சி தோல்வியடைந் திருக்கலாம். ஆனால் மிகவும் ஜனநாயக ரீதியில் சுதந்திரமான தேர்தலை நடத் தக் கிடைத்தமையே நாங்கள் அடைந்த பாரிய வெற்றியாகும். வடக்கில் நேர் மையான தேர்தலை நடத்தியமை எமக் கு கிடைத்த சிறந்த வெற்றியாகும்.

வடக்கில் ஒருபோதும் சுதந்திரக் கட் சிக்கு பிரதிநிதிகளே இருக்கவில்லை. ஒரு காலத்தில் அல்பிரட் துரையப்பா சுதந்திரக் கட்சியின் பிரதிநிதியாக இருந் தார். ஆனால் அவர் சமஷ்டிக் கட்சியிலி ருந்து தெரிவு செய்யப்பட்டு பின்னர் சுதந்திரக் கட்சிக்கு வந்தவர். அந்த வகையில் நாங்கள் இம்முறை அங்கு பிரதிநிதிகளை பெற்றுக்கொண்டுள் ளோம். மேலும் வடக்கில் 60 வருடங் களாக அரசியல் செய்யும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் 60 நாட்கள் தேர்தல் செய்து எம்மால் வெற்றிபெற முடியாது. ஆனால் நாங்கள் வரலாற்றில் இம்முறை வடக்கில் அதிகளவான வாக்குகளை பெற்றுக்கொண்டோம். அதாவது ஐக்கி ய தேசிய கட்சியைவிட அதிகமான வாக்குகளை நாங்கள் பெற்றுக்கொண் டுள்ளோம். இது மிகப்பெரிய வெற்றியா கும்.

## குடாநாட்டில்...(தொடர்ச்சி)

என்பவரே வெட்டிக் கொலை செய் யப்பட்டவராவார். இவரின் மனைவியும் பிள்ளையும் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள னர். இக்கொலைக்கு குடும்பப் பகையே காரணம் எனக் கூறப்படுகிறது.

யாழ். கொக்குவில் கிழக்குப் பகுதி யில் மூவர் அடங்கிய கொள்ளையர்கள் முகத்தை மூடிக் கட்டிய வண்ணம் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் வைத்தியர் ஒருவரின் வீட்டினுள் புகைக் கூண்டின் ஊடாக உள் நுழைந்து மின் விளக்குகளை ஒளிரவிட்டு வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த வைத்தியர் அவ ரின் மனைவி இருவரையும் எழுப்பி அணிந்திருந்த சங்கிலி, காப்பு, நகை களை கொள்ளையிட முயன்ற போது அவர்கள் கத்தி கூச்சலிடவே வாள், கத் தி, பொல்லுகளால் வீட்டில் இருந்த ஏனைய 4 பேரையும் தாக்கிக் காயப்ப டுத்திவிட்டு அங்கிருந்த மூன்று கைய டக்கத் தொலைபேசிகளையும் எடுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இச் சம்பவத்தில் யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்திய சேவை யாற்றும் வைதியர்களான க. சிவகோ ணேஸ் (வயது 44), மனைவி சி. தா ரணி (வயது 42) இவரது தாய், தந்தை யான கனகலிங்கம் (வயது 71), க. புஷ் பவதி (வயது 71) ஆகிய நான்கு பேரும் காயமடைந்து யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இதேவேளை கொள்ளையர்கள் இவர் களைத் தாக்கிவிட்டு தப்பிச்சென்று அப் பகுதியில் 100 மீற்றர் தூரத்தில் கருவப் புலம் வீதியில் இலங்கை வங்கியில் கட மையாற்றும் ஊழியர் வீட்டுக்குச் சென்று ஜன்னல் கம்பிகளை வளைத்து வீட்டுக் கதவுகளை உடைத்து நகை களை கொள்ளையிட்டபோது திருடிக் கொண்டு வந்த கையடக்கத் தொலை பேசி செயற்பட்ட சத்தத்திற்கு வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தவர்கள் விழித்த போது வீட்டுக்குள் கொள்ளையர்கள் நிற்பதைக் கண்டு சத்தமிட்டுள்ளனர். இதனையடுத்து கொள்ளையர்கள் அங் கிருந்த வங்கியாளர் அவரது மனைவி ஆகியோரை வாளால் வெட்டி நகைகளு டன் தப்பிச் சென்றுள்ளனர்.

இச் சம்பவத்தில் சபாரட்ணம் செல்வ ராஜா (வயது 56), ச. சர்வலோசினி (வ யது 43) ஆகிய இருவரும் காயமடைந்த னர். இவர்களில் ச. செல்வராஜா வயிற் றில் வெட்டுக் காயம் ஏற்பட்டதால் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட் டுள்ளார்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர் பாக வைத்தியர் கோப்பாய் பொலிஸா ருக்கு தொலைபேசி மூலம் அறிவித்தல் கொடுத்ததையடுத்து சம்பவ இடத் திற்கு அரைமணித்தியாலத்திற்குள் வந்து விசாரணை மேற்கொண்டு கைவிரல் அடையாளம் மற்றும் தடயங் களைப் பெற்று விசாரணை மேற் கொண்டுள்ளனர்.

இதேவேளை கொக்குவில் பகுதியில் இரவு வேளை வழமைக்குமாறாக இரா ணுவ நடமாட்டமும் நாய்கள் குரைக்கும் சத்தம் தொடர்ச்சியாகக் கேட்ட வண் ணம் இருந்ததாக அப்பகுதி மக்கள் தெரி வித்தார்கள்.

இச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் குற்றத்தடுப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர் ஏ.எம்.பி.ஏ சரத் அறம்பொல தலைமை யிலான பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை புதன்கிழமை மாலை 7.30 மணியளவில் இருபாலை - வசந்த புரம் பகுதியில் 3 மர்ம நபர்கள் வித்தியா சமான முறையில் நடமாடியதைக் கண்ட அப்பகுதி மக்கள் அவர்களை துரத்த முற்பட்டபோது மர்ம நபர்கள் அங்கிருந்த குடும்பஸ்தர் ஒருவரை பிடித்து கூரிய ஆயுதத்தால் தாக்கி யுள்ளார்கள். காயமடைந்த குடும்பஸ்தர் கூச்சலிடவே 3 மர்ம மனிதர்களும் தப் பிச் சென்றுள்ளார்கள்.

இச் சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த பாஸ்கரன் கஜந்தன் (26) என்ற 3 பிள்ளைகளின் தந்தை காயமடைந் துள்ளார்.

இச் சம்பவம் நடைபெற்ற சிறிது நேரத்தில் அங்கு பொலிஸ், இராணுவத் தினர் குவிந்ததாகவும் காயமடைந்த நபரை பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்ல முற்பட்டனர். எனி னும் உறவினர்கள் தனியே கூட்டிச் செல்ல அனுமதிக்க முடியாதென உறவி னர்களுடன் சென்ற காயமடைந்தவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துவிட்டு சென்றுள்ளார்.

இதேவேளை ஊர்காவற்றுறை காளி கோயிலடியில் அந்தணர் ஒருவர் தூக் கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட் கப்பட்டுள்ளார். இராஜசேகர சர்மா (32 வயது ) என்பவரே சடலமாக மீட்கப்பட் டவர் ஆவார்.

இவர் தற்கொலை செய்தாரா அல்லது கொலைசெய்யப்பட்ட பின் தூக்கில் தொங்க விடப்பட்டாரா என்பது குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

ஸ்தலத்திற்குச் சென்ற நீதிவான் ஜோய் மகாதேவா சடலத்தைப் பார்வை யிட்டதுடன் விசாரணைகளை மேற் கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு உத்தர விட்டதுடன் சடலப் பரிசோதனையின் பின் உறவினர்களிடம் சடலத்தை ஒப்ப டைக்குமாறும் உத்தரவிட்டார்.

## வாகனங்...(தொடர்ச்சி)

மீறுவோருக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அபராதமும் விதிக் கப்படும் என்றும் அவர் சொன்னார்.

குறித்த நடவடிக்கையின் அடிப்படை யில் முதல் தடவை இக் குற்றத்தை புரி வோருக்கு 1000 ரூபாய்க்கு குறையாத 2000 ரூபாய்க்கு அதிகரிக்காத தண்டப் பணமும் இரண்டாவது தடவை குற்றம் புரிவோருக்கு 2000 ரூபாய்க்கு குறையாத 3000 ரூபாய்க்கு அதிகரிக்காத தண்டப் பண மும் மூன்றாவது தடவை குற்றம் புரிவோ ருக்கு எதிராக 3500 ரூபாய் தண்டப் பணமும் அறவிடப்படும்.

மூன்றாவது தடவை குறித்த குற்றத்தை புரிபவர்களின் வாகன அனுமதிப்பத்தி ரத்தை இரத்துச் செய்யவும் முடியும். அதே போன்று இடை நிறுத்தி வைக்கவும் முடி யும். கடந்த காலங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் பலர் இறந்தமைக்கான காரணம் ஆசனப்பட்டி அணியாமையி னால் இடம்பெற்றதாக கண்டறியப்பட் டுள்ளது.

இந்த புதிய போக்குவரத்து விதிமுறையி னை கண்காணிப்பதற்கென பொலிஸார் ரோந்து பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தாகவும் அவர் தெரிவித்தார்.

## தருஷ்மன்...(தொடர்ச்சி)

ஒருவேளை தருஷ்மன் அறிக்கையை ஆராய்வதற்கான யோசனை மனித உரி மைப் பேரவைக்கு வந்தாலும் அதனை எதிர்கொள்ள நாங்கள் தயாராகவே இருக் கின்றோம் என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

ஜெனிவா மனித உரிமைப் பேரவை யில் பங்குபற்றிய இலங்கை தூதுக்குழு வில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இடம்பெற்றிருந்தார்.

இந்நிலையில், அமைச்சர் செய்தியாளர் மாநாட்டில் மேலும் கூறியதாவது

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரி மைப் பேரவையின் கூட்டத் தொடர் எதிர் வரும் 30 ஆம் திகதிவரை ஜெனிவாவில் நடைபெறவுள்ளது. அமைச்சர் மகிந்த சம ரசிங்க தலைமையிலான தூதுக்குழுவினர் இந்த கூட்டத் தொடரில் கலந்துகொண்டு திரும்பியிருந்தோம். இதேவேளை, ஐ.நா. மனித உரிமை பேரவையின் ஆணையாளர் நாயகம் நவநீதம் பிள்ளை தனது உரை யில் இலங்கையில் அவசரகால சட்டத் தின் சில விதிகள் நீக்கப்பட்டுள்ளதாக தெரிவித்திருந்தார். இதற்கு நாங்கள் எதி ர்ப்பு தெரிவித்ததுடன் நவநீதம் பிள் ளையை சந்தித்து பேச்சு நடத்தினோம். இதன்போது இலங்கையில் அவசரகால சட்டம் முழுமையாக நீக்கப்பட்டுள்ளதாக வும் பயங்கரவாத தடைச் சட்டம் என்பது நாட்டில் நீண்டகாலம் காணப்படுவதாக வும் இரண்டு விடயங்களையும் குழப் பிக்கொள்ளவேண்டாம் என்றும் நவநீதம் பிள்ளையிடம் கோரிக்கை விடுத்தோம். பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு சம னான சட்டங்கள் அமெரிக்காவிலும் கா ணப்படுவதாகவும் நாங்கள் சுட்டிக்காட்டி னோம்.

மேலும் இலங்கை சிறிய நாடு என்ப தால் இலங்கைக்கு அநீதி ஏற்படும் வகை யில் செயற்படவேண்டாம் என்றும் ஏனைய நாடுகளைப் போன்று இலங்கை யையும் சமமாக பார்க்கும்படியும் கோ ரிக்கை விடுத்தோம். 400 வருடங்கள் வர லாற்றைக் கொண்ட நாடுகளை விட இலங்கையானது 2500 வருடங்கள் வர லாற்றைக்கொண்ட தனித்துவமிக்க நாடு என்று அவருக்கு விளக்கினோம்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபை யின் தருஷ்மன் அறிக்கையானது தற் போது ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவைக்கு அனுப்பப்பட் டுள்ளது. அந்த அறிக்கையை பேரவைக்கு அனுப்பிவைத்துள்ள பான் கீ மூன் அது தொடர்பான கடிதத்தில் இந்த அறிக் கையை பேரவையில் விவாதிப்பதற்காக அல்ல, மாறாக கவனத்திற்கொள்ளவே அனுப்பப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

அந்த வகையில் தருஷ்மன் அறிக்கை யை ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் ஆராய முடியாது என்பதனை நாங்கள் வலியுறுத்தினோம். அதாவது இந்த அறிக் கைக்கு எந்தவொரு நாடும் அங்கீகாரம் வழங்கவில்லை என்றும் இது பான் கீ. மூ னுக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக தயா ரிக்கப்பட்ட அறிக்கை என்றும் வலியுறுத் திக் கூறினோம்.

எனினும் மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஐக்கிய நாடுகளின் தருஷ்மன் அறிக்கையை பேரவையில் விவாதத்துக்கு உட்படுத்துவதற்கு சர்வ தேச மனித உரிமை காப்பகமும் சர்வதேச மன்னிப்புச் சபையும் பாரிய முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றன.

அந்த முயற்சியை முறியடிக்கும் வகை யில் பல வழிகளிலும் அரசாங்கம் செயற் பட்டுவருகின்றது. எமது அமைச்சர்கள் பல்வேறு நாடுகளுக்கும் விஜயம் மேற் கொண்டு தருஷ்மன் அறிக்கையை மனித உரிமை பேரவையில் விவாதிக்க முடியாது என்பனையும் அதற்கு ஆதரவு வழங்க வேண்டாம் என்றும் கோரிக்கை விடுத்துள் ளதுடன் தெளிவுபடுத்தல்களை மேற் கொண்டுவருகின்றனர்.

ஒருவேளை தருஷ்மன் அறிக்கையை ஆராய்வதற்கான யோசனை மனித உரி மைப் பேரவைக்கு வந்தாலும் அதனை எதிர்கொள்ள நாங்கள் தயாராகவே இருக் கின்றோம்.

அதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. அதா வது எமக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் சில சக்திகள் செயற்பட்டுவருகின்றன. ஆனால் அவற்றை முறியடிக்கும் வகை யில் நாங்கள் எமது தரப்பு நடவடிக்க கைகள் முன்னெடுத்துவருகின்றோம்.

# அல்- குவைதா அமைப்பு பிரித்தானியாவிற்கு எதிராக தாக்குதல்களை நடாத்த திட்டம்

அல்-குவைதா தலைமைப்பீடம் பிரித்தானியாவிற்கு எதிரான தாக்குதல்களை நடத்த தொடர்ந்தும் திட்டமிட்டுவருவதாக உள்துறை செயலாளர் தெரேசா மே தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் வெளிநாட்டு உறவுகளுக்கான நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பயங்கரவாதம் தற்போது புதிய பரிமாணம் எடுத்துள்ளதாகவும், இணையம் உட்பட நவீன தொடர்பாடல் தொழில்நுட்பங்கள் பயங்கரவாதிகளுக்கு அனுகூலமாக அமைவதாகவும் தெரேசா மே குறிப்பிட்டுள்ளார்.

கடந்த பத்து வருடங்களில் அல்-குவைதா அமைப்பு பல இழப்புக்களை சந்தித்துள்ளபோதிலும், அதன் அச்சுறுத்தல்கள் தொடர்ந்தும் உள்ளன என்ற யதார்த்தத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.இதேவேளை, பிரித்தானியாவிற்கு எதிரான தாக்குதல்களை நடாத்த அல்- குவைதா தொடர்ந்தும் திட்டமிட்டு வருகிறது, இதற்கென ஆட்களை அவ் இயக்கம் திரட்டி வருகிறது என தெரேசா மேலும் கூறியுள்ளார்.



பெரு நாட்டில் மூன்று வயது சிறுவன் கைகள் அற்ற நிலையில் தனது கால்களால் எழுதுவதையும் வரைவதையும் படத்தில் காணலாம். மேற்படி சிறுவன் பிறக்கும் போதே கைகள் அற்ற நிலையிலேயே பிறந்துள்ளான்.


CF

சென்ட்ரல் பினான்சின்

மாபெரும்

வாகன சந்தை



செப்டெம்பர் 23, 24 மற்றும் 25ம் திகதிகளில்

யாழ்ப்பாணம்

நகர சபை மைதானத்தில்
(சுப்பிரமணியம் சிறுவர் பூங்கா எதிரில்)
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

அனுமதி இலவசம்

மக்ஸிமோ ட்ரக் முதல் கொடுப்பனவு ரூ. 99,000/-* காப்புறுதி இலவசம்

டாடா நனோ முதல் கொடுப்பனவு ரூ. 99,000/-*

டிமோ பட்டா முதல் கொடுப்பனவு ரூ. 99,000/-* காப்புறுதி இலவசம்

மைக்றோ பண்டா முதல் கொடுப்பனவு ரூ. 150,000/-*

திரீ வீலர் குத்தகை உங்களுக்குப் பொருந்தும் வகையில் குறைந்தளவில் முதல் கொடுப்பனவும் தவணைக் கொடுப்பனவுகளும்

- ஜப்பான், இந்தியா மற்றும் சீன உற்பத்திகளான பதிவு செய்யப்பட்டதும் பதிவு செய்யப்படாததுமான மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டி, கார்கள், வேன்கள், ட்ரக், ட்ரக்டர்கள், லொறி உட்பட அனைத்துவிதமான வாகனங்களுக்கு லீசிங் வசதி செய்து கொள்ளவும் வாகனங்களை விலைக்குப் பெற்றுக்கொள்ளவும் வாருங்கள்.
- இந்த நாட்டிற்கு வாகனங்களை இறக்குமதி செய்து விநியோகிக்கின்ற அனைத்து முக்கிய விற்பனை பிரதிநிதித்துவ நிறுவனங்களின் பங்களிப்பு.
- குறைந்த பட்ச மாதாந்த தவணையில் கொடுப்பனவு வசதி.
- துரித ஒருநாள் சேவையின் முலமாக அன்றைய தினத்திலேயே வாகனத்தை எடுத்துச் செல்லக்கூடிய சந்தர்ப்பம்.
- முச்சக்கரவண்டி, மக்ஸிமோ ட்ரக், டாடா நனோ, மைக்றோ பண்டா, மற்றும் டிமோ பட்டாவுக்கு விசேட குத்தகை வசதி.

1988ன் 78ம் இலக்க நிதி நிறுவன சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியில் நிதிச்சபையின் மூலமாக பதிவு செய்யப்பட்டுள்ளது

CF சென்ட்ரல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி

இல. 364, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021 222 1608 / 021 222 1942

சுஜீவ் 0779 266382 ஹிமால் 0774 115601

Sri Lanka Insurance Corporation Ltd
உத்தியோகபூர்வ காப்புறுதி பங்காளர்: இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது ஃபிட்ச் ரேட்டிங்ஸ் A+ (lka)


# லிபியாவில் 10 நாட்களில் புதிய அரசு அமைக்கப்படும்

## இடைக்கால பிரதமர் அறிவிப்பு

லிபியாவில், இன்னும் 10 நாட்களில் புதிய அரசு அமைக்கப்படும் என அந்நாட்டின் இடைக்கால பிரதமர் அறிவித்துள்ளார். இந்நிலையில், கடாபி ஆதரவாளர்கள் வசம் இருந்த சபா நகரின் பெரும்பகுதி எதிர்ப்பாளர்கள் வசம் வந்து விட்டது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடக்கும் ஐ.நா., பொதுச் சபைக் கூட்டத்தில் நேற்று முன்தினம் 66 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்ட போது லிபியாவின் எதிர்காலம் குறித்து விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் பேசிய லிபியா இடைக்கால அரசின் பிரதமர் மகமது ஜிப்ரீல்,'எத்தனை அமைச்சகங்கள், டிரிபோலி மற்றும் பெங்காசியில் எந்தெந்த அமைச்சகங்கள் அமைக்கப்பட வேண்டும் என்பது பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை. எனினும், இன்னும் 10 நாட்களில் புதிய அரசு அமைக்கப்படும்' என அறிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, லிபியா இடைக்கால கவுன்சில் தலைவர் முஸ்தபா ஜலீல் தலைமையிலான லிபியா பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினார்.

டிரிபோலியில் மீண்டும் அமெரிக்க தூதரகம் திறக்கப்படும் என அவர் உறுதியளித்தார். லிபியாவின் முன்னேற்றத்திற்கு, ஐ.நா., மற்றும் சர்வதேச சமூகத்துடன் இணைந்து, அமெரிக்காவும் உதவும் எனவும் அவர் கூறினார்.

# உலகிலேயே மிகச் சிறிய மீன்தொட்டி

பெருவிரலின் முன்பகுதி அளவான மிகச் சிறிய மீன் தொட்டியொன்றை ரஷ்ய சைபீரிய பிராந்தியத்தைச் சேர்ந்த கலைஞரான அன்டோலி கொனென்கோ உருவாக்கியுள்ளார்.

30 மில்லி மீற்றர் நீளமும் 24 மில்லி மீற்றர் அகலமும் 14 மில்லி மீற்றர் உயரமுடைய இந்த நுண்ணிய மீன் தொட்டியானது உலகிலேயே மிகச் சிறிய மீன் தொட்டி என்ற பெருமையை பெறுகிறது.

இரு தேக்கரண்டி அளவான நீரைக்கொண்ட இந்த மீன் தொட்டில் சிறியரக ஸெப்ரா டானியோ மீன்கள் பலவற்றை கொண்டுள்ளது.

அன்டோலி கொனென்கோ ஏற்கனவே நுண்ணிய பொருட்களை உருவாக்கியதன் மூலம் பிரசித்தி பெற்றுள்ளார். அவர் இதற்குமுன் கேசம், தானியம், தாவர மகரந்தங்கள் என்பனவற்றைப் பயன்படுத்தி நுண்ணிய கலைப் படைப்புகளை உருவாக்கியுள்ளார்.




# அறிவொளி பரப்பி நிற்கும் யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்

யாழ்.நகரின் வட பகுதியில் வண்ணார்பண்ணையில் வண்ணை வெங்கடேசப் பெருமாள் கோவிலுக்கு முன்பாக அறிவொளி பரப்பி நிற்கும் கல்விக்கூடமே யா/சன்மார்க்க மகா வித்தியாலயமாகும்.

இவ்வித்தியாலயம் யாழ்ப்பாண கல்வி வலயத்திற்குட்பட்ட 1 சீ பாடசாலையாகும். இப்பாடசாலையானது 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் சுப்பர் பள்ளிக்கூடம் என்னும் திண்ணைப் பாடசாலையாக இயங்கி வந்ததாக அறியப்படுகின்றது.

சைவத்தமிழர்களின் கல்வியை வளர்க்கும் நோக்கில் இந்து தமிழ் மக்களில் ஒப்பற்றவர் எனப் போற்றப்படும் இந்துபோர்ட் ஏழூர் இராசரத்தினம் அவர்களதும் இந்து சமயக் கல்வியாளர்களதும் அரும் பெரும் முயற்சியின் பயனான வண்ணார் பண்ணை பிள்ளையார் கோவிலுக்கு தென்புறமாக இயங்கிவந்த சுப்பர் பள்ளிக்கூடமும் வடக்கே அமைந்த ஆங்கில மெதடிஸ்த மிஷன் பாடசாலையும் 1927 ஆம் ஆண்டு ஒன்றிணைந்து யா/ சேனியதெரு சன்மார்க்கதுவிபாஷா பாடசாலை என பெயர் பெற்று ஒரு முறை சார்ந்த பாடசாலையாக இயங்கத் தொடங்கியது.

இப் பாடசாலையானது சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பொறுப்பில் இயங்கிவந்துள்ளது. 1941 இல் யா/சேனிய தெரு சன்மார்க்க போதனா ஆங்கில பாடசாலையாகப் பெயர்மாற்றம் பெற்றுள்ளது. 1960ஆம் ஆண்டு பாடசாலையினை அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டதுடன் 1973 இல் யா/ சன்மார்க்க மகாவித்தியாலயம் என பெயர் மாற்றம் பெற்றதுடன் 1 சீ பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

ஆரம்பகாலத் தகவல்களை முழுமையாகப் பெறமுடியாத போதிலும் 1947க்குப் பின் உள்ள தகவல்கள் மற்றும் வரலாறுகளினை அறிய முடிகின்றது.

இப் பாடசாலையின் ஆரம்ப கால அதிபர் என்னும் பெருமையினை மட்டுவிலைச் சேர்ந்த வே. நடராசா பெறுகின்றார். 1947ல் அதிபராக சு. விஜயரத்தினம் கடமையாற்றியுள்ளார். அவரைத் தொடர்ந்து மு. பாஸ்கரதேவன், க. மகேசன் சு.நடேசபிள்ளை, க.தங்கராசா, து.நடராஜலிங்கம், எஸ். மாணிக்கராசா ஆகியோர் அதிபர்களாகக் கடமையாற்றியுள்ளார்கள். தற்போது அதிபராக உள்ள திருமதி எம். விமலநாதன் 2009 முதல் கடமையாற்றி வருகின்றார்.

> தற்போது தரம் ஒன்று முதல் பதின் மூன்று வரையும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. க.பொ.த. உயர்தரத்தில் கலை மற்றும் வர்த்தகப்பிரிவுகளுக்கே வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இங்கு 214 மாணவர்கள் கல்வி கற்க 22 ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றார்கள்.




இவ்வித்தியாலயமானது ஒவ்வொரு அதிபர்களின் காலத்திலும் மாணவர்களின் கல்வித்தரத்தில் வளர்ச்சி கண்டதுடன் மற்றும் பௌதீக வளங்கள் அதிகரித்து வந்துள்ளமையினைக் குறிப்பிட முடியும்.

தற்போது தரம் ஒன்று முதல் பதின் மூன்று வரையும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. க.பொ.த. உயர்தரத்தில் கலை மற்றும் வர்த்தகப்பிரிவுகளுக்கே வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இங்கு 214 மாணவர்கள் கல்வி கற்க 22 ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இப்பாடசாலை மாணவர்களின் திறமையினை வெளிக்கொண்டுவருவதற்கு களம் அமைப்பதற்கு ஏதுவாக தமிழ் மன்றம், இந்துமாமன்றம், மாணவர் மன்றங்கள், ஆங்கிலமன்றம், உயர்தர மாணவர் மன்றம் மற்றும் சுகாதார மன்றம் என்பன இயங்கிவருகின்றன.

இத்துடன் வருடாந்தம் முத்தமிழ்விழா, இல்லமெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி மற்றும் நவராத்திரி விழா என்பனவும் நடத்தப்பட்டு வருகின்றமையினையும் குறிப்பிடமுடியும்.

இவ்வித்தியாலய மாணவர்கள் கற்றல் மற்றும் இணை பாடவிதான செயற்பாடுகளில் சிறந்த ஈடுபாட்டினைக் கொண்டுள்ளார்கள்.

2010 ஆம் ஆண்டு க. பொ.த சாதாரண தரப் பரீட்சையில் ஏழு மாணவர்கள் சித்தியடைந்துள்ளதுடன் அபிதா ஜெகதீசன் என்ற மாணவி 4A B 2C S என்ற பெறுபேற்றினைப் பெற்றுள்ளார். அத்துடன் இதே வருடம் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் நான்கு மாணவிகள் சித்தியடையந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

2011 ஆம் ஆண்டு வலயமட்ட தமிழ்த்தினப் போட்டியில் திறந்த பிரிவு நாட்டார் பாடல் குழு இரண்டாமிடத்தினைப் பெற்றுள்ளது. கோட்டமட்ட 21 வயதிற்குட்பட்ட 1500 மீற்றர் ஓட்டப்போட்டியில் செல்வி.எஸ்.உஷாந்தினி முதலாமிடத்தினைப் பெற்றுள்ளார்.

இப்பாடசாலைக்குரிய தேவைகள் கடந்த காலங்களில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் மூலம் கிடைக்கப்பெற்றுள்ளது. 2003 ஆம் ஆண்டு ஐ.ஐ.எஸ் இயக்குநர் கி. விக்னேஸ் என்பவர் கணனிகளை வழங்கியுள்ளார். அத்துடன் 2009இல் கல்வி அமைச்சினால் கணனிக்கூடத்திற்குரிய கணனிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வருடம் வடமாகாண கல்வித்திணைக்களத்தின் கல்வி வலயத்தினால் கட்டிடத் திருத்தம் மேற்கொள்வதற்காக இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதுடன் 2010 ஆம் ஆண்டு பாடசாலைக்கு மேற்கத்தேய வாத்தியக்கருவிகளை பி.சி. பரடேஸ் உரிமையாளர் கு.றமேஸ் வழங்கியுள்ளார். 2011 ஆம் ஆண்டில் பான்ட் வாத்திய குழு உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்வித்தியாலயத்தில் மிகவும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி கற்றுவருவதனால் இங்கு மேலும் பல வசதிகள் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளன. இப்பாடசாலையில் இட வசதிகள் குறைவாகக் காணப்படுகின்றது. இணைப்பாடவிதான செயற்பாடுகளினை மேற்கொள்வதற்கு கட்டிட வசதிகள் இல்லாத நிலை காணப்படுகிறது. மாணவர்கள் கற்றல் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடியதாக கட்டிடவசதிகள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

இவ்வித்தியாலயத்திற்கு என விளையாட்டு மைதானம் இல்லை. வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி வண்ணார்பண்ணை வரதராஜப் பெருமாள் கோவில் வீதியிலேயே நடாத்தப்பட்டு வருகின்றது. மாணவர்களின் விளையாட்டுத்திறமைகளினை வெளிக்கொண்டுவருவதற்கும் விளையாட்டு பயிற்சியினை மேற்கொள்வதற்கும் ஏற்றவாறு விளையாட்டு மைதானம் தேவையாக உள்ளது.

நவீன கற்பித்தல்முறைக்கு ஏற்ப கற்பிப்பதற்கு வசதியாக பல்லூடக எறியி ஒன்றின் தேவையும் காணப்படுகின்றது.

இப்பாடசாலையின் தேவைகள் நிவர்த்தி செய்யப்படும்போது மாணவர்களின் பெறுபேறுகளினை மேலும் அதிகரித்தும் கொள்ள முடியும்.

● ஞா.செந்தமிழ் செல்வன்

# மாணவர் மலர்

# அகத்தின் அழகே நிலையான அழகு



ஒரு வியாபரிக்கு ஐந்து பிள்ளைகள். ஐவரும் பெண்பிள்ளைகள். வியாபாரியும் நன்கு சம்பாதிப்பவர். ஆகையால் தன் பிள்ளைகளுக்கு எந்தக்குறையும் இல்லாமல் வளர்த்து வந்தார்.

அவர்கள் விரும்பிக் கேட்பதைத் தட்டாமல் வாங்கிக் கொடுப்பார். சகோதரிகளில் இளையவள் மட்டும் சற்று நிறம் மங்கி கறுப்பாக அழகில்லாதவள் போல் தோன்றுவாள். மற்ற மூத்த சகோதரிகள் நல்ல சிவப்புடன் அழகாக இருப்பர்.

இது இவர்களுக்கு மனதில் கர்வத்தை வளர்த்து. இவர்கள் எப்போதும் தங்களை சிங்காரித்துக் கொண்டு கண்ணாடி முன் நிற்பதே வழக்கமாகிவிட்டது. தப்பி தவறி தன்னை அழகுபடுத்திக்கொள்ள இளையவள் கண்ணாடி முன் நின்றுவிட்டால் மூத்த சகோதரிகள் ரசனை இல்லாத வார்த்தைகளால் விமர்சனம் செய்ய ஆரம்பித்து விடுவார்கள்.

இதனால் இளையவள் தனக்குள் அழுது வேதனைப்படுவாள். இளையவள் மூத்தவர்களைக் காட்டிலும் இரக்க சிந்தனையும் உதவும் மனப்பான்மையும் கொண்டவள். மூத்த பெண்களின் குணம் இளையவளுக்கு நேர் எதிரானது. தங்கள் அழகில் கர்வம் கொண்டு எவரையும் மதிக்காமல் நடந்தனர். எனவே மற்றவர்களிடமும் அவர்களுக்கு நல்ல பெயரே இல்லை.

ஏழைக்கு அன்பு காட்டும் இளையவளை தர்ம தேவதை என்று தான் போற்றி அழைத்தனர் மக்கள். இவ்வளவு ஈகைக் குணம் சிறந்த பண்புகள் இருந்தும் தனக்கு அழகு போதவில்லையே... அதனால் தானே சகோதரிகள் தம்மை வெறுக்கின்றனர் என நினைத்து வேதனைப்படுவாள்.

இளையவளின் வேதனையைப் பெற்றோர் நன்குபுரிந்துகொண்டனர்.

ஒருநாள் இளையவளை அழைத்து 'நிலா இப்படி உட்கார்!' என்றனர்.

அவளும் பெற்றோரிடம் ஆசையுடன் அமர்ந்தாள் ''உன் மூத்த சகோதரிகள் உன்னை மதிக்கவில்லை என்பது எங்களுக்கு தெரியும்; அதற்காக கவலைப்படாதே. புற அழகைக் காட்டிலும் உன் மன அழகுதான் மிகவும் அற்புதமானது.

''அதுதான் அனைவரையும் கவரும் காந்தம் போன்றது. எக்காலமும் உன் அழகுதான் வளரும் நிரந்தரமாயும் இருக்கும். இவர்களின் வெளித்தோற்ற அழகு காலப்போக்கில் மாறிவிடும்.அதை உணர்ந்து கொள் போதும்!'' என ஆறுதல் கூறினர். பெற்றோரின் அன்பு உபதேசம் கேட்ட நிலா மன நிம்மதி அடைந்தாள்.

## அம்மா



காலைத்தூக்கி கண்ணில் ஒற்றி
கட்டி கொஞ்சும் அம்மா
பாலைக் காய்ச்சி சீனி போட்டு
பருகத் தந்த அம்மா
புழுதி துடைத்து நீரும் ஆட்டி
பொட்டும் வைக்கும் அம்மா
பள்ளிக்கூடம் விடும் நேரம் பாதி வழிக்கு
வந்து துள்ளி குதிக்கும் என்னை
தூக்கி தோழில் போடும் அம்மா

த.சரண்யா
தரம் - 6 A
யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரி

## கண்டுபிடியுங்கள்


படத்தில் மறைந்துள்ள எட்டு பொருட்களைக் கண்டுபிடியுங்கள் பிள்ளைகளே



## நான் பார்த்த கிண்ணியாப் பாலம்

கிண்ணியாப் பாலம் மிகவும் நீளமாகவும் அகலமானதாகவும் இருக்கும். அந்தப் பாலம் நீர்மட்டத்திலிருந்து 80 அடி உயரத்தைக் கொண்டது. இந்தப்பாலம் இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு ஏழாம் மாதம் திறக்கப்பட்டது. எமது நாட்டின் ஜனாதிபதியாகிய மஹிந்த ராஜபக்ஷ அதனைத் திறந்து வைத்தார். இப்பாலம் இலங்கையின் மிக நீளமான பாலமாக தற்போது உள்ளது. இப்பாலத்தை நாட்டின் பல பகுதியிகளிருந்தும் சுற்றுலாப் பயணிகள் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

த. இலக்கியன்
தரம்-5D
சென்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்



த.இலக்கியன்
தரம் 5 D
சென்ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

சிறுவர்களே! உங்களது ஆக்கங்களை எமக்கு அனுப்புங்கள்
அனுப்பவேண்டிய முகவரி
'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக் காரியாலயம்,
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.



## பேராசிரியர் என்.சண்முகலிங்கனின்
# ‘ஆத்மா’ இறுவட்டு வெளியீடு

பேராசிரியர் ந. சண்முகலிங்கன் பாடியுள்ள பக்தி இசைப் பாடல்கள் அடங்கிய ‘ஆத்மா’ என்னும் பக்தி இசை இறுவட்டு வெளியீட்டு விழா கடந்த 18 ஆம் திகதி யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

நகுலேஸ்வரி பண்பாட்டு மேம்பாட்டு நிறுவனத்தின் மூன்றாவது படைப்பாக வெளிவந்துள்ள இவ் இசை இறுவட்டில் ஔவையாரின் ‘விநாயகர் அகவல்’ , மணிவாசகரின் ‘சிவபுராணம்’, முத்தையனின் ‘அம்பிகை அகவல்’,அருணகிரிநாதரின் ‘சேந்தனைக் கந்தன்’ ,சிவயோகசுவாமிகளின் ‘நல்லூரான் திருவடியை...’ என்னையெனக்கறிவித்தவன் என் சண்முகலிங்கனின் அம்மா என்று....’என்னும் பாடல்கள் புதுப் பொலிவுடன் பாடப்பட்டுள்ளன. உளசமூக வல்லமைக்கான இசைத்தமிழ் ஆரம் என்னும் அறிமுக உரையுடன் ஆரம்பிக்கும் இப்பாடல்களுக்கு அற்புதன் மிக அற்புதமாக இசையமைத்துள்ளார். பாடல்களோடு ஒன்றித்துச் செல்லும் வயலின் இசையை எஸ். கோபிதாஸும் அ. ஜெயராமனும் வழங்கியுள்ளனர். மிருதங்க இசையை சுதா வேல்மாறன் வழங்கியுள்ளார். இதற்கான ஒலிப்பதிவினை ஸ்ரீ மயூரன் மற்றும் சத்தியன் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

## ஒளிக் கீற்றுகள்
தொகுப்பு: அஸ்வின்

# குறும்படத் தேடல் ஆய்வு வட்டம்

யாழ்ப்பாணத்தில் குறும்படங்களை தயாரித்து, இயக்கிவரும் இளைஞர்கள் இணைந்து குறும்படத் தேடல் ஆய்வு வட்டத்தினை ஆரம்பித்துள்ளனர்.

இவ்வாறானதோர் சந்திப்பு அண்மையில் யாழ்ப்பாணத்தில் குறும்படத் தேடலில் ஆர்வம் மிக்கவர்களினால் ஆரம்பிக்கப்பட்டது. குறும்பட உருவாக்கத்திற்கான தேடல், குறும்படத்தில் விடப்படும் குறைபாடுகள், சமுதாய விழிப்புணர்வை எற்படுத்தும் வகையில் எவ்வாறான குறும்படங்களை / ஆவணப்படங்களை உருவாக்குவது தொடர்பான பல விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டது. இவ்வாய்வு வட்டத்தின் நோக்கமானது சமுதாய விழிப்புணர்வுக்கு ஏற்ற வகையில் நல்ல குறும்படங்களை உருவாக்குவதும் சிதறியிருக்கும் இளம் குறும்பட ஆர்வலர்களை ஒன்றிணைப்பதும். இலைமறைகாயாக மறைந்துள்ள படைப்புகளை வெளிஉலகிற்கு எடுத்துக்காட்டுவதும் ஊக்குவிப்பதுமே ஆகும்.

மாதம் ஒரு தடவை கூடவுள்ள இவ் ஆய்வு வட்டத்தில் இணைய ஆர்வமிக்கவர்கள் 0772379851 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம். புதிய தேடல்கள் மூலம் ஆக்க பூர்வமான படைப்புக்களை உருவாக்குவோம்.

## திருமறைக்கலாமன்றத்தின்
# ‘அசோகா’ / ‘‘அற்றைத்திங்கள்’’

திருமறைக் கலாமன்றத்தின் தயாரிப்பில் அசோகச் சக்கரவர்த்தியின் வரலாற்றைக் கூறும் ‘அசோகா’ என்னும் வார்த்தைகளற்ற நாடகம் மேடையேறவுள்ளது. நாளை 24 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.45 மணிக்கு கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஸ்ண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இலங்கையின் பல்வேறு பிராந்தியங்களிலும் இயங்கும் திருமறைக்கலாமன்றத்தைச் சேர்ந்த பல்லின இளைஞர்கள் பங்கேற்கும் இந்நாடகம் கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா போன்ற இடங்களில் பல தடவைகள் மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளை திருமறைக்கலாமன்றத்தின் மற்றுமொரு படைப்பான ‘அற்றைத்திங்கள்’ என்ற கூத்துருவ நாடகமும் நாளை மறுதினம் 25 ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஸ்ண மணடபத்தில் மேடையேற்றப்படவுள்ளது.

## குறும் திரைப்பட விமர்சனம்
# ‘காவோலை’

கருணை அற்றவர்களால் கைவிடப்பட்ட முதியவர்களுக்கு சமர்ப்பணம் என்னும் அறிவிப்புடன் ஆரம்பிக்கும் ‘காவோலை’ என்னும் குறும்படம் தனிமைப்பட்டுப் போகும் முதியவர்களின் பின்னய கால வாழ்வினை எடுத்துக்காட்டுகிறது.

ரீ.பி கிரியேஷன் தயாரித்துள்ள இக்குறும்படத்தினை தனேஸ்வரன் ஷமிதன் இயக்கியுள்ளார். படத்தின் தொடக்கத்தில் பனை மரமொன்றிலிருந்து காவோலை ஒன்று கீழே விழுகின்றது. இதனூடாக கமெராக்கண் ஒரு வீட்டினுள் அமர்ந்திருக்கும் முதியவரை நோக்கி எம்மை அழைத்துச் செல்கிறது. அமைதியாக கையில் டயறியுடன் அவர் சாய்மனைக் கதிரையில் கண்களை மூடியவாறு அமர்ந்திருக்கின்றார். கமெரா அடுத்த காட்சிக்கு மாறுகிறது. அங்கே இளைஞர் ஒருவன் மேசை முன் அமர்ந்து ‘லப்டொப்’ ஒன்றில் தனது வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறான். கமெராவின் பரிணாமம் விரிவடைகிறது. கதிரையில் அமர்ந்திருக்கும் வயதானவருக்கு முன்னாலே தான் இவ் இளைஞன் வேலை செய்துகொண்டிருப்பது தெரியவருகின்றது. மாறி மாறி இருவரின் செயற்பாடுகளும் காட்டப்படுகின்றன. அப்போது வீட்டு வாசலில் அழைப்பு மணியை யாரோ அழுத்தும் சத்தம் கேட்கிறது. முதலாவது முறை மணி ஒலிக்கும் போது மகன் குழப்பமடைகின்றார். ‘வேலை செய்யும் நேரத்தில் யாரடா இது?’ என அவர் மனம் குழம்புவதை கணினியின் விசைப்பலகையிலிருந்து எழுந்து இறுகும் கைகளின் மூலம் மிக தத்ரூபமாக காட்டப்படுகிறது. இரண்டாவது தடவையாக மணியின் சத்தம் கேட்கும் போது மகன் ரென்ஷனாகி மேசை மீது கையால் அடித்துவிட்டு வாசலைத்திரும்பிப் பார்க்கிறான். பின் உறங்கிக் கொண்டிருக்கும் தனது தந்தையைப் பார்க்கிறான். மூன்றாவது முறை அழைப்பு மணி ஒலிக்கும் போது தந்தை விழித்து யார் என்று பார்க்குமாறு மகனிடம் பணிவாகக் கூறுகிறார். இதைக்கேட்டு கோபப்பட்ட மகன் ‘நீங்கள் சும்மா தானே இருக்கிறியள் எழும்பிப் போய் பாருங்கோ. எனக்கு நிறைய வேலை இருக்கு’ என தந்தையிடம் கோபத்துடன் கூறுகின்றான்.

தந்தை எழுந்து சென்று வாசலைத்திறக்கின்றார். அங்கே வந்திருப்பது அவரின் நீண்ட காலநண்பர் ஒருவர். அவரை வரவேற்று உரையாற்றுகிறார். உரையாடலில் இவரும் மாறி மாறி ‘நீ எப்படி சுகமாய் இருக்கிறாயா? சுகமாய் இருக்கிறாயா?’ என கேட்டு தமது பழைய நினைவுகளை மீட்டுக் கொள்கிறார்கள். நண்பர் தான் மகளைச் சந்திக்க வந்ததாகவும் நேரத்துக்கு முதியோர் இல்லத்திற்கு திரும்பி விட வேண்டும் எனவும் கூறி, தனது சந்திப்பை நிறைவு செய்து செல்கிறார். மீண்டும் தனது சாய்மனைக் கதிரையில் வந்து அமரும் தந்தை தனது மகனிடம் ‘தம்பி இப்ப வந்து போனது யார்?’என்று திரும்ப திரும்பக் கேட்கிறார். இரண்டு மூன்று தடவை பதில் அளித்துவிட்டு நான்காவது தடவையாகக் கேட்கும் போது ‘உங்களுக்கு எத்தனை தடவை சொல்லுறது. வயது போன காலத்தில எங்கட உயிரை வாங்கிக் கொண்டு எங்கையாவது போய்த் துலைய வேண்டியது தானே...’எனத் தந்தையைப் பார்த்து ஏசுகிறான்.

சுவரில் தொங்கவிட்டிருக்கும் தனது மனைவியின் புகைப்படத்தை பார்த்த பின் அவர் எழுதிய டயறியை விரித்து வாசிக்கிறார். அதில் இவரிடம் மகன் சிறுவனாக இருக்கும்போது, அப்பா இப்ப வந்து போனது யார்? என திரும்பத் திரும்பக் கேட்க கோபப்படாமல் அவர் பதில் அளித்ததை மனைவி நினைவு கூர்ந்திருப்பதை வாசித்து கவலைப்படுகிறார்.

முற்றுமுழுதாக ஒரு வீட்டினுள்ளேயே எடுக்கப்பட்டுள்ள இக்குறும்படத்தின் காட்சிகள் மாறும் விதம் மிகத் திறமையாக கையாளப்பட்டுள்ளது. மகனின் கோபங்கள் அதே மகன் சிறுவயதில் தந்தையைத் தொந்தரவு செய்யும் காட்சி, தந்தை அதற்கு பொறுமையுடன் பதிலளிக்கும் காட்சி, தந்தை - முதுமையின் தனிமையில் கதைக்க யாரும் இல்லாது மனம் சஞ்சலிக்கும் காட்சி என்பன பார்ப்போர் மனதைத் தொடுகின்றது. வாசலைத் திறக்கும் போது புறச் சூழல் வெளிச்சம் உள்ளே வருவதை தவிர்த்திருக்கலாம். இருப்பினும் ஒளிப்பதிவிலும், ஒளித்தொகுப்பிலும் சுகந்தன் முழுமையாக தனது பங்களிப்பைச் செய்துள்ளார். இசைப்பிரியனின் இசை கதையோட்டத்திற்கு ஏற்க இதமாகச் செல்கிறது.

பிள்ளைகளால் முதியோர் இல்லத்தில் விடப்படும் பெற்றோர்களினதும் வீட்டில் பிள்ளைகள் இருந்தும் கதைக் காதிருப்பதினால் மன உளைச்சல்படும் பெற்றோர்களினதும் மனநிலைகளை மிக நுட்பமாக காட்டியுள்ள இயக்குநர் ஷமித் பாராட்

எஸ்.ரி.குமரன்

# எனது முன்னேற்றத்தின் முதற்படியாக இந்த வெற்றியைக் கருதுகிறேன்

## வவுனியா மாணவி சர்மிளா



2011 ஆம் ஆண்டு நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய (தேசிய பாடசாலை) மாணவி செல்வி சர்மிளா சர்வானந்தன் 193 புள்ளிகளைப் பெற்று வவுனியா மாவட்டத்தில் முதலாம் இடத்தையும் அகில இலங்கை ரீதியில் மூன்றாமிடத்தையும் பெற்றுப் பாடசாலைக்கு வவுனியா மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.


இவர் ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்களான டாக்டர் தி. சர்வானந்தன் டாக்டர்திருமதி சத்தியவதி சர்வானந்தன் தம்பதிகளின் புதல்வியும் காரை நகரைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபர் க. தில்லையம்பலம் மாதகல் மேற்கைச் சேர்ந்த கந்தையா பரியாரியாரின் பேத்தியும் ஆவார். இவருடனான நேர் காணல் யாழ் ஓசை வாசகர்களுக்காக-

**கேள்வி - நீங்கள் பரீட்சையில் பெற்ற புள்ளிகளைப்பற்றிக் கூறுங்களேன்.**

**பதில் -** நான் பரீட்சையில் வெற்றிக்காகத் தொடர்ந்து பல்வேறு பயிற்சிகளில் ஈடுபட்டேன். நான் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெறவேண்டுமென எண்ணினேன். ஆனாலும் மூன்றாமிடத்திற்கு வந்துள்ளேன். இது எனது வெற்றியின் முதற்படியே. எனது வெற்றிக்காக உழைத்த எனது தாய், தந்தை, வகுப்பாசிரியர் அனைவருக்கும் எனது முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**கேள்வி - எப்படியான பயிற்சியில் ஈடுபட்டீர்கள்?**

**பதில் -** நான் பாடசாலையில் படித்ததோடு பத்திரிகையில் குறிப்பாக புலமைச் சுடர், பொய்கை, முன்னோடி, ஞான விளக்கு, ஸ்ரீ வித்தி போன்ற பத்திரிகைகளின் மூலம் நிறையக் கற்றுக் கொண்டேன். இவைகளும் எனது வெற்றிக்குப் பெரும் பங்களிப்பைச் செய்தன. எனவே ஊடகங்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.



அதிபர் மற்றும் பெற்றோருடன் மாணவி

**கேள்வி - உங்களின் பெற்றோரின் ஒத்துழைப்பு எப்படி இருந்தது?**

**பதில் -** வீட்டில் எனது பெற்றோர் எந்த நேரமும் என்னைப் படி படி என்று கூறாமல் நேரத்துக்கு நேரம் படிப்பதற்கும் வேறு நிகழ்வுகளில் பங்கேற்பதற்கும் என்னை சகல வழிகளிலும் ஊக்குப்படுத்தினார்கள்.

**கேள்வி - உங்களுடன் உங்கள் வகுப்பு மாணவர்கள் எத்தனை பேர் பரீட்சையில் தோற்றினார்கள். அவர்களின் நிலை என்ன?**

**பதில் -** எமது வகுப்பில் 38 பேர் தோற்றினோம். 38 பேரும் சித்தி பெற்றுள்ளோம். இது எனக்கும் எனது பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களுக்கும் சந்தோஷத்தைத் தந்துள்ளது.

**கேள்வி - நீங்கள் எதிர்காலத்தில் என்னவாக வரவேண்டும் என நினைக்கின்றீர்கள். அதற்காக என்ன செய்ய நினைக்கின்றீர்கள்?**


**பதில் -** நான் எதிர்காலத்தில் வைத்தியராக வரவேண்டும் என நினைக்கின்றேன். அதற்காக இப்போதிலிருந்தே சகல விடயங்களையும் தேடிக்கற்க ஆரம்பித்துள்ளேன். இதற்கு எனது பெற்றோரின் உதவியுடன் எனது வகுப்பாசிரியர்கள் பாடசாலையின் உதவியையும் எதிர்பார்க்கின்றேன்.

**இப்பாடசாலையில்தோற்றிய 38 மாணவர்களும் 150 புள்ளிகளுக்கு மேல் பெற்றுச்சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.**

**கேள்வி - இறுதியாக நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

**பதில் -** நான் எனது ஆசிரியர். கோமதி சிறிதரன் மற்றும் அம்மா, அப்பா எனது நண்ப, நண்பிகள் என்னை ஊக்கப்படுத்திய பத்திரிகைகள் என அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவிப்பதோடு தொடர்ந்து இலட்சியம் நிறைவேற அனைவரின் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கின்றேன்.

**தவசிக்குளம் நிருபர்**



# கேட்டியளே சங்கதி



யுத்தத்தால் ஏற்படும் அழிவுகளும் அதன் தாக்கங்களும் ஒவ்வொரு மனிதனின் மனங்களையும்எவ்வளவு தூரம் தாக்கியுள்ளது என்பதை அண்மைய நிகழ்வு ஒன்று வடிவா எங்களுக்கு விளங்கப்படுத்தியிருக்குப் பாருங்கோ. போரின் போது உடைந்து போன கட்டிடங்களை பிறகும் கட்டி சரியாக்கலாம். ஆனால் உடைஞ்சு போன மனங்களை திரும்ப கட்டியெழுப்பேலாது பாருங்கோ... ஆறும் காயங்கள் பல இருந்தாலும் ஆறாத சில காயங்களும் இருக்கத்தான் செய்யுது

வன்னியில நடந்த கடைசி சண்டையில எத்தின மனித உயிர்கள் சின்னாபின்னப்பட்டிருக்கு. கை, கால்களை இழந்த எத்தனை பேர் றோட்டு றோட்டா இழுபட்டிருப்பினம். காயப்பட்டும் தூக்கிச் செல்ல யாருமில்லாமல் எத்தனை பேர் செத்திருப்பினம். இதுகளை எல்லாம் நேரில எத்தன பிஞ்சுகள் பாத்திருக்குங்கள். எங்களைக் காப்பாற்ற யாருமில்லையே...? என எத்தனை தடவை கலங்கியிருக்குங்கள் வார்த்தைகளால் சொல்லியோ, எழுத்துக்களால் எழுதியோ தீர்த்துக்கொள்ள முடியாத அளவுக்கு இப்பவும் எத்தனையோ சனம் மனங்களில துன்பக்காட்சிகளைச் சுமந்து கொண்டுதான் திரியுதுகள்.

'கடந்த காலத்தில நடந்ததுகளை மறந்து போட்டு வாங்கோ புதுசா நாட்டை அபிவிருத்தி செய்து வாழுவோம்' எண்டு கூப்பிடுகினம். 'நாங்களும் நீங்களும் ஒன்றுதான். எங்கட கலாசாரங்களோட சேர்ந்து வாழுங்கோ' எண்டெல்லாம் அழைக்கினம். பாதிக்கப்பட்டவர்களுக்கு புது வாழ்வு அளிக்கிறோம் எண்ட உலகிற்குச் சொல்லிக்கொண்டு ரெயினில ஏறிக்கொண்டு போய் பட்டணங்களை எல்லாம் சுற்றிக்காட்டுகினம். சேர்ந்து ஆடுகினம், பாடுகினம், கூடவே சாப்பிடுகினம். வெளிப் பகட்டுக்காக இப்படி எல்லாம் செய்யிறவயள் ஒவ்வொருவருடைய மனசுக்குள்ளும் இருப்பதை அறிய முடியாதவர்களாய்ப் போய்விட்டினமோ. மறுவாழ்வு அளிக்கிறோம், புது வசந்தம் கொடுக்கிறோம், ஊக்குவிக்கிறோம் எண்டு மேடைபோட்டு காலில் விழுந்து வணங்க வைத்து ஆசி வழங்கினாலும் மனங்களை வெல்ல முடியவில்லை என்றால் அதனால என்னதான் பயன் பாருங்கோ...

போர் முடிந்து இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் வன்னி மக்களுக்கு போதுமான வசதிவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களின் அடிப்படைத் தேவைகள் போன்றன இன்னமும் தீர்க்கப்படவில்லை என்பதை தான் சேதுராகவன் என்ற ஐந்தாம் வகுப்பு மாணவன்ர செயற்பாடு காட்டுது பாருங்கோ. 'யுத்தம் முடிந்த பிறகும் நான் முகாமில இருந்தும் வன்னிக்குப் போயும் விளக்கு வெளிச்சத்தில இருந்து படிச்சுதான் கொலசிப்ல பாஸ் பண்ணினான். என்ன இப்பவும் என்னை இந்த கஷ்ட சூழ்நிலையிலும் படிக்க ஊக்கப்படுத்தியவளின்ர காலில்தான் விழுந்து வணங்குவேனே தவிர வேறு யார் காலிலும் விழமாட்டேன்' என உறுதியாக ஒரு தமிழ் மாணவன் அமைச்சரின் காலில் விழமாட்டேன் என நின்றிருக்கிறான் என்றால் அரசாங்கம் தமிழ் மக்களின் மனங்களில் இருந்து எவ்வளவு தூரம் தள்ளி நிக்குது என்பதைப் பாருங்கோ...

காலில் விழுந்து வணங்கி ஆசிபெறுவது சிங்கள மக்களின்ர பழக்கமாய் இருந்தாலும் , தமிழ் சனத்தைப் பொறுத்தவரையில் அது ஒரு மண்டியிடல், தாழ்ந்து போதல் எண்டே பார்க்கப்பட்டு வருது பாருங்கோ... இதனாலதான் தமிழரின் இந்நிகழ்வுகளில் யாரின்ர கால்லையும் விழுந்து வணங்கிற பழக்கம் இல்ல இதெல்லாம் தமிழருக்கு சாதாரண விடயமாகப் போனாலும் பெரும்பான்மையினருக்கு இது ஒரு கௌரவப் பிரச்சினையாகவே இருக்கப்போகுது. இது என்னத்த உலகிற்கு எடுத்துக் காட்டுதெண்டால், இலங்கை அரசால் இன்னமும் தமிழ் மக்களின் மனங்களை வெல்ல முடியவில்லை என்பதைத்தான் காட்டுது பாருங்கோ...

இன்னுமொரு சங்கதி கேளுங்கோவேன், கொலசிப்பில பாஸ்பண்ணுறதை பாடசாலைகள் வரலாற்று சாதனைகளாக பாக்கினம். கொலசிப் திட்டம் ஆரம்பிச்சே ஒரு இருபது வருஷம் தான் இருக்கும் இதில ஒரு பள்ளிக்கூடம் 50 வருடங்களின் பின் முதல்முறையாக இப்படி ஒரு சாதனை எண்டு பேப்பரில செய்தி போடப்பட்டிருக்குப் பாருங்கோ...

# சிறுமியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய சந்தேக நபர் பொது மக்களால் மடக்கிப் பிடிப்பு

## - மகிழூர் பகுதியில் சம்பவம்

காங்கேயனோடை,

பத்து வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய சந்தேக நபரொருவரை களுவாஞ்சிக்குடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட மகிழூர் கிராமத்தைச் சேர்ந்த பத்து வயது சிறுமி அவரது வீட்டு வளாகத்தில் நின்று கொண்டிருந்த போது அவ்வழியாகச் சென்ற முச்சக்கர வண்டி சாரதியொருவர் அச்சிறுமிக்கு இனிப்புப் பண்டங்களை வாங்கிக் கொடுத்து முச்சக்கர வண்டியில் ஏற்றிச் சென்று அக்கிராமத்தின் மறைவான ஒரு இடத்தில் வைத்து பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார்.

அழுகைச் சத்தத்தைக் கேட்ட பொது மக்கள் அவ்விடத்தை சுற்றி வளைத்த போது அச்சந்தேக நபர் தப்பிக்க முற்பட்ட வேளை பொது மக்கள் அவரை மடக்கிப்பிடித்து களுவாஞ்சிக்குடி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட சிறுமி களுவாஞ்சிக் குடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக் களப்பு போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார். பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# அடிப்படை வசதியின்றி வாழும் வீரச்சோலை கிராம மக்கள்

(நாவிதன்வெளி மேலதிக நிருபர்)

நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற் குட்பட்ட வீரச்சோலை கிராம மக்கள் எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

யுத்தத்தின் போது அம்பாறை மாவட்டத்தில் மிகவும் மோசமாக பாதிக்கப் பட்ட கிராமங்களுள் வீரச்சோலை கிராமமும் ஒன்றாகும். வீரச்சோலைக் கிராமத்தில் 148 குடும்பங்களைச் சேர்ந்த 600 இற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கின்றனர். இங்குள்ள வீதிகள் மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாதளவிற்கு குன்றும், குழியுமாக சேதமடைந்து காணப்படுகின்றன.

குடிசைகளில் வாழும் இக் கிராம மக்களுக்கென அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் கூட வீடமைப்பு திட்டங்கள் எதுவும் அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

குடிநீர், மருந்தகம், நூலகம், தெரு விளக்குகள் மற்றும் வீதி போன்ற பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் வசித்து வரும் வீரச்சோலைக் கிராம மக்களது நலனில் அக்கறை காட்டுமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் வீடுகளை புனரமைக்க நிதி ஒதுக்கீடு

காங்கேயனோடை,

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் முழுமையாக சேதமடைந்த வீடுகளை புனரமைப்பதற்காக 589.3 மில்லியன் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 5893 வீடுகள் வெள்ளத்தினால் முழுமையாக சேதமடைந்துள்ளன.

இதற்காக ஒரு வீட்டுக்கு ஒரு இலட்சம் ரூபா வீதம் 589.3 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் 230 வீடுகளுக்கு 23 மில்லியன் ரூபாவும், கோறளைப்பற்று மத்திய பிரதேச செயலாளர் பிரிவில் 710 வீடுகளுக்காக 71 மில்லியன் ரூபாவும், ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் 442 வீடுகளுக்காக 44.2 மில்லியன் ரூபாவும், வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் 118 வீடுகளுக்காக 11.8 மில்லியன் ரூபாவும், கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் 187 வீடுகளுக்காக 18.7 மில்லியன் ரூபாவும் ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவில் ஏறாவூர் நகர் பிரதேச செயலாளர் பிரிவில் 124 வீடுகளுக்காக 12.4 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இதேபோன்று மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் 390 வீடுகளுக்காக 39 மில்லியன் ரூபாவும், வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் 627 வீடுகளுக்காக 62.7 மில்லியன் ரூபாவும், காத்தான்குடியில் 156 வீடுகளுக்காக 15.6 மில்லியன் ரூபாவும், மண்முனைபற்று பிரதேச செயலாளர் பிரிவில் 140 வீடுகளுக்காக 14 மில்லியன் ரூபாவும் வெல்லாவெளியில் 882 வீடுகளுக்காக 88.2 மில்லியன் ரூபாவும், களுவாஞ்சிக்குடியில் 152 வீடுகளுக்காக 15.2 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# மாளிகைக்காடு பகுதிக்கு தெருமின் விளக்குகள்

## - உறுப்பினர் பாயிஸுக்கு மக்கள் நன்றி தெரிவிப்பு

மாளிகைக்காடு,

காரைதீவு பிரதேச சபையின் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஏ. பாயிஸின் துரித முயற்சியின் பயனாக மாளிகைக்காடு கிராமத்திற்கு தெருமின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

காரைதீவு பிரதேசசபை பிரிவுக்குட்பட்ட மாளிகைக்காடு கிராமத்தின் மிக முக்கிய குறைபாடாகக் காணப்பட்ட தெருமின்விளக்கு தொடர்பாக பொது மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கவனத்திலெடுத்த பிரதேசசபை உறுப்பினர் பாயிஸ், துரிதகெதியில் இதனைச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டதுடன், அவற்றை தானே முன்னின்று நடைமுறைப்படுத்தியதற்கும் பொதுமக்கள் நன்றி தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இக்கிராமத்தின் நீண்ட கால தேவையாக இருந்துவரும் உள்ளக பாலம் ஒன்றினை நிர்மாணிப்பதற்காக அமைச்சர் றிசாட் பதியுதீன் அறுபது இலட்சம் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்திருப்பதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மாளிகைக்காடு அமைப்பாளர் ஏ.எம்.ஜாஹிர் தெரிவித்தார்.

மாளிகைக்காடு, சாய்ந்தமருது பிரதேசங்களின் எல்லை வீதியாகவுள்ள மாளிகா வீதியிலுள்ள பாலத்தினூடாக வாகனங்கள் அதிகளவில் செல்வதனால் இப்பாலத்தை அண்டியுள்ள பாடசாலை மற்றும் பொதுச்சந்தை போன்றவற்றிற்குச் செல்லும் மாணவர்களும் பொதுமக்களும் பல்வேறு அசௌகரியங்களுக்கு உட்படுவதையிட்டு பாதசாரிகளுக்கு வசதியாக உள்ளக பாலம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என பொது மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது. இதனை கவனத்திற் கொண்டே புதிதாக உள்ளக பாலம் ஒன்றினை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகளை தான் துரிதமாக மேற்கொண்டதாகவும், இதற்காக அமைச்சர் றிசாட் பதியுதீனின் உதவிகள் பெறப்பட்டதாகவும் அமைப்பாளர் ஜாஹிர் மேலும் தெரிவித்தார்.

# தோட்ட பாடசாலைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கு மாகாண முதலமைச்சர் முடிவு

பதுளை,

ஊவா மாகாணத்தின் 20 தமிழ்ப் பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்களை வழங்கவும், மாகாணப் பெருந்தோட்டப் பாடசாலைகள் எதிர்நோக்கும் அடிப்படை பிரச்சினைகள் அனைத்தையும் நிவர்த்தி செய்யவும் மாகாண முதலமைச்சர் சசீந்திர ராஜபக்ஷ முடிவு செய்துள்ளார் என ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான், தமது அமைச்சர் அலுவலகத்தில் புதன்கிழமை மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

அமைச்சர் செந்தில் தொண்டமான் தொடர்ந்து பேசுகையில், புதன்கிழமை பசறைப் பகுதியின் பெல்காதன்னை முகாமைத்துவ பயிற்சி நிலைய கேட்போர் கூடத்தில் மாகாண முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் போதே மேற்கண்ட உறுதிமொழியை எனக்கு வழங்கியுள்ளார்.

ஊவா மாகாணப் பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு அனுப்பப்படும் அனைத்து சுற்றறிக்கைகளும் தனிச் சிங்கள மொழி மூலம் அனுப்பப்பட்டிருப்பதினால் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் பெரும் பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர். அத்துடன் தமிழ்ப் பாடசாலைகளுக்கு வளப் பற்றாக்குறை மற்றும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதினால் தமிழ்க் கல்வி மேம்பாடுகளுக்கு பெரும் தடையாக இருப்பதாக மாகாண முதலமைச்சரிடம் கோரிக்கைகளை முன் வைத்ததோடு, அதற்கான அழுத்தங்களையும் விடுத்து வந்தேன்.

ஊவா மாகாணத்தின் பசறை தமிழ்க் கல்வி வலயம் உட்பட ஏனைய பெருந் தோட்டப் பாடசாலைகளுக்கு அனுப்பப்படும் அனைத்து சுற்றறிக்கைகளும், ஆவணங்களும் தமிழ் மொழி மூலமாக வழங்கவும், சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். மாகாண தமிழ்ப் பாடசாலைகளில் நிலவும் வளப்பற்றாக்குறையினையும் நிவர்த்தி செய்ய ஏற்பாடுகளை செய்வதாகவும் முதலமைச்சர் உறுதியளித்துள்ளார்.

அத்துடன் தமிழாசிரியர்கள் பங்கு கொள்ளும் அனைத்து செயலமர்வுகளிலும் கூட்டங்களிலும் தமிழ் மொழி பெயர்ப்பு இடம்பெறுவதற்கும் அதற்கு முன்னோடியாக இயன்றவரையில் தமிழ் மொழி மூலம் மேற்படி நிகழ்வுகளை நடத்தவும் முதலமைச்சர் சம்பந்தப்பட்ட வர்களுக்கு உத்தியோகபூர்வமான அறிவிப்பினை விடுத்தார்.

மேலும் மாகாணத்தின் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் ஏனைய அடிப்படை பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை ஏற்படுத்த முனைப்புடன் செயல்படுவேன் என்பதையும் உறுதியுடன் கூறுகின்றேன் என்றார்.

# மலையக தமிழ் கைதிகளை விடுதலை செய்யக்கோரி மனு கையளிப்பு

நுவரெலியா,

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பேரில் கைது செய்து தடுத்து வைத்திருக்கும் மலையக தமிழ் கைதிகளுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் எனக்கோரி மனு ஒன்றை இக் கைதிகளின் உறவினர்கள் 21ஆம் திகதி நுவரெலியா மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலாளர் டி.பி.ஜி. குமாரசிறியிடம் கையளித்தார்கள்.

அந்த மனுவை பெற்றுக்கொண்ட மாவட்ட செயலாளர் அதனை ஜனாதிபதியின் கவனத்திற்கு அனுப்பிவைப்பதாகவும் ஜனாதிபதியின் பதில் கிடைத்ததும் தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

# உலகை ஆக்கிரமித்துள்ள மின்வெளிப் பயங்கரவாதம்



கணனிகளை பயன்படுத்துவோர் மிக அவதானமாக அதனை பயன்படுத்த வேண்டும். பேஸ்புக், மைபேஸ், கூகுள் பிளஸ் போன்றவற்றால் பலரின் வாழ்க்கை சீரழிந்து கொண்டிருப்பதையும் தடம் மாறிச் செல்வதையும் காணக்கூடியதாக உள்ளது.

பலர் பணம் பறிப்பதற்கும் இதனைப் பயன்படுத்துகிறார்கள். ஆகையால் பேஸ்புக் பயன்படுத்துவோர் தேவையற்ற அறியாத நபர்கள் குறித்து கவனமாக இருத்தல் வேண்டும். குறிப்பாக போலிப்பெயர்களில் விடுக்கப்படும் போலி வலையமைப்புக்கள் தொடர்பில் விழிப்புடன் இருக்கவேண்டும். பேஸ்புக், மைபேஸ், கூகுள் பிளஸ் போன்றவற்றை பயன்படுத்துவோருக்கு சில அறிவுரைகள்.

ஓடும் இயந்திரங்களுடன் ஓடி அலைந்து தானும் இயந்திரமாகவே மாறிக் களைத்து வருகிறான் மனிதன். விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையில் விந்தைகள் செய்துகொண்டிருக்கிறது விஞ்ஞானம். பூகோளமயமாதலின் விளைவாக நாளுக்குநாள் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி அதிகரித்துச் செல்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது. குறிப்பாக இணையத் தளங்கள், மின்னஞ்சல்கள், சமூக வலையமைப்புகளின் ஆதிக்கம் மேலோங்கிக் காணப்படுகிறது.

ஒருபுறம் இணைய உலகம் நாளுக்கு நாள் புதிய மலர்ச்சியையும் பரிமா ணத்தையும் கண்டுகொண்டிருக்கும் அதேவேளை, இதற்கு மாற்றாக ஏற்பட்டுவரும் எதிர்விளைவுகளையும் யாராலும் தடுக்க முடியாதுள்ளது.

பேஸ்புக் (Face Book), மை பேஸ் (My Face), கூகுள் பிளஸ் (Google +), போன்ற சமூக வலையமைப்புகள் கடவுச்சொல்லை வேட்டையாடும் இணையக் குற்றங்கள் புரிவோரின் களமாக விளங்குகின்றன.

பேஸ்புக் வலையமைப்பானது உலக நாடுகள் பலவற்றில் பிரபல்யமடைந்து வருகிறது. சந்திக்கு வந்தால் சுற்றத்தாரைச் சந்திக்கலாம் என்று கிராமத்து மொழிவழக்கில் சொல்வார்கள். இப்போது அந்தக்காலம் மாறி முகப்புத்தக்கத்துக்கு வந்தால் கூட்டத்தோடு குதூகலிக்கலாம் என்றாகிவிட்டது. நம்மில் பலர் அதிகாலையில் கண் விழித்ததும் முதல்வேலையாக பேஸ்புக்கில் என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்பதையே வழமையாகக் கொண்டிருக்கிறார்கள்.

பேஸ்புக் போன்ற சமூக வலையமைப்புகளில் இடம்பெறும் குற்றங்களும் நாளுக்குநாள் அதிகரித்துச் செல்கிறது. இதனால் பெருந்தொகைப் பணத்தை இழந்தோரும் வாழ்க்கையைத் தொலைத்தோரும் இருக்கிறார்கள்.

> **பேஸ்புக் வலையமைப்பானது உலக நாடுகள் பலவற்றில் பிரபல்யமடைந்து வருகிறது. சந்திக்கு வந்தால் சுற்றத்தாரைச் சந்திக்கலாம் என்ற கிராமத்து மொழிவழக்கில் சொல்வார்கள். இப்போது அந்தக்காலம் மாறி முகப்புத்தக்கத்துக்கு வந்தால் கூட்டத்தோடு குதூகலிக்கலாம் என்றாகிவிட்டது. நம்மில் பலர் அதிகாலையில் கண்விழித்ததும் முதல்வேலையாக பேஸ்புக்கில் என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்பதையே வழக்கமாக கொண்டிருக்கிறார்கள்.**

அவ்வாறு பலரது வாழ்க்கைக்கு பேராபத்தாக உருவாகியுள்ள மின்வெளிப் பயங்கரவாதம் இன்று உலகையே ஆக்கிரமித்து ஆட்டிப் படைக்கும் சக்தியாக மாறியுள்ளது.

இதுதொடர்பாக இலங்கையிலும் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. இலங்கை அரசாங்கத்தின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் (ICTA) கீழ் இயங்கும் இலங்கை கணனி பயன்பாட்டாளர்களின் அவசர உதவி மற்றும் பொறுப்புகளுக்கான குழு (CERT) இது தொடர்பில் தீவிரமாக ஆராய்ந்து வருவதுடன் முறைப் பாடுகளுக்கு ஏற்புடைய நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

இலங்கையில் இடம்பெற்ற சில இணையத்தள குற்றச் செயல்கள்

கொழும்பில் தனியார் நிறுவனமொன்றில் தொழில்புரியும் இளம் பெண் அவர். அலுவலக நேரங்களில் மாத்திரம் பேஸ்புக் பயன்படுத்துவதுண்டு. இவ்வாறே நாட்கள் கடந்தன. ஒருநாள் தோழியரிடமிருந்து தொலைபேசியில் அவருக்கு கிடைத்த அதிர்ச்சிச் செய்தி இதுதான். 'நேற்றிரவு முழுவதும் பேஸ்புக் இணைப்பில் இருந்தாயே? எங்களோடு அரட்டை அடித்தாயே? அப்போதெல்லாம் இரட்டை அர்த்த வசனங்களும் பேசுகிறாய் என்ன?''

இதனைக் கேட்டதும் அதிர்ச்சியடைந்துள்ளார் அந்த இளம் பெண். ஏனென்றால் இரவில் அவர் பேஸ்புக் உபயோகிப்பதற்கான எந்த வசதியும் அவரிடம் இல்லை. இதுகுறித்து செய்த முறைப்பாட்டையடுத்து தேடிப்பிடிக்கப்பட்ட உண்மை இதுதான்.

அவருடைய கணனியில் ஒரு மென்பொருள் நிறுவப்பட்டிருந்தது. அந்தக் கணனியில் அவர் என்ன வேலைகள் செய்கிறாரோ அவை அனைத்தும் அந்த மென்பொருளில் பதிவாகி இரு மணித்தியாலங்களுக்கு ஒருதடவை அந்தத் தகவல்கள் அனைத்தும் வேறொரு நபரின் மின்னஞ்சலுக்கு மாற்றப்பட்டுக்கொண்டிருந்தது. தன்னுடைய தனிப்பட்ட தகவல்கள் அனைத்தும் பகிரங்கமானதையிட்டு சினம்கொண்டுள்ளார் அந்தப் பெண். இதுபற்றி முழுமையாக விசாரிக்கும்போது அலுவலகத்தில் உள்ள மற்றுமொரு நபர்தான் இந்தச் செயலைச் செய்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

இவ்வாறான விடயங்களை கணனி உளவுபார்த்தல் என்று சொல்வார்கள். இணையங்களில் குவிந்து காணப்படும் Keylogger போன்றவைற்றைக் கொண்டு கணினிகளையும் செயற்பாடுகளையும் உளவுபார்க்க முடியும்.

உயர்நிலை பதவி வகிக்கும் முக்கியஸ்தர் அவர். லண்டனில் பெருந்தொகைப் பணம் (12.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) அவருக்கு அதிர்ஷ்டலாபமாகக் கிடைத்துள்ளதாக சில வாரங்களுக்கு முன்னர் மின்னஞ்சலினூடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பணம் கிடைக்கப்போகிறது என்ற சந்தோஷத்தில் பதில் மடல்களையும் அவர் அனுப்பியுள்ளார். 'இந்தப் பணத்தை சட்ட ரீதியாக தங்களுடைய கணக்குக்கு மாற்றுவதற்குப் பல்வேறு படிமுறைகள் இருக் கின்றன. ஆவணங்கள், சட்டத்தரணி உத்தரவாதம் என விதிமுறைகளுக்கு உட்பட்டிருப்பதை தங்களுக்கு அறியத் தருகிறோம்.

அதன் பிரகாரம் ஆவணப் படுத்தல் உட்பட அனைத்து விடயங் களுக்கும் ஒருதொகை பணம் தேவைப் படுகிறது. அதனை எமது கணக்குக்கு வரவு வைப்பதன் மூலம் ஒருவார காலத்துக்குள் உங்களுக்கான அதிர்ஷ்ட லாபப் பணத்தை பெற்றுக்கொள்ளலாம்' என அவருக்கு மின்மடலொன்று கிடைத்துள்ளது.

ஒருவார காலத்துக்குள் பெரிய பணக்காரராகப்போகும் ஆசையில் அவர்கள் கேட்ட பணத்தை (கிட்டத்தட்ட 10 லட்சம் ரூபா) தனது வங்கிக் கணக்கி லிருந்து மாற்றம் செய்துள்ளார்.

*அதிஷ்டலாபப் பணம் இவருக்கு கிடைத்ததா? மற்றும் சுவாரஷயமான சம்பவங்களுக்கு அடுத்த வார யாழ் ஓசையைப் பாருங்கள்...*

**- இராமானுஜம் நிர்ஷன்**

# சிங்களம் கற்போம்

1. ***அய்*** - ஏன்?
2. ***எயா*** - அவர்-அவள்
3. ***மொக்கத*** - ஏன்?
4. ***மொக்கட்டத*** - என்னத்துக்கு
5. ***மொனவத*** - என்ன?
6. ***கொஹெத*** - எங்கே?
7. ***கொஹாட்டத*** - எங்கே?
8. ***மொக்கத?*** - என்ன (உயிர் அற்றவை பற்றி கேட்கும் போது)

09 ***குமக்த*** - எது?

10. ***கவுத*** - யார்?
11. ***காட்டத*** - யாருக்கு?

---

### *பிரஸ்ன எசீமட்ட இகெனகமு*
### கேள்விகள் கேட்க பழகுவோம்.

***எய் எயா என்னே?*** - ஏன் அவன்/ அவர் வருகிறார்?

***எயா எய் என்னே?*** - அவன்/ அவர் ஏன் வருகிறார்?

***மொனவடத எயா என்னே?*** - எதற்கு அவர்/ அவன் வருகிறார்?

***எய் ஆவே?*** - ஏன் வந்தனீங்கள்?

***மொக்கத ஆவே?*** - ஏன் வந்தனீங்கள்?

***மொக்கடத என்னே?*** - என்னத்துக்கு வந்தீர்கள்?

***மொக்கடத ஆவே?*** - என்னத்துக்கு வந்தீர்கள்?

***பேக் எகே மொனவத தியென்னே?*** - பையில் என்ன இருக்கிறது?

***எயா மொனவத கியன்னே?*** - அவர்/ அவன் என்ன சொல்கிறார்?

***எகே மொனவத தியென்னே?*** - அங்கே என்ன இருக்கிறது?

***மொனவத கறன்னே?*** - என்ன செய்கிறீர்கள்?

***மம வெட கரனவா?*** - நான் வேலை செய்கிறேன்

***மம மொக்கத கன்னே?*** - நான் என்ன எடுக்கிறேன்?

எயி, மொக்கத, மொக்கடத, மொனவத, மொக்கத ஆகிய சொற்களோடு ('ஏ' -னே') இணைத்து கேள்விகள் கேட்கலாம்.

***ஓயா கொஹெத யன்னே?*** - நீங்கள் எங்கே போகிறீர்கள்?

***ஓயா கொஹெத கியே?*** - நீங்கள் எங்கே போனீர்கள்?

***எயாகே கம கொஹெத?*** - அவருடைய / அவனுடைய ஊர் எங்கே?

***மல்லி கொஹொட்டத யன்னே?*** - தம்பி எங்கே போகிறீர்கள்?

***மே பஸ் எக கொஹொட்டத யன்னே?*** - இந்த பஸ் எங்கே போகிறது?

***அர மொகத்த?*** - அது என்ன?

***ஏக்க அல்மாரியக்*** - அது அலுமாரி

***அர மொக்கத்த?*** - அது என்ன?

***ஏ பள்ளெக்*** - அது ஒரு நாய்

***அபே சிங்கள குருவரயாகே நம குமக்த?*** - எங்களுடைய சிங்கள ஆசிரியரின் பெயர் என்ன?

***அர என்னே கவுத?*** - அங்கே வருவது யார்?

***கவுத ஹாம கன்னே*** - யார் சாப்பாடு சாப்பிடுகிறது?

***கவுத சிங்கள அகுறு லியன்னே?*** - யார் சிங்கள எழுத்துக்களை எழுதுகிறது?

***கவுத கொழம்பட்ட யன்னே?*** - யார் கொழும்புக்கு போகிறது?

***காட்டத சிங்கள கதா கரன்ன புழுவன்*** - யாருக்கு சிங்களம் கதைக்க முடியும்?

# பாரதியாரின் நற்சிந்தனைகள்

★ எங்கும் அறிவுமயமாக கடவுள் நிறைந்திருக்கிறார். அந்த அறிவுக்கடலில் நாம் ஒரு திவலையைப் போல இருக்கிறோம். அந்த அறிவை ஆணவம் என்னும் மாசு மூடியிருக்கிறது. அதை நீக்கிவிட்டால் தெய்வசக்தியும் ஞானமும் நமக்கு ஏற்பட்டு விடும்.

★ வறுமையை எண்ணி சிலர் பயப்படுகின்றனர். எண்ணியது நடக்குமோ நடக்காதோ என்றும் பயப்படுவோரும் உண்டு. எல்லாக் கவலைக்கும் அச்சமே காரணமாக இருக்கிறது. நம் உச்சந்தலையில் வானம் இடிந்து வீழ்ந்தாலும் கூட அச்சப்படக்கூடாது.

★ மனதை உற்சாக நிலையில் வைத்துக் கொண்டால் உடம்பிலே தீவிரமுண்டாகும். உடம்பைத் தீவிரமாக்கி விட்டால் மனம் உற்சாக நிலையில் இருக்கும். இப்படி மனமும், உடலும் ஒன்றை ஒன்று சார்ந்து இருக்கிறது.

★ சத்தியம். பரம்பொருளைக் காட்டும் கண்ணாடியாகும். அதனால், பேச்சில் உண்மை வெளிப்பட வேண்டும் என்ற உறுதி வேண்டும். உள்ளத்தில் உண்மை இருந்தால் அது நம் வாக்கிலும் வெளிப்படும்.

★ தன்னைத்தான் அடக்குதல், பிறர் துன்பம் தீர்த்தல், மற்றவர் நலன் விரும்புதல், கடவுளை வணங்குதல் ஆகிய நான்கு கடமைகளும் மனிதனுக்கு அவசியமானவை. நலிந்த ஏழை மக்களுக்கு உதவி செய்தலே மிகவும் முக்கியமானது.

★ சுகமாக வாழ்பவனைக் கண்டு பொறாமைப்படாமல் அவனிடம் நட்போடு பழகுங்கள். நம்மால் முடியாத ஏதோ ஒன்றை செய்ய முடிந்ததால் தான் ஒருவன் வெற்றி பெறுகிறான் என்ற உண்மையை உணர்ந்தால் எவ்விதமான காழ்ப்புணர்வும் உள்ளத்தில் தோன்றாது.

★ சுயநலத்தை மறந்துவிடுங்கள். தெய்வத்தை முழுமையாக நம்புங்கள். உண்மையைப் பேசுங்கள். நியாயத்தை எப்போதும் செய்யுங்கள். எல்லா இன்பங்களும் உங்களை வந்து சேரும்.

# பொது அறிவுப் போட்டி 06

1. இலங்கையின் தற்போதைய சட்டமா அதிபர் யார்?
2. ராஜீவ் கொலைவழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளவர்கள் யார்?
3. ஒஸ்கார் விருது பெற்ற இந்திய இசை அமைப்பாளர் யார்?
4. சோதிட சாஸ்திரத்தில் இராசிகள் எத்தனை?நட்சத்திரங்கள் எத்தனை?
5. நவக்கிரகங்களை பெயரிடுக?
6. அண்மையில் பல நாட்டின் தூதரக இராஜதந்திர இரகசியங்களை அம்பலப்படுத்திய இணையம் எது? அதன் ஸ்தாபகர் யார்?
7. தனிச்சிங்கள சட்டத்தை அமுல்படுத்திய பிரதம மந்திரி யார்?
8. நீரிழிவு நோய் ஏற்பட காரணமான ஓமோனின் பெயர் என்ன?
9. இலங்கை கிரிக்கெட் அணியின் புகழ்வாய்ந்த பந்துவீச்சாளர் யார்?
10. இலங்கை கிரிக்கெட் அணி உலக கிண்ணத்தை சுவீகரித்த போது இருந்த கப்டன் யார்?

*பொது அறிவுப் போட்டி- 04க்கு சரியான விடை எழுதி அனுப்பியவர்களில் தெரிவுசெய்யப்பட்ட 3 அதிஷ்டசாலிகள்*

| | | |
|---|---|---|
| **1. மெ.இங்கிதை கிருஷ்ணபதி அல்வாய் வடக்கு, அல்வாய்** | **2. நி.கௌதமி அன்பகம் அல்வாய் வடக்கு, அல்வாய்** | **3.கே. வானதி, இல- 06, டச்சு வீதி கோப்பாய் தெற்கு கோப்பாய்.** |

<u>பொது அறிவுப்போட்டி -04 விடைகள்</u>

01. திருக்குர்ஆன்
02. ஆனந்தசமரக்கோன்
03. டபிள்யு.டி.சில்வா
04. மார்க்கோணி
05. புதுடெல்லி
06. பீஜிங்
07. பிரதீபா பாட்டீல்
08. பர்மா
09. டோக்கியோ
10. ஈராக்

சரியான விடைகளை எழுதி அனுப்பும் முதல் மூன்று அதிஷ்ட சாலிகளுக்கு மூன்று மாதத்துக்கான 'யாழ் ஓசை' வாரஇதழ் இலவசமாக வழங்கப்படும். சரியான விடைகள் அடுத்த வார யாழ் ஓசையில் பிரசுரிக்கப்படும். உங்கள் விடைகளை எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள்.

**வீரகேசரி/யாழ் ஓசை காரியாலயம்,**
**117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**

# வெறும் கைகளுடன் அநாதரவாக விடப்பட்டுள்ள வன்னி மக்கள்

இழவு விழுந்த வீடு மாதிரி இருக்கின்றன பெரும்பாலான கிராமங்கள். அங்கொன்றும் இங்கொன்றுமாக கொட்டில்கள் முளைத்துக் கொண்டிருக்கின்றன. முள்ளிவாய்க்காலில் தவறவிட்ட அயலவர்களை இப்போதுதான் பலரும் தேடிக்கொண்டிருக்கிறார்கள். சுற்றம் சூழல் இல்லாத கிராமம் பெரும்பாலும் மயானம் போன்று வெறிச்சோடியே இருக்கின்றது. ஆனாலும் பழக்கமற்ற முகங்கள் பலவும் காவலரண்களில் குந்தியிருக்கின்றன. வீதியோரங்களிலும் டிரக்குகளிலும் துவிச்சக்கர வண்டிகளிலுமென வேகமாகத்தாண்டிச் செல்கின்றன.

இலங்கை அரசு கூறிக்கொள்வதுபோல மீள்குடியமர்வு என்றால் பொட்டல் வெளிகளில் அநாதரவாக கைவிடுவது என்பது ஐ.நா.வினது புதிய வரைவிலக்கணம் ஆகிவிட்டது போலும். வவுனியாவிலும், யாழ்ப்பாணத்திலுமுள்ள இடைத்தங்கல் முகாம்களை விரைவாக மூடிவிடவே அரசு முனைப்புக்காட்டுகின்றது. சர்வதேசத்திற்கு கணக்குக்காட்டும் அவசரம் அதற்கு. வெற்றிகரமாக யாழ்ப்பாணத்திலிருந்த அனைத்து இடைத்தங்கல் முகாம்களையும் அரசு மூடிவிட்டது. கடைசியாக கொடிகாமம் இராமாவில் முகாமிலிருந்த 24 குடும்பங்களும் கோம்பாவில் காட்டிற்கு விரட்டப்பட்டு அம்முகாம் மூடப்பட்டு விட்டது.

சர்வதேச அழுத்தங்களுக்கு பணிந்து வன்னியில் மீள்குடியமர்வு முடிவுக்கட்டத்தை எட்டிவிட்டதாகக்காட்டிக்கொள்ள அரசு பாடுபட்டுக்கொண்டிருக்கின்றது. அங்கு எல்லாமுமே இயல்புக்கு திரும்பி விட்டதாக கூறிக்கொள்வதில். மட்டற்ற மகிழ்ச்சி அரசுக்கு. ஆனால் சர்வதேசத்திற்க்கும் சரி, புலம்பெயர் உறவுகளுக்கும் சரி, வன்னியின் இயல்பு வாழ்க்கை என்பது ஏ-9 வீதியை மையமாக வைத்து கணிப்பதே என்றாகிவிட்டது. ஏ - 9 வீதியில் இருந்து ஒரு சில நூறு மீற்றர்களுக்கப்பால் ஆரம்பிக்கும் அவலம் நிறைந்த அம்மக்கள் வாழ்வின் இருண்ட பக்கங்கள் பெரும்பாலும் தெரிந்திருப்பதேயில்லை.

வன்னி வெற்றி கொள்ளப்பட்ட பின்னர் தனது அமைச்சரவைக்கூட்டமொன்றை ஜனாதிபதி இரணைமடு இராணுவத்தளத்தில் நடாத்தியிருந்தார். விடுதலைப்புலிகளது விமான ஓடுபாதை தளமாக இருந்த அப்பகுதி இப்போது வன்னிக்கான இராணுவ கட்டளை மையமாகியுள்ளது. ஏ - 9 வீதியின் ஓரமாக இருந்த கட்டட இடிபாடுகளை நேரில் கண்டுகொண்ட ஜனாதிபதி கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள் மீது பாய்ந்து விழுந்தார். அரச அதிகாரிகள் தான் தனது புகழுக்கு களங்கம் விளைவிப்பவர்களில் முன்னுக்கு நிற்பதாகவும் அவர் கத்தித்தீர்த்திருந்தார். ஏ-9 வீதியோரம் இடம்பெறும் அவசர திருத்த வேலைகளையே வன்னியின் அபிவிருத்தியென காட்டிக்கொள்வதே அவரது நோக்கமாக இருந்திருந்தது.

வன்னி யுத்த நடவடிக்கைகளின் போது மன்னாரில் இருந்தே முதற்கட்டமாக மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர். இடம்பெயர்வு பாரம்பரியப்படி அசைவுள்ள சொத்துக்கள் சகிதமே அவர்களது இடம்பெயர்வு ஆரம்பமாகியிருந்தது. கடந்தகால இடம்பெயர்வு அனுபவங்கள் பிரகாரம் சிலர் தமது வீடுகளின் கூரைகள், கதவுகள் மற்றும் நிலைகளை கூட கழற்றிக் கொண்டே இடம்பெயர்ந்திருந்தனர். மீண்டும் திரும்பி வருவது பற்றிய நம்பிக்கை அவர்களிடம் நிறையவே இருந்தது.

ஆனாலும் யுத்தம் கிராமம், கிராமமாக அவர்களை விரட்டிச் சென்றிருந்த நிலையில் முள்ளிவாய்க்காலில் இருந்து வெளியேறுகையில் பெரும்பாலானவர்களிடம் உயிரைத்தவிர எடுத்துச் செல்ல வேறு எதுவும் இருந்திருக்கவில்லை. இப்போது மீளக்குடியமர அழைத்து வந்து விடப்படுகையிலும் வெறும் கைகளுடன் அநாதரவாக அவர்கள் விடப்பட்டுள்ளனர். மீள்குடியமரும் குடும்பம் ஒன்றிற்கு அரசு வழங்கும் 5ஆயிரம் ரூபா பணமும், இந்தியாவின் 13 கூரைத்தகடுகளும், மட்டுமே இப்போது எஞ்சியிருக்கின்றன.



யுத்தத்தினால் வீடுகள் முழுமையாக அழிக்கப்பட்டோ, சூறையாடப்பட்டோ உள்ள நிலையில் இவ்வுதவிகள் அக்குடும்பங்களுக்கு ஒரு துரும்பைக்கூட நகர்த்தப் போதுமானதாக இருக்கப்போவதில்லை. இயல்பு வாழ்விற்க்குத் திரும்பியிராத அவர்களுக்கு ஐ.நா.வின் உதவியின் கீழ் வழங்கப்பட்ட உலர் உணவு நிவாரணம் கூட கடந்த ஆறுமாதங்களாக இடைநிறுத்தப்பட்டு விட்டது. மோசமானதொரு பட்டினிச்சாவை நோக்கி அம்மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

வன்னியில் மீள் குடியமரவென அனுமதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுள் 80சதவீதத்திற்கும் குறையாதவை குடும்பத்தலைவர்கள் இன்றியே உள்ளன. மிகவும் மோசமான இராணுவ நெருக்குவாரங்கள் மத்தியிலேயே இக்குடும்பங்கள் தங்க வைக்கப்பட்டுள்ளன. பிரதான வீதிகள், சந்திகள் என முழத்துக்கொரு காவலரண்களும் சிப்பாய்களுமாக வன்னி இப்போதுள்ளது.

தமக்கு பரீட்சயம் இல்லாத வெளியாட்கள் நடமாடுவதை கட்டுப்படுத்தவே வன்னியில் படைத்தரப்பு முற்படுகின்றது. புதியவர்கள் பின்தொடரப்படுவதென்பது அங்கு சாதாரணமானதொன்று. சிலவேளைகளில் வெளியார் வந்து சென்று திரும்பிய வீடுகள் இரவு நேர விசாரணைகளுக்குள்ளாவது சாதாரணமானது. எங்களை விடுதலைப்புலிகள் ஆதரவாளர்களென்றே இன்று வரை சிங்கள அரசுகளும் சிப்பாய்களும் பார்க்கிறார்கள். இளம்பெண் பிள்ளைகள் இருக்கும் வீடுகளை பகலில் பார்த்துவிட்டு இரவானால் வீடுகளுக்குள் வந்து விடுகின்றார்கள். இரவு நேர விசாரணையாம். எங்கள் வீட்டிற்கு இரவு 9மணிக்கு இப்படி விசாரணையென வந்த நாலு ஆமிக்காரர் அடுத்தநாள் காலை 3மணிக்குத்தான் வெளியே போனார்கள். 'குமருகளை வச்சுக்கொண்டு நாங்கள் படுகிறபாடு சொல்லிப்புரியாது' என்கிறார் சுதந்திரபுரத்தைச் சேர்ந்த தேவியம்மா. அண்மையிலேயே மீள் குடியமர்ந்த அவரது குடும்பம் வாழ்வது வெறும் 15 அடி நீளமும் 8 அடி அகலமும் கொண்ட ஓலைக்குடிசை ஒன்றிலேயே உயிர் தப்பிப் பிழைத்த மூன்று பெண்களோடு வாழ்கிறார்கள்.

வன்னியின் குடிசனப்பரம்பல் படையினருக்கு பல வழிகளிலும் சாதகமாக இருக்கின்றது. யாழ்ப்பாணம் போன்று நெருக்கமான குடிசனப்பரம்பல் அங்கில்லை. தோட்ட, வயல்காணிகளுக்கிடையே கொட்டில்களே எஞ்சியுள்ளன. அவற்றிலும் மக்கள் மீள் குடியமராத காணிகள் பற்றையாகிப்போயுள்ளன. கடந்த இரு மாதகாலப்பகுதியினுள் மட்டும் முறை தவறிய 13 பிரசவங்கள் பற்றி தான் அறிந்திருப்பதாக கூறுகிறார் மூத்த ஊடகவியலாளர் ஒருவர்.

அண்மையில் கூட எரியும் நெருப்பினுள் பச்சிளம் குழந்தையொன்றை வீசி கொல்ல முற்பட்டுள்ளார் இளம் தாயொருவர். ஏற்கனவே தனக்குப்பிறந்த இரட்டைக்குழந்தைகளை கொன்று புதைத்த தாயொருவரும் கைதாகி சிறையிலுள்ளார்.

ஒட்டுமொத்தத்தில் வன்னிப்பெண்கள் மீது உளவியல் யுத்தத்தைத் திணிப்பதில் அரச படைகளும் அவர்களது ஒட்டுண்ணிகளும் வெற்றி கொள்கின்றன. தடுப்பிலுள்ள முன்னாள் போராளிகளது மனைவிமார் வறுமைகாரணமாக பாலியல் தொழிலில் ஈடுபடுவதாக கதைகளையும் அவர்களே வரைகிறார்கள். புலம்பெயர் உறவுகளையும், தடுப்பிலுள்ள போராளிகளினதும் உளவரணை சிதைப்பதற்கே திட்டமிட்டு இவ்வகைப்பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறான செய்திக்கதைகளை ஆய்வு செய்யாது அறிக்கையிடும் தமிழ் ஊடகங்கள் கூட குற்றவாளிகளை அடையாளப்படுத்தத் தவறி விடுகின்றன.

மறு புறத்தே வன்னியில் மீள் குடியமர்கின்ற குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகளை ஏற்படுத்தி வழங்க ஐ.நா. உதவியமைப்புக்கள் உள்ளிட்ட தரப்புகளும் தவறியே விட்டன. ஜனாதிபதி செயலணிக்குழு, பாதுகாப்பு அமைச்சு என்னும் பெயரில் அரசு தமக்கு முட்டுக்கட்டைகள் போடுவதாக அவர்கள் கூறிக்கொள்கிறார்கள். ஆனாலும் பெரும்பாலும் பதவிகளையும் ஆசனங்களையும் தக்கவைத்துக்கொள்வதற்காக வவுனியாவிலோ, யாழ்ப்பாணத்திலோ தங்கி விடவே அவர்களுள் பெரும்பாலானோர் விருப்பம் கொண்டுள்ளனர்.

வன்னியில் தனது இராணுவ ஆட்சியை சத்தமேதுமின்றி அரசு வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருக்கின்றது. நடமாடுவதற்கும், பேசுவதற்குமென அனைத்து உரிமைகளும் மறுக்கப்பட்டவர்களாகவே வன்னி மக்கள் உள்ளனர். மக்களுக்காக சேவையாற்ற வேண்டிய அரச நிர்வாகம் பொம்மையாக்கப்பட்டுள்ளது. அவ்வாறே அரச அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர். சாதாரண புள்ளிவிபரம் ஒன்றைக் கூறுவதற்குக் கூட படை அதிகாரிகளது அனுமதியை எதிர்பார்க்கும் அரச அதிகாரிகளே பதவியில் உள்ளனர். அவ்வாறானவர்களால் மக்களது தேவைகளைப்புரிந்து கொள்ளவோ, நிறைவேற்றவோ முடியாதென்பது தெரிந்ததே.

நாங்கள் இலங்கையர்கள், ஒருதாய் வயிற்றுப்பிள்ளைகள் என ஜனாதிபதி முதல் மல்வத்தை பீடாதிபதி வரை கூறுவது அவரவர் நலன்கருதியே. என்றுமே இணைய முடியாதவையாகவே சிங்களமும் தமிழும் உள்ளன. அண்மையில் நாவாந்துறையில் கட்டவிழ்த்து விடப்பட்ட அரச இராணுவ பயங்கரவாதம் அதனையே வெளிப்படுத்தி நிற்கின்றது. தமிழர்கள் தமக்கான தெரிவை பெற்றுக்கொள்ள கஷ்டப்படத்தேவையில்லை. சிங்களவர்களே அதனை ஏற்படுத்திக் கொடுத்து விடுவார்கள் என்பதே இப்போதுள்ள உண்மையாகும்.

- பாவலன்

# கவர்ச்சித் தோழிகள் குத்தாட்டம்

**தென்னிந்திய** சினிமா வட்டாரத்தில் மிகவும் நெருக்கமான தோழிகள் வரிசையில் ஸ்ரேயா, ரீமா சென் ஆகிய இரண்டு பேரும் முக்கியமானவர்கள். சினிமா பார்ட்டிகளில் உற்சாக பானம் அருந்தி விட்டு இவர்கள் செய்யும் அட்டகாசங்கள் நாடெங்கும் பிரபலம். இவர்களது நட்பை பற்றி கேள்விப்பட்ட இயக்குநர் சுசீந்திரன், தற்போது விக்ரமை வைத்து இயக்கி வரும் 'ராஜபாட்டை' படத்தில் இவர்களைப் பயன்படுத்திக்கொள்ள முடிவு செய்தார். ஸ்ரேயா, ரீமா சென் இருவரையும் தொடர்பு கொண்ட சுசீந்திரன், விக்ரமுடன் ஒரு பாடலில் இரண்டுபேரும் சேர்ந்து குத்தாட்டம் போட தயாரா? என்று கேட்க, உடனே ஒகே சொன்னார்களாம். இதனால் குத்துப் பாடலுக்கான ஒரு சூழ்நிலையை திரைக்கதையில் வலிந்து உருவாக்கியிருக்கிறார் சுசீந்திரன். இந்த குத்துப் பாடலுக்காக ரீமா, ஸ்ரேயா இருவருக்கும் தலா 15 லட்சம் சம்பளம் பேசப்பட்டுள்ளது. இந்தப் பாடல் காட்சிகளை ஜப்பானில் படம்பிடிக்க தயாராகி வருகிறது 'ராஜபாட்டை' படக்குழு. மார்க்கெட் இழந்த கவர்ச்சி தாரகைகளை சுசீந்திரன் பயன்படுத்திக் கொள்ளும் ஸ்டைலே தனிதான். இந்த கவர்ச்சிப் புயல்களால் ஜப்பான் மீண்டும் குலுங்க போகுது.



ராஜபாட்டை



தடையறத் தாக்க

# குளிரைக்கண்டு அசராத அழகு தேவதை

**விஷால்,** சமீரா ரெட்டி நடிப்பில் வெளிவர இருக்கும் படம் 'வெடி'. பிரபுதேவா இயக்க, விஜய் ஆண்டனி இசையமைத்து இருக்கிறார். சன் பிக்சர்ஸ் வெளியீடான இப்படத்தின் பாடல் காட்சிகள் படமாக்கப்பட்டன. விஷால், சமீரா ரெட்டி அடங்கிய 30 பேர் அங்கு படப்பிடிப்பிற்காக சென்றனர். விஷாலை தவிர படக்குழுவினரில் கிட்டத்தட்ட அனைவருக்குமே கடும் குளிரால் உடல்நிலை சரியில்லாமல் போய் விட்டதாம். சுமார் 7 நாட்களில், படத்தின் 2 பாடல் காட்சிகளை அங்கு கஷ்டப்பட்டு படமாக்கி இருக்கிறார்கள். அங்கு சீன எல்லையில் அமைந்துள்ள ஏரியின் அருகே படப்பிடிப்பு நடத்தி இருக்கிறார்கள். படக்குழுவினர் அந்த குளிரிலும் சேலை அணிந்து பாடலுக்கு நடனம் ஆடி இருக்கிறார் சமீரா. படத்தின் பணிகளை முடிக்க வேண்டும் என்று கருதி தனது உடல்நிலைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் நடித்து கொடுத்தார் என்று புகழ்கிறது படக்குழு.





கலவரம்

- ★ சர்வதேச கலைஞர்களை வைத்து உருவாக்கும் 'ஹிப் ஹப்' இசை ஆல்பத்தை அடுத்த ஆண்டு வெளியிட உள்ளார் யுவன் சங்கர் ராஜா.
- ★ 'நாடோடிகள்' படத்தில் இணைந்த சமுத்திரக்கனி, அனன்யா, அபிநயா மூவரும் மலையாளத்தில் உருவாகும் 'தி ரிப்போர்டர் 'படத்தில் மீண்டும் இணைகின்றனர்.
- ★ விக்ரம், அனுஷ்கா நடிக்கும் புதிய படத்தை இயக்கும் விஜய், இதன் படப்பிடிப்பை லாஸ் ஏஞ்சல்ஸில் நடத்த உள்ளார்.
- ★ 'இஷ்டம்'படத்துக்காக விமல்,நிஷா அகர்வால் நடித்த லிப் டு லிப் முத்தக்காட்சி படமாக்கப்பட்டது.
- ★ '6' படத்திற்காக உடல் எடையை குறைக்கும் ஷாம் , புது கெட்டெப்பில் நடிக்கிறாராம்.



மரீனா

# நிர்வாணக் காட்சி தப்பில்லை

## பத்மப்பிரியா

**தமிழில்** நல்ல படங்களில் நடித்த திருப்தி இருக்கிறது. ஹீரோயின் சாரதா வாழ்க்கையை மையமாகக் கொண்டு ஜெயராஜ் இயக்கத்தில் நடித்துள்ள மலையாள படம் 'நாயிகா'அடுத்து வரவுள்ளது. விரைவில் நியூயோர்க் யுனிவர்சிட்டியில் எம்.ஏ. படிப்புக்காக அமெரிக்கா செல்கிறேன். அதற்காக நடிப்பை விட்டுவிட்டேன் என்று அர்த்தமில்லை. ஒவ்வொரு விடுமுறையின் போதும் நான் இங்கு வருவேன். அப்போது படங்களில் நடிப்பேன். நான் சிறந்த நடிகை கிடையாது. இன்னும் நிறைய செய்யவும் கற்கவும் வேண்டி உள்ளது. கிளாமர் வேடங்களில் நடிப்பதில் எனக்கு கஷ்டமில்லை. வேடத்துக்கு முக்கிய தேவையென்றால் நிர்வாணமாகக் கூட நடிக்கலாம். கவர்ச்சி பெண்களுக்கு முக்கியம் தான். ஆனால் பெண்களை போகப் பொருளாக யார் பார்த்தாலும் அது பிடிக்காது.

# மீண்டும்

## இந்த வாய்ப்பு எனக்குத்தான்

**திருமணத்துக்கு** பிறகு நடிகைகள் மவுசு குறைவது சகஜம். சிலர் மீண்டிருக்கிறார்கள் அதில் நானும் ஒருத்தி என்கிறார் சோனியா அகர்வால்.

என் வாழ்க்கையில் ஏற்பட்ட திருப்பங்கள் எதிர்பாராதவை . மீண்டும் சினிமாவில் ஹீரோயின் வேடம் எதிர்பாராதது என்றாலும் எனது காத்திருப்புக்கு கிடைத்த பலன். 'வானம்' படத்தில் சிறிய வேடம். 'ஒரு நடிகையின் வாக்குமூலம்'படத்தில் ஹிரோயின். இதில் 4 மாறுபட்ட மேக் அப் அணிகிறேன். மானத்தை மறைக்க தாவணி வாங்கக் கூட முடியாமல் கஷ்டப்படும் கிராமத்து ஏழைப் பெண் பாத்திரம். அந்தக் காட்சி நெல்லூரில் படமானது. அடுத்து நகருக்கு வந்து சினிமா வாய்ப்புக்காக கம்பெனிகளில் வாய்ப்பு தேடும் தோற்றம். அடுத்து நடிக்க வாய்ப்பு கிடைத்து ஒரே நாளில் புகழின் உச்சிக்கு செல்கிறேன். அப்போது கிளாமர் தோற்றம் இருக்கிறது. அது சஸ்பென்ஸ்.



கிளாமராக நடிப்பது எல்லோருக்கும் வாய்ப்பு கிடைப்பதில்லை. அதற்கு அழகான உடலமைப்பு வேண்டும். மீண்டும் என்னை அதற்கு தகுதியாக்கிக் கொண்டேன்.

# திரைப்பட விமர்சனம்




## எங்கேயும் எப்போதும்

'எங்கேயும் எப்போதும்' ஹாலிவுட் தயாரிப்பு நிறுவனமான FOX ஸ்டூடியோவுடன் ஏ . ஆர். முருகதாஸ் இணைந்து தயாரித்திருக்கும் படம். ஜெய், அஞ்சலி, சரவ், அனன்யா நடிப்பில் புதுமுக இயக்குனர் சரவணன் இயக்கியிருக்கிறார். 'எங்கேயோ எப்போதோ' (சமீப காலங்களில் அடிக்கடி) கேள்விப்படும் பேரூந்து விபத்தினை மையமாக வைத்து, இரண்டு காதல் ஜோடிகளின் கதைகளையும் இணைத்து ரசிக்கும்படியாக திரைக்கதை அமைத்திருக்கிறார் இயக்குனர்.

அவ்வப்போது தமிழில் சில நல்ல படங்கள் வந்து கொண்டிருக்கின்ற பட்டியலில் இந்த படம் இருக்கிறது. சென்னையிலிருந்து திருச்சிக்கு ஒரு பஸ், திருச்சியிலிருந்து சென்னைக்கு ஒரு பஸ் இரண்டும் விழுப்புரம் அருகே நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின்றன. திருச்சியிலிருந்து சென்னைக்கு பயணிக்கும் ஜெய், அஞ்சலி, சரவ் சென்னையிலிருந்து திருச்சிக்கு பயணிக்கும் அனன்யா. இவர்கள் யார்? இந்த விபத்து இவர்கள் வாழ்க்கையில் நிகழ்த்தும் தலைகீழ் மாற்றங்கள் என்ன என்பதுதான் கதை.

படம் பார்க்கும் ஒவ்வொருவரையும் இனி வேகமாக வாகனம் ஓட்டக் கூடாது என உணரவைத்து விடுகிறது படம். ஒரு விபத்தை பற்றிய தெளிவான பார்வையையும், அதனால் ஏற்படும் பாதிப்புகளையும், அந்த விபத்தினை எதிர்கொள்வோரின் மனநிலையையும், விபத்தினால் உயிர் இழப்பவர்களின் குடும்பங்கள் படும்பாட்டினையும் தெளிவாக காட்சிப்படுத்தி இருக்கிறார்கள்.

திருச்சியில் இருந்து நேர்முகதேர்வு ஒன்றுக்கு வரும் அப்பாவி பெண்ணாக அனன்யாவும் கணினி சாப்ட்வேர் இஞ்சினியராக சரவும் அழகாக பொருந்துகிறார்கள். ஆட்டோவில் போவோம் என்றவுடன் 'அக்கா ஆட்டோவுல தான் போக சொன்னாங்க' என்னும் போதும், நகரத்து பெண்களை பார்த்தவுடன் வயிற்றை எக்கிக் கொண்டு நடக்கும் இடத்திலும் அனன்யா அசத்துகிறார். இவ்வளவு எச்சரிக்கையாக இருக்கும் பெண் அக்காவுடனே வந்திருக்கலாமே என்ற எண்ணம் இடையிடையே வந்தாலும் ஒவ்வொரு காட்சியையும் ரசிக்கலாம். நகரத்து இளைஞனைக் கண் முன்னே கொண்டு வரும் சரவ் சென்னையில் இருப்பவர்களுக்கு வக்காலத்து வாங்கும் போது கைதட்டல் பெறுகிறார்.

சரவ் - அனன்யா ஜோடியை விட நம்மை அதிகம் ஈர்ப்பது ஜெய் - அஞ்சலி ஜோடியே. அதிலும் குறிப்பாக அஞ்சலி நடிப்பு பசிக்கு நல்ல தீனி கிடைத்திருக்கிறது. அவர் கேரக்டர் அசாதாரணமாக இருந்தாலும் அழகாக செதுக்கப்பட்டிருக்கிறது. காதலை சொல்லும் ஜெய்யை சுத்த விடுவதும், அவர் சம்பளப் பணம் முழுவதையும் செலவு செய்வதும், திருமண பதிவு பத்திரமா என கேட்கும் ஜெயிடம் உடல் தான படிவத்தில் சைன் வாங்குவதும் என அஞ்சலி கைதட்டல் வாங்கும் இடங்கள் நிறைய. அஞ்சலி சொல்லும் சொல்லுக்கெல்லாம் தலையாட்டும் போது, நிறையப் பெண்கள், தனக்கு இப்படி ஒரு காதல்தான் அமைய வேண்டும் என்று விரும்பினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஒரு பஸ் விபத்தாகும் காட்சி மிக அற்புதமாக எடுக்கப்பட்டுள்ளது. அடிக்கடி பஸ்ஸில் பயணிப்பவர்கள் இந்த படத்தை தியேட்டரில் பார்த்தாலும் பயம் கொள்ளாமல் இருந்தால் சரி.

சென்னை நகரை காண்பிப்பது முதற் கொண்டு, இரு பேரூந்திற்குள் நடக்கும் விஷயங்களை நம் அருகே இருந்து நடப்பது போல் காண்பித்திருப்பதை விட, அந்த பேரூந்தில் நாமும் ஒரு பயணியாய் பயணிக்க வைத்திருக்கும் வேல்ராஜின் ஒளிப்பதிவிற்கு தைரியமாய் ஒரு சபாஷ் போடலாம்.


ஏ.ஆர். முருகதாஸின் உதவி இயக்குனராக இருந்த சரவணன், குருவிற்கு ஏற்ற சிஷ்யன் என்பதை இப்படத்தில் நிரூபித்திருக்கிறார். பிளாஷ்பேக்கிற்குள் பிளாஷ்பேக் என்றாலும் அதை தனது திறமையான திரைக்கதையால் நேர்த்தியாக கதை சொல்லி இருக்கிறார்.

இத்தனை சம்பவங்களையும் தன் அழகான வசனத்தால் கோர்த்து மாலையாக்கி தந்திருக்கிறார். இவரை நம்பி படம் எடுத்த தயாரிப்பளார் ஏ.ஆர்.முருகதாஸிற்கு எங்கேயும் எப்போதும் நன்றி சொல்லலாம்.

மொத்ததில் எங்கேயும் எப்போதும் ரசிகர்களின் மனதில் எப்போதும் இடம்பிடிக்கும்.

ராஜ்

சிறுகதை



# புதிய பாதை

நவாலியூரான்

அந்த ஊரில் அனேகராலும் பேசப்படும் நாயகன் தேவன் தான். இளம் வயது வாலிபன் வயது இருபது. வாட்டசாட்டமான ஆண்மகன் என்றே சொல்ல வேண்டும்.

பொடி பில்டர் என்று சொல்லும் அளவுக்குக் காணப்படுவது அவனது தோற்றம். பாரந்தூக்கும் பயிற்சி செய்து தனது உடம்பை அவன் கட்டியெழுப்பியவனல்ல. அவனுக்கு அது பரம்பரைச் சொத்து. அவனின் தகப்பன் வேலுப்பிள்ளையும் அப்படித்தான். வேலுப்பிள்ளை இப்போதும் இருக்கிறார். உழைக்க முடியாத நிலை. இந்தக் குடும்பத்தில் உழைப்பவன் தேவன் மட்டுந்தான்.

குடும்பத்தில் மூத்தவன் தேவன். அடுத்து பிறந்த மூவரும் பெண்கள். அவர்களுக்குப் பிறகு இப்போது றாஜன். அவனுக்கு ஆறு வயது. ஜி.சி.ஈ சாதாரண தர பரீட்சைக்கு ஒரேயொரு முறை தோற்றிய மூத்த மகள் தாரணி அந்தப் பரீட்சையில் தோல்வியடைந்ததால், பாடசாலை வாழ்க்கைக்கு முழுக்குப் போட்டுவிட்டுத் தாயாரின் சுவையான சமையலுக்கு வித்தாகவே விளங்கினாள்.

தாரணிக்குப் படிப்பு வராது என்ற கவலை வேலுப்பிள்ளைக்கும் தாயார் திலகவாணிக்கும் இருக்கத்தான் செய்தது. 'ஆணாக இவள் பிறந்திருந்தாலாவது தேவனோடு வேலைக்கு அனுப்பியிருக்கலாம். எங்களுடைய கஷ்டத்தையும் போக்கியிருக்கலாம்' என்பது திலகவாணியின் சிந்தனை.

''அதுக்கென்னப்பா செய்யிறது, பெண்ணாய்ப்பிறந்தாலும் புத்தியும் வேணுமே படிச்சு வேலை பாக்கிறதுக்கு. ஏதோ உந்தக் கூப்பனும் இருக்கிற படியாலை சமாளிக்கிறம். இல்லாட்டி , நானும் இப்படி இருக்கிற மாதிரிக்கு...'' இது தான் திலகவாணியின் சிந்தனைக்கு வேலுப்பிள்ளை கொடுத்த பதில்.

தேவனின் உழைப்பில் ஒரு கொஞ்சம் இவர்களுக்கும் சேருவதால் ஏதோ ஒருவிதமாகச் சமாளித்து வருகிறாள் திலகவாணி. அன்றும் தேவனின் உழைப்பைத் தான் எதிர்பார்த்திருந்தாள்.

மாலை நேரம் வீடு வந்ததும் காசைக் கேட்டு, மாவு வாங்கி வைத்தால் நாளைக் காலை றொட்டியோ, பிட்டோ செய்து பிள்ளைகளையும் புருஷனையும் சமாளிக்கலாம் என்ற நினைவோடு குசினிக்குள் புகுந்தாள்.

தாரணியின் உதவியோடு சமைத்துக் கொண்டிருந்த அவளுக்கு அதிர்ச்சி செய்தி ஒன்றைக் கொண்டு வந்தான் கார்ச் சாரதி குணசிங்கம்.

சேதியைக் கேட்டதும் விறுவிறுத்தது அவளின் உடம்பு. கதறிக்கதறி அழுதாள் பாவம். அவளைத் தொடர்ந்து தாரணி, தங்கை பாமினி, மற்றத்தங்கை ராகினி தம்பி றாஜன் என்று எல்லோரும் குளறி அழ அதைத் தாங்க முடியாமல் விம்மி வெடித்தார் வேலுப்பிள்ளை.

அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் இச்செய்தியைக் கேட்டதும் ''எங்களின்ர மேலிலை மசுக்குட்டி ஊந்து தோலைத் தடிக்கப் பண்ணி எங்களை அடிக்கடி சொறியச் செய்யுமே''அதேமாதிரி உவன் எங்களுக்குச் செய்த சேட்டை, கொடுமை...? அவன்ரை அட்டகாசம் அப்பப்பா...?

''உதோடை உவன் துலைஞ்சானெண்டால்...?''

''கொஞ்சப்பாடுபடுத்தினானே எங்களை. இப்ப பாத்தியளே இவனுக்குக் கிடைச்ச தண்டனையை...''

''தெய்வம் நிண்டறுக்குமெண்டு சும்மாவே சொன்னவை அந்தக் காலத்திலை...''

''முடிஞ்சானெண்டால் ஒரு நிம்மதி இந்த ஊருக்கு'' என்றெல்லாம் பேசிக் கொண்டார்கள் தத்தமக்குள்.

இது நடந்தது ஒரு சனிக்கிழமை. ராகினியைக் கூட்டிக்கொண்டு குணசிங்கத்தின் காரில் ஏறி யாழ்.பொது வைத்தியசாலையை அடைந்தாள் திலகவாணி.

ஒப்பறேசன் தியேட்டருள் மும்முரமாக நடந்துகொண்டிருந்தது வேலை. ஒப்பறேசனுக்காக எடுத்துச் செல்லப்பட தேவனைப் பார்க்கத் துடித்தாள் ராகினி.

அவளது கண்களிலே நீர்த்துளிகள். கட்டுப்படுத்த அவளால் முடியவில்லை. பொலு பொலென்று நிலத்திலே வீழ்ந்தன.

'ஆஸ்பத்திரிக்குப் போறது சரி; அழுது குழறி மயக்கம் போட்டு விழாமல் வீட்டுக்கு வாங்கோ'என்று ஒரு கையும் காலும் வழங்காமல்ப் பாயும் படுக்கையுமாயிருக்கும் தனது தகப்பன் சொன்னதை நினைவுபடுத்திக் கொண்டாள் அவள்.

''அண்ணாவை ஒருக்கால்ப் பாக்கவேணும் அம்மா''. ராகினியின் ஆசையைத் தாயினால் பூர்த்தியாக்க முடியவில்லை. அழமட்டுமே முடிந்தது.

ஒப்பறேசன் தியேட்டரில் இருந்து ஒரு முப்பது யார் தொலைவில் ஒரு கூட்டம். அந்தக் கூட்டத்தோடு சேர்ந்துவிட்டாள் திலகவாணி. என்ரை பிள்ளைக்கு அப்பிடி இப்படியெண்டு ஏதாவது நடந்தால்...?'' கொஞ்சம் ஆத்திரமாகவே வார்த்தைகளைக் கக்கினாள் திலகவாணி.

எந்த விஷயத்திலும் அமைதி, ஆராய்ச்சி என்று எதுவும் இல்லாது வாய்க்கு வந்தபடி ஏசி, ஒரு தலைபட்சமாகத் தனது குடும்பத்திற்குச் சாதகமாகவே வாதாடிபிவள்.

இந்த இடத்திலும் அவளது பேச்சு அந்த தொனியில் தான் அமைந்தது.

கூட்டத்துக்குள் நின்ற ஒருவன்,

''அம்மா! நீதி நியாயம் எண்டு ஒண்டிருக்கு. அதையெல்லாம் ஆராய்ச்சி பண்ணி அமைதியோடை நியாயத்தோடை எதையும் செய்யிறது தான் பண்பு. அதை விட்டுக் கண்டபடி பேசிறது அழகில்லை. நடந்ததைத் தெரிஞ்சு பேச வேணும். நடந்ததை நானும் பார்த்தனான்'' என்றான்.

இதைக் கேட்டதும் துள்ளினாள் திலகவாணி. அவளது உள்ளுக்குள்ளிருந்து பூகம்பம் போலப் பீறி வெடித்து ஆத்திரம்.

''அம்மா, நான் அவர்களுக்கோ, உங்களுக்கோ பழக்கமானவனில்லை. அவையளுக்காக வாக்களித்துப் பேசி அவையிட்டைப் பணம் வாங்கவோ, உங்களுக்காக வாக்களித்துப் பேசி உங்களிட்டைப் பணம் வாங்கவோ நான் வரேல்ல. நான் ஆஸ்பத்திரிக்கு வந்தனான். வந்த வழியிலை என்ரை கண்ணாலை கண்டதைத் தான் சொல்லுறன். ''என்று அவன் சொன்னதும் வந்த ஆத்திரத்தை வாய்க்குள் பொத்தியபடியே கதை கேட்டாள் திலகவாணி.

''குறுக்கு றோட்டால வாற வாகனங்கள் ஸ்பீட்டைக் குறைச்சு நிறுத்தி, ஏதாவது வாகனங்கள் போகுதா வருகுதா எண்டு பாத்துத்தான் மெயின்றோட்டுக்கு ஏற வேணும் - அதுவும் சரியான சைற்றாலை... உங்கடை மகன் என்னெண்டால், அப்பிடிப் பார்க்காமல்ப் பிழையான சைற்றாலை திருப்பி அதுவும் படுவேகமாகத் திருப்பி மெயின் றோட்டுக்கு ஏறினான். சரியான சைற்றாலை வந்த காரிலை மோதினால் எப்படியிருக்கும்? சயிக்கிளிலிருந்த கீழை விழுந்ததாலை உங்கட மகன்ரை மண்டை வெடிச்சு ஒரே இரத்தம்''என்றான்.

''அம்மா! அட்வான்ஸ் லெவல்ச் சோதனை எடுக்கிறதுக்கு வந்த பிள்ளையின்ரை கார் தான் அது. காரிலை வந்த பிள்ளை பண்புள்ள பிள்ளையெண்டபடியாத்தான் உங்கடை மகனை உடனடியாகத் தன்ரை இரத்தத்தையும் இரத்த வங்கிக்குக் குடுத்திருக்கு உங்கிட்ட மகனைக் காப்பாத்திறத்துக்காக அதோடை, தனக்குத் தெரிஞ்ச இன்னொரு ஆளையும் காசுக்குப் பிடிச்சு அந்த இரத்தத்தையும் இரத்தவங்கிக்கு குடுத்திருக்கு உங்களை ஏத்தி வாறதுக்காகத் தங்கடை காரையும் அனுப்பியிருக்கு. உங்கடை மகன்ர அடையாளஅட்டையையும் விபத்து நடந்த இடத்திலை பொறுக்கிப் பத்திரமாக வைச்சுத் தங்கடை கார்ச்சாரதி குணசிங்கம் மூலமாகத் தான் உங்கடை வீட்டுக்கு அனுப்பினது அந்தப்பிள்ளை''

தான் கேட்ட அனைத்தையும் அவன் சொன்னபோது வாயடைத்துவிட்டாள் திலகவாணி. அவளது முகத்திலே தோன்றிய கடுகடுப்பு மாறி வெடு வெடுப்புடன் ஓடி ஒரு வித சாந்தம் இழையோடத் தொடங்கியது சோகமும் அதனோடு சேர்ந்து கொண்டது.

''அந்தப் பிள்ளை தன்ரை சோதனையைப் பற்றிக் கூடக் கவலைப்படாமல், இரத்தம் குடுத்துக்கொண்டிருக்கே தன்ரை தாய் தகப்பனுக்கும் சொல்லாமல்...'' அதை எண்ணி நிறுத்துக் கதையுங்கோ'' இப்படிச் சொன்னான் அவன்.

அந்த இருபத்தைந்து வயது இளைஞன் சொன்னதைக் கேட்ட திலகவாணி ஓடினாள் அந்த இடத்தை விட்டு. இரத்தத்தைக் கொடுத்து விட்டு, மெதுவாக நிமிர்ந்தான் திவ்வியன், திலகவாணியின் கண்களிலிருந்து பொலு பொலுவென்று வடிந்துகொண்டிருந்தது கண்ணீர்.

''அம்மா...., நீங்கள்...?''

''தேவனின் அம்மா...''

''நடக்க வேண்டியதெல்லாம் நடந்திட்டுதம்மா. உங்கடை மகன் தேவனுக்குக் கட்டாயம் சுகம் கிடைக்கும் உங்களிட்ட நான் மன்னிப்புக் கேட்கிறன்''. அதுக்குமேல் பேச முடியாது தத்தளித்த அவனின் வாய் மூடப்பட்டு விட்டது. அவனது கண்களோ நீரைக் கொட்டி நின்றன. அந்தக் காட்சியைக் கண்ட திலகவாணியின் மனம் நெகிழ்ந்தது. அவளது மனமே இப்படிப் பண்புள்ள ஒரு பிள்ளை எனக்கில்லையே என்று கவலைப்பட்டது.

அவளது அக்கம் பக்கத்து வீட்டார் அனைவரும் ஆச்சரியப்படத்தக்கதாக அவள் மாறிவிட்டாள். இந்தச் சம்பவத்திற்குப் பிறகு சுற்றாடலிலே அவள் தான் தலைமகள்.

அன்று தைப்பொங்கல் நாள் .சுகப்பட்டு வீடு வந்துவிட்டான் தேவன். விலைமதிக்கமுடியாத பொங்கல் பரிசு என்று வேலுப்பிள்ளையும் திலகவாணியும் தங்களுக்குள் பேசி மகிழ்ந்தார்கள். தனக்குமொரு பொங்கல் பரிசு கிடைத்ததாகவே திவ்வியனும் உணர்ந்து மாபெரும் மகிழ்ச்சியடைந்தான். இப்போது தேவனும் திவ்வியனும் இணைபிரியா நண்பர்கள்:

திவ்வியனின் பண்புத்தனத்துக்கு முன் தேவனின் சண்டித்தனம் தீயினால்ச் சுடப்பட்ட நச்சுப் பாம்பாகிவிட்டது. கண்டவர்க்கெல்லாம் அடித்து வேதனைப்படுத்தி வேண்டாத வினை செய்து, சண்டித்தனத்தால் எதையும் சாதிக்கலாம் என்று நினைத்திருந்த தேவன், தனது சண்டித்தனம் மங்கியதையும் திவ்வியனிடம் காணப்படும் நல்ல பண்புகள் தன்னிடம் பொங்கியதையும் உணர்ந்தான் - நல்லவனாக மாறி விட்டான்.

# அரசியல் அமைப்பில் திருத்தங்கள் (பகுதி 17)

(சென்ற வாரத்தொடர்ச்சி)

ஒரு அரசகரும மொழி (Official Language) என்பதற்கும் நிர்வாக மொழி (Administrative Language) என்பதற்கும் இடையில் எவ்வளவோ வேறுபாடுகள் உண்டு. 1958 ஆம் ஆண்டு பண்டாரநாயக்கா கொண்டுவந்த 28 ஆம் இலக்க தமிழ் மொழிகள் நியாயமான ஏற்பாடுகள் சட்டமும், காலஞ்சென்ற பிரதமர் டட்லி சேனநாயக்கா1966 இன் முற் பகுதியில் கொண்டு வந்த தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் தமிழ்மொழி சட்ட ஏற்பாடுகளும் வடக்கு - கிழக்கில் தமிழை ஏற்கனவே நிர்வாக மொழியாக்கின. அவை யாவும் கிடப்பில் போடப்பட்டுள்ளன. இதே போல் தமிழ் மொழி தேசிய மொழி என்பதும் 13 ஆவது திருத்தச்சட்டம், 16 ஆவது திருத்தச் சட்டம் என்பனவும் இப்போதும் கிடப்பில் தான் போடப்பட்டுள்ளன. இதன் போது தூசி தட்டக் கூடிய ஒரு அரசியல் ஞானியை இலங்கை மக்கள் இன்னமும் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

### 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கு பதினேழாவது திருத்தம்

தென்னாசிய பிராந்தியத்தில் முதல் தடவையாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஜே.ஆர். இலங்கையில் அறிமுகம் செய்து வைத்தார். பிரித்தானிய அரசியல் யாப்பில் கொஞ்சம் அமெரிக்க அரசியல் யாப்பில் இன்னும் ஒரு கொஞ்சம் பிரான்சு நாட்டு பிரதான அரசியல் முறைமையான ஜனாதிபதி - பிரதமர் இருவரும் கொண்ட அரசியல் யாப்பு என்ற அம்சம். இவை யாவற்றையும் ஒரு கலவையாக்கி அவையாவும் பல பரிணாமங்களையுடையவை என்றார் ஜே.ஆர். இதனைப்பார்த்த சபாநாயகர் ஆனந்ததிஸ்ஸ டீ அல்லிஸ் ஜே.ஆரின் ஆளுமை சிறப்பானது ஆசியாவிலேயே மேன்மையானது என்றார்.

அதாவது "His (J.R.J) Personality is UNQUESTIONABLE IN ASIA" என்றார். பிரெஞ்சு ஜனாதிபதி டீகோல் (DE GALLE) அணி வகுப்பு மரியாதை ஏற்று செங்கம்பளம் மீது நடந்து வரும் போது பிரெஞ்சு நாட்டு பெண் பிரதமரான கொரோசேன் நூறு அடி தூரத்தில் இடைவெளிவிட்டு பின்னே வருவது போல இலங்கை ஜனாதிபதிக்கும் - இலங்கைப் பிரதமருக்கும் இடையில் இடைவெளி இருக்கும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி தலைவரை ஏற்றிப் போற்றினார்கள் அவரது கட்சித் தொண்டர்கள் ஜே. ஆரை ஒரு முடிசூடா மன்னன் என வலது சாரிகள் புகழ்ந்தார்கள்.இடது சாரிகள் ஜே. ஆரை ஒரு சர்வாதிகாரி என ஹிட்லரோடு ஒப்பிட்டார்கள். அதற்குப் பதிலளித்த ஜே.ஆர் உண்மைதான் நான் ஜனநாயக ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்ட சர்வாதிகாரிதான் என்றார். "YES Of Course, I am an elected Dictator through Democracy" என்றார்.

1972இல் இலங்கையின் அரசியல்யாப்பு விதிகளின் பிரகாரம் ஒரு பிரதமரை மக்கள் தெரிவு செய்தார்கள். அவர் ஒரு ஜனாதிபதியை நியமித்தார். ஆனால் 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பின்படி ஒரு ஜனாதிபதியை மக்கள் தெரிவு செய்தார்கள். அவர் ஒரு பிரதமரை நியமித்தார். அதாவது 1972ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் படி ஜனாதிபதி ஒரு 'றப்பர் ஸ்டாம்' 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் படி பிரதமர் ஒரு 'றப்பர் ஸ்டாம்ப்' என அரசியல் அமைப்பின் நிபுணர் என்று வர்ணிக்கப்பட்ட கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா வர்ணித்தார். இந்த யாப்புகள் இரண்டையும் ஒப்பீடு செய்து கலாநிதி என். எம். பெரேரா, கலாநிதி ஏ.ஜே.வில்சன், கலாநிதி நீலன் திருச்செல்வம் , கலாநிதி றோகன் எதிரிசிங்க, பேராசிரியர் பேட்றம் பஸ்தியாம்பிள்ளை என கல்விமான்கள் பல கட்டுரைகளை வரைந்தார்கள். பல புலமையாளர்களது விமர்சனங்களை உள்வாங்கிக் கொண்டு கடந்த பல ஆண்டுகளாக இந்த அரசியல் யாப்பு மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நடைமுறையில் இருந்து வருகின்றது.

இந்த யாப்புத் தொடர்பாக முன்வைக்கப்பட்ட பிரதானமான குற்றச்சாட்டு இந்த யாப்பு எத்தகைய நெகிழ்வுத்தன்மையும் அற்றது என்பதேயாகும்.

(தொடரும்)

## சட்டமும் சமூகமும் 44






சட்டம் தொடர்பான உங்கள் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
அனுப்பவேண்டிய முகவரி
யாழ் ஓசை
வீரகேசரி கிளைக் காரியாலயம்,
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

---

# யாழ். குடாநாட்டில் தடையின்றி மின்சாரம் கிடைப்பது எப்போது?

யாழ்.குடாநாட்டில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் மின்சாரத்துண்டிப்பால் மக்கள் சொல்லொணாத்துயரங்களும் கஷ்டங்களும் அனுபவித்து வருகின்றார்கள்.

இரவு நேரங்களில் மின்சாரம் துண்டிக்கும் வேளைகளில் திருடர்கள் வீடுகளுக்குள் புகுந்து அகப்பட்டதை சுருட்டிச் செல்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

இரவு நேரங்களில் மட்டுமல்ல பகல் வேளைகளிலும் சில நாட்களிலே பகல் முழுவதும் மின்சாரம் துண்டிக்கப்பட்டு வருகின்றது. இதனால் பகல் வேளைகளில் வேலை செய்யும் இடங்களில் கணனிகளுடன் தொடர்புடைய வேலைகள் தடைப்படுகின்றன. பகல் நேர விழாக்கள், வீட்டுக்கொண்டாட்டங்களிலும் இதனால் இடையூறு ஏற்படுகிறது.

இரவு நேரங்களில் திருடர்களுக்கு பயந்து இரவு முழுவதும் விழித்து இருக்கவேண்டியுள்ளதாக குடும்பஸ்தர்கள் கவலை தெரிவித்துள்ளனர். மாணவர்கள் இரவில் மின்சாரம் இல்லாது கற்றல் செயல்களில் ஈடுபடமுடியாது கஷ்டப்படுகின்றார்கள். மீண்டும் விளக்கு வெளிச்சங்களில் கற்றற் செயற்பாடுகளில் ஈடுபடவேண்டியுள்ளது என பாதிக்கப்படும் மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

யுத்த காலத்தில் கூட மின்சாரம் இரவு நேரங்களில் துண்டிக்கப்பட்டது இல்லை என மின் பாவனையாளர் ஒருவர் தெரிவித்தார். தற்போது வடக்கின் வசந்தம் என பாரிய அபிவிருத்தி வேலைகள் துரித கதியில் நடைபெற்று வரும் இக்காலத்தில் மின்சாரத்தை அடிக்கடி துண்டித்து மக்களை துன்புறுத்துகின்றது. இதே வேளை யாழ். குடாநாட்டில் வீதிகள் விஸ்தரிப்பு பணிகள் நடைபெற்று வருவதால் மின்கம்பங்கள் புதிதாக இடமாற்றம் செய்ய வேண்டியுள்ளது.

இடமாற்றம் செய்யும்போது மின்சாரம் துண்டிக்கப்படுகிறது. பின்னர் நீண்ட நாட்களின் பின்பே அதன் பணிகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.

தற்போது வீதிகளில் இரவு நேரங்களில் போக்குவரத்து செய்யும் வாகனங்கள் விபத்துக்குள்ளாகி வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது. இதற்கு காரணமாக வீதிகளில் வீதி விளக்குகள் இல்லாமையே ஆகும். மிக முக்கியமான சந்திகள் மின்சார வெளிச்சம் இல்லாமல் இருளில் மூழ்கியுள்ளன.

இது இவ்வாறு இருக்க யாழ். மண்டைதீவுப் பகுதியில் யுத்த அனர்த்தங்களால் துண்டிக்கப்பட்ட மின் இணைப்பு நீண்ட நாட்களாகியும் இன்னமும் மறுசீரமைப்பு செய்யப்படவில்லை.

இதனால் மின்சார பாவனையாளர்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். இது தொடர்பாக இப்பகுதி மக்கள் மின்சார சபை அதிகாரிகளுக்கு பல தடவை முறைப்பாடு செய்தும் எதுவித பலனும் கிடைக்கவில்லை. இவ்வூரில் மின் துண்டிப்பு தொடர் கதையாகவே இருந்து வருகின்றது.

அருகில் உள்ள அல்லைப்பிட்டி கிராமத்துக்கு மின்சாரம் மீண்டும் வழங்கப்பட்டபோதும் மண்டைதீவுக்கு ஏன் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை என பிரதேசவாசிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

ஆகவே இனிமேலாவது இரவு - பகல் வேளைகளில் மின்சாரத்தை துண்டிக்காது இருக்க சம்பந்தப்பட்ட மின்சார சபை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும். மின்சாரத்தை துண்டிப்பதால் சிறு கைத்தொழில்களும் இயங்காது இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடத்தில் பிரதேச சபை உறுப்பினர்களும் கூடிய கவனம் செலுத்த வேண்டியவர்களாக உள்ளனர் என்பதை இங்கு சுட்டிக்காட்டுகின்றோம்.

● வேல்ணை நிருபர்

## குறுக்கெழுத்துப் போட்டி 46

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | ■ |
| 08 | ■ | ■ | 09 | 10 | ■ | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | ■ | 17 | 18 | 19 |
| 20 | ■ | ■ | 21 | ■ | 22 | ■ | 23 |
| ■ | 24 | ■ | ■ | 25 | 26 | ■ | ■ |
| 27 | 28 | 29 | 30 | 31 | ■ | 32 | 33 |
| 34 | 35 | 36 | ■ | ■ | 37 | 38 | 39 |
| ■ | 40 | 41 | 42 | ■ | 43 | 44 | ■ |

**இடமிருந்து வலம்**

1. யாழ்ப்பாணத்தை பீதி கொள்ளச் செய்பவன்
9. விழி (திரும்பியுள்ளது)
11. மிகப்பெரிய
13. ஏற்றுமதிப் பொருள்
17. உடம்பு
25. பற்களின் இடைவெளி
27. பூ/மாதம்/நட்சத்திரம்
32. செவி
34. அருகிடம் (திரும்பியுள்ளது)
37. ஒரு மாதம்
40. பலம் (குழம்பியுள்ளது)
43. அற்பம்/சிறுதுண்டு/ உருளை

**மேலிருந்து கீழ்**

1. கோள்
4. விவசாயி நன்பன்
5. பழம் (தலைகீழ்)
7. நம் ஆயுட்காலத்தைத் தீர்மானிப்பவன் (திரும்பியுள்ளது)
12. இலைகளை தாங்குவது
17. வளி மறுபெயர்
24. உழைப்பால் இதை அடையலாம் (திரும்பியுள்ளது)
29. பல ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் தாவரம். (மாறியுள்ளது)
32. அரசாங்கத்தில் இதற்கும் ஒரு துறை உண்டு
33. ஆடைகளின் மூலப்பொருள்
37. பெரியோர்கள் வழங்குவது

**குறுக்கெழுத்துப் போட்டி 44க்கான விடைகள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ச | ர | வ | ண | ப் | பொ | ய் | கை |
| வ்ா | த | ம் | ■ | ■ | ல் | கா | ■ |
| ல் | ம் | சா | ப | ■ | லு | ■ | து |
| ■ | ■ | வ | ரி | சை | ■ | ம | ற |
| உ | ள் | ளி | ■ | க் | கு | ச | வு |
| றை | க | ■ | ளை | கி | ■ | ன் | ■ |
| ப் | ■ | ம | க | ள் | ■ | ■ | போ |
| பு | த் | தி | ■ | ■ | க | த | ர் |

## பாராட்டுப் பெறும் அதிஷ்டசாலிகள்

1. கா.பொ.இ.குலசிங்கம்
5ஆம் வட்டாரம்,
யாழ். நயினாதீவு

2. கே.அரசேஸ்வரன்
கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

3. செ.றொபேட்
114 1/1, நியூநாம் குயர்,
கொழும்பு 13,

**குறுக்கெழுத்துப் போட்டி 46க்கான விடைகளை எழுதி ஒரு வாரத்திற்குள் எமக்குக் கிடைக்கக் கூடியதாக தபால் அட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கவும்.**

அனுப்பவேண்டிய முகவரி
குறுக்கெழுத்துப் போட்டி
'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக்காரியாலயம்,
117, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பாராட்டுப்பெறும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர்கள் பிரசுரிக்கப்படும்.




என் நண்பன் தருமர் மாதிரி!
அப்படியா?
ஆமாம் சூதாட்டத்திலே எல்லாத்தையும் தொலைச்சிட்டான்!




நான் கொழும்புக்கு கிழிஞ்ச வேட்டியுடன் வந்தேன் இப்போது பத்து லட்சம் வச்சிருக்கேன்!
அத்தனைக் கிழிஞ்ச வேட்டிகளை எப்படிச் சேர்த்தீங்க?




அந்த நாய் பொம்பளைங்களைக் கண்டா ஜொள் ஜொள்ளுனு குரைக்குமடி!




அவர் ஒரு முன் ஜாக்கிரதையான ஆசாமி!
அப்படியா?
ஆமாம், ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆகும் போது, கிட்னி ரெண்டையும் பேங்க் லாக்கரிலே வச்சிட்டும் போவாரு!




என் மாப்பிள்ளை ஒரு மகா கஞ்சர்!
எப்படிச் சொல்லுறீங்க?
அவரது இரட்டை பிள்ளைகளைப் படம் பிடிப்பதற்கு ஒரு பிள்ளையப் படம் பிடித்தால் போதும் என்கிறார்!





எழுத்தாளர் வீட்டிலே அவருடைய கதைகளைத் திருடி வந்தேன்!
அட போப்பா, அது ஏற்கனவே திருடியதாச்சே!

# தடம் மாறும் யாழ்ப்பாணக் கலாசாரம்

காலமாற்றத்தினால் பெற்றோர் பிள்ளைகள் உறவு நிலைகளிலும் காத்திரமான மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. பெற்றோர் தமது பிள்ளைகள் குறித்தும் பிள்ளைகள் பெற்றோர் குறித்தும் சரியான பரஸ்பர புரிந்துணர்வை கொண்டிருக்காமையே பெற்றோர்-பிள்ளைகள் உறவு நிலை விரிசலடையக் காரணமாகும். இந்த நிலையினால் குடும்ப சமூகக் கட்டமைப்புக்கள் தகர்ந்து இறுதியில் பெற்றோர் வயோதிப மடங்களிலோ அல்லது அநாதரவான நிலையிலோ விடப்படும் சம்பவங்களும் பிள்ளைகள் சரியான வளர்ப்பில்லாததனால் எதிர்காலத்தில் அவர்களது நாளாந்த வாழ்வியல் நடவடிக்கைகளிலும் பாதிப்பினை ஏற்படுத்துகிறது. அதுமட்டுமன்றி சமூகவிரோத நடவடிக்கைகளிலும், கலாசார சீரழிவு நடத்தைகளிலும் இளவயதினர் ஈடுபட தூண்டப்படுகின்றனர்.

நவீன தொழில்நுட்பத்தின் வளர்ச்சியாலும் உலக மயமாக்கல் சூழலின் தாக்க வேகத்தினாலும் மக்களின் வேகமன வாழ்க்கை முறையாலும் உலக நாடுகளில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் இங்கும் பிரதிபலிக்கின்றன. இத்தகைய மாறுதல்கள் மக்களின் வாழ்வியல் கோலங்களிலும் நடத்தைக் கோலங்களிலும் பாரிய தாக்கங்களை, மாற்றங்களை செலுத்துகின்றன. உதாரணமாக நவீன விஞ்ஞானம் பிரசவித்த குழந்தையாக செல்லிடத் தொலைபேசியை குறிப்பிடலாம். தகவல் தொழில்நுட்ப உலகின் அசுர சாதனையாக செல்லிடத் தொலைபேசிகளின் வரவு தமிழரின் வாழ்வியல் நிலையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. செல்லிடத்தொலைபேசியினால் பல நன்மைகள் இருந்தாலும் மறுபுறத்தில் கலாசாரக் கூறுகளிலும் பாரிய தாக்கத்தைச் செலுத்தி வருகின்றன. இதன் காரணமாக பல தீமையான விளைவுகளை எமது தமிழ்ச் சமூகம் இன்று அறுவடை செய்துகொண்டிருக்கிறது. பல கடல் கடந்த தேசங்கள், நாடுகள் , நகரங்கள் , கிராமங்கள் என விரிந்த பூமிப்பந்து தொலைத் தொடர்பு சாதனங்களின் அசுர வளர்ச்சியால் எல்லாமே கைக்குள் சுருங்கிவிட்டது போன்ற பிரமையை வசதிகளை மனித குலத்திற்கு தந்துள்ளது. இருந்தும் இத்தகைய தகவல் தொடர்புச் சாதனங்களின் அதிக பயன்பாட்டினால் பல்வேறு சமூக பொருளதார ரீதியான பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளமையை மறுக்க முடியாது.


யாழ்.குடாநாட்டிலுள்ள மக்கள் தொகையில் பெருமளவு தொகையினர் கைத்தொலைபேசியைப் பயன்படுத்தி வருகின்றனர். முன்னர் வெளிநாட்டில் உள்ள உறவினர்களுடன் தொலைபேசியில் கதைப்பதற்கு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கோ வவுனியாவுக்கோ சென்றே கதைக்க வேண்டிய சூழல் இருந்தது. அதுவும் கொழும்புக்கு செல்வதென்றால் இலகுவான விடயமல்ல. அக்காலத்தில் ஆட்சியமைத்திருந்த புலிப்போராளிகளிடம் பயண அனுமதி பெற வேண்டும். அப்படி பயண அனுமதி பெறுதல் என்பதும் சாதாரணமாக பெறமுடியாது. பல்வேறு கடும் நிபந்தனைகளுக்குட்பட்டே பயண அனுமதி பெற முடியும். மிகவும் சிரமப்பட்டு பயண அனுமதியைப் பெற்றாலும் இலகுவாக தற்போது போல் கொழும்பைச் சென்றடைய முடியாது. ஏனெனில் யுத்த சூழ்நிலைகளால் போக்குவரத்துத் தடைகள் காணப்பட்டன. இதனால் பல நாட்கள் கப்பலில் பயணம் செய்து தான் கொழும்புக்குச் செல்லவேண்டியிருந்தது. வவுனியாவுக்குச் செல்வதென்றால் கொழும்புக்கு சென்றே அங்கிருந்து தான் வவுனியாவுக்கு வரவேண்டும். இதனால் சில மணிநேரப் பயணம் சில நாட்கள் வரை நீண்டது. இப்படிக் கஷ்டப்பட்டே வெளிநாடுகளிலுள்ள உறவினர்களுடன் கதைக்க வேண்டிய சூழல் அன்றிருந்தது.




ஆனால் இன்றிருக்கும் நிலை அவ்வாறில்லை. எந்த நேரத்திலும் எங்கிருந்தும் வெளிநாட்டு உறவினர்களுடன் கதைக்க கூடிய நிலை காணப்படுகிறது. இந்த நிலை ஒரு விதத்தில் பாரிய வளர்ச்சி என்றாலும் மறுபுறத்தில் எமது வாழ்வியலிலும் பாரிய பாதிப்பினையும் ஏற்படுத்தத் தவறவில்லை. செல்லிடப் பேசிப் பாவனை அபரிதமாக பெருகியுள்ளது. வயது வேறுபாடின்றி செல்லிடப்பேசிகளின் கட்டற்ற பாவனையினால் குடும்ப உறவு நிலையில் உடைவுகள் சீரழிவான பல சம்பவங்களுக்கும் வித்திட்டுள்ளமை நோக்கத்தக்கது. குடாநாட்டில் கலாசார சீரழிவுகள் பெரும்பாலும் பதினாறு வயதையடைந்த பாடசாலை மாணவர்களிடமிருந்தே ஊற்றெடுக்கின்றன. இக்கலாசார சீரழிவு நடவடிக்கைகளுக்கு கைத்தொலைபேசிப் பாவனையே மிக முக்கியமான காரணியாகும். தற்போது விதம் விதமான பலரகங்களில் பல நவீன வசதிகளுடன் கூடிய கைத்தொலைபேசிகள் புழக்கத்தில் உள்ளன. இவற்றை பெரும் பணச்செலவில் தமது பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுக்கும் பெற்றோர் தமது பிள்ளைகளை அழிவுப்பாதையில் வீழ்த்துவதற்கான சதிவலை பின்னுகின்றனர். 'பிள்ளையின் சுகத்துக்காகத்தான் வாங்கிக் கொடுத்தேன்' என்று பகட்டுக்காக கூறலாம். ஆனால் அதன் பின்னணியில் பெரும் அழிவுகள் இருப்பதை உணர மறுக்கின்றனர். இன்று பெரும் பாலான வயதையுடை மாணவர்கள் கைத்தொலைபேசிகளை பயன்படுத்தி வருகின்றனர். பாடசாலை செல்லும் போதும் கைத்தொலைபேசிகளை கொண்டு செல்கின்றனர். இதனால் பாடசாலைக் கற்றல் நடவடிக்கை பாதிப்படைகின்றது. பாடசாலை மாணவ மாணவிகள் தான் அறியாமையினாலோ அல்லது வயதுக்கோளாறினாலோ பயன்படுத்துகின்றனர் என்றால் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் கூட தவறான முறையில் கைத்தொலைபேசியை பயன்படுத்தி வருகின்றமை வேதனைக்குரியது. அண்மையில் ஒரு பாடசாலையில் கற்பிக்கும் ஒரு இளம் ஆசிரியை பாடம் நடத்திக்கொண்டிருந்த போது திடீரென அவரது கைப்பையிலிருந்த செல்பேசி சிணுங்கியது. தன்னை மறந்த அந்த இளம் ஆசிரியை பாடம் போதிக்கும் பணியை மறந்தவராக நீண்டநேரம் வகுப்பிலிருந்து உரையாடிக் கொண்டிருந்தார். சில மாணவர்கள் அவரது உரையாடலைக் கவனித்தாலும் பலர் தமக்கிடையே சல்லாபித்துக் கொண்டிருந்தனர். இப்படி உரையாடிக்கொண்டிருந்த ஆசிரியைக்கு பாடம் முடிவடைந்து விட்டதற்கான அறிகுறியாக 'மணி' அடித்ததும் கேட்கவில்லைப் போலும். காரணம் அடுத்த பாடவேளைக்காக இன்னொரு ஆசிரியர் வகுப்பறைக்குள் நுழைந்த போது தான் திடுக்கிட்டு எழும்பினார். அந்த இளம் ஆசிரியை அவர் உரையாடிய உரையாடல்களிலிருந்து யாரோ ஒரு அன்புக்குரிய ஆணுடன் தான் உரையாடுகின்றார் என்பதை மட்டும் உணர முடிந்ததாம். இப்படித்தான் பல பாடசாலைகளில் பல சுவாரசியமான சம்பவங்கள் இடம் பெறுகின்றன. எனவேதான் பாடசாலைகளில் கைத்தொலைபேசியை பயன்படுத்துவதை தடைசெய்யும் சட்டங்களை கல்வித்திணைக்களங்கள் அமுல்படுத்த வேண்டும். தனியே மாணவர்களுக்கு மட்டுமன்றில்லாது ஆசிரியர்களுக்கும் இச்சட்டம் பொருந்த வேண்டும்.

ஆகவே இன்றைய இளம் சந்ததியினர் திசை மாறிச் செல்கின்றனர். அவர்களது செயற்பாடுகளுக்கு ஊக்கியாக பெற்றோர்களும், ஆசிரியர்களும் செய்பட்டு வருகின்றனர் என்றே எண்ணத்தோன்றுகின்றது. முன்னர் தமிழ்ச் சமூகம் வாழ்ந்த வாழ்க்கை முறை வேறு. பெற்றோருக்கு கீழ்ப்படிந்து மூத்தோரின் கருத்துக்களுக்கு மதிப்பு கொடுத்து கட்டுக்கோப்புடன் வாழ்ந்தனர். ஆனால் தற்போது அந்த நிலை முற்றிலும் மாறுபட்டுள்ளது. பெற்றோர் - பிள்ளைகளுக்கிடையிலான அன்னியோன்னியமான உறவு அறுந்து போயுள்ளது. அதே போலவே ஆசிரிய - மாணவர்களின் உறவு நிலையும் உள்ளது. இதனால் பல சமூக பொருளாதார தளங்களில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. குடும்பக் கட்டமைப்பு உடைவடைந்து சிதைவடைந்து செல்கின்றது. பல வேண்டத்தகாத சம்பவங்கள் குடாநாட்டில் இடம்பெற்றுவதை காணுகின்றோம். எனவே நிலமை விபரீதமாக மாறாமல் தடுப்பது பெற்றோர்களாகிய உங்களின் கைகளிலேயே உள்ளது. இந்நிலமையை உணர்ந்து பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டிய நேரமிது.

உதிஷ்டிரன்



# பெண்களும் சட்டங்களும் 02

(சென்றவாரத் தொடர்ச்சி)

இவை மட்டுமன்றி, இல்லங்களில் நடந்தேறும்வன் முறைகளும், கொடுமைகளும் பெண்களின் ஆளுமைக்கு சவாலாக ஏற்படுகின்றன. மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் சட்டப் பிரிவிற்கு முறையிட வருகை தரும் பெண்களின் நாளாந்த அவலங்களில் ஓர் சம்பவத்தை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

அமிர்தா என்ற பெண் ஆளுமைமிக்க ஓர் இளம் பெண். தனது முயற்சியினால் ஈடுபட்டுள்ள சுய தொழிலின் மூலம் சமூக கௌரவத்தையும், தனக்கு ஏற்ற வருமானத்தையும் சுமாராகப் பெற்று வருபவர். வெளிநாட்டிலிருந்து போதைப் பொருளுக்கு அடிமையான ஒருவருக்கும் அவருக்கும் ஏதோ வகையில் திருமணம் நடந்து முடிந்தது. இரு மாதங்களில் அவரின் மனநிலை குழப்பத்தை அறிந்து கொண்ட பெண் இவ்விடயத்தை பெற்றோருக்குத் தெரிவித்திருந்தார். எதற்கும் சேர்ந்து வாழ்வோம் என்று பொறுத்தவருக்கு, நாளாந்தம் அடி உதை மட்டுமன்றி , அவ்விளம் பெண் சுயமாக சேமித்த பணம் செலவழிந்தவுடன் நகைகள், பணம் என்பனவும் விற்கப்பட்டுவிட்டது. பெண்ணின் தாயாரும் தொடர்ந்து இப்புது மாப்பிள்ளையின் அடிக்கு ஆளாகியது மட்டுமன்றி வைத்தியசாலையிலும் காயத்துக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவங்கள் நடந்து முடிந்த பின் தான் - தமக்கு பாதுகாப்பிற்காக, வீட்டு வன்முறைச்சட்டத்தின் தேவையை அப்பெண் உணர்ந்து அச்சட்டத்தின் சேவை மூலம் தற்போது அவருக்கு எதிரான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பெண்கள் தமக்கு ஏற்படும் ஆபத்தான தருணங்களில் தகுந்த பாதுகாப்பை தேடிக்கொள்வதன் மூலம் உடல், உளநல மேம்பாட்டை பேணிக் கொள்ளமுடிவதோடு தமது சுதந்திரமான இருப்பையும் தக்கவைத்துக் கொள்ளமுடியும்.

### பாலியல் தொந்தரவு

பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறைகளின் வடிவங்கள் பல வகையின. பாலியல் ரீதியான தொந்தரவு என்பது பாலியல் விருப்பத்தினால் அல்ல ஆண் தன் அதிகாரத்தை பிரதிபலிக்கும் வகையில் பெண்களுக்கு தொந்தரவுகளைக் கொடுக்கின்றார். இத்தொந்தரவுகளைப் பொறுத்துக் கொள்ளும் பெண்களும் உண்டு. பொங்கி எழும் பெண்களும் உண்டு.

பெண்களோடு ஆண்கள் பழக நேரிடும் சந்தர்ப்பங்களில் குறிப்பாக கல்வி நிறுவனங்கள், பிரயாணம் செய்யும் பஸ்கள், தொழில் பார்க்கும் நிறுவனங்கள் போன்ற பல இடங்களிலும் பாலியல் தொந்தரவு இடம்பெறுவதனை நாம் செய்திகள் மூலமன்றி மகளிர் அமைப்புக்களின் தரவுகள் மூலமும் அறிய வருகின்றது. மாணவர்கள் ஆசிரியர்களுக்கிடையே நிலவும் அதிகாரப் போக்கின் காரணமாக அதனைச் சாதகமாகப் பயன்படுத்தி மாணவர்களுக்கு குறிப்பாக மாணவியர்கட்கு கூடிய புள்ளிகளை வழங்குவதற்கு கைமாறாக அவர்களிடம் பாலியல் சலுகைகளை பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாறான சமமற்ற சலுகைகளால் மாணவர்கள் மத்தியில் கல்வி ஓர் கேள்விக்குறியாக அமைந்துவிடமுடியும். இவை தவிர வீதிகளிலும் வேலைத்தளங்களிலும் பெண்கள் வெறுக்கத்தக்க ஆபாச வெளிக்காட்டல்கள் அவர்களுக்கு மன உழைச்சல்களையும் அருவருப்பான சூழலையும் உருவாக்குகின்றன.



1995 ஆம் ஆண்டில் முதன்முதலாக எமது நாட்டு சட்டத்தில் பாலியல் தொந்தரவு ஓர் குற்றச் செயலாக கணிக்கப்பட்டது. இச் சட்டத்தின் பிரகாரம் பாலியல் தொந்தரவை பெண்களுக்கு விளைவிக்கும் ஓர் பாலியல் பலாத்கார செயலாகவே வரையறுக்கின்றது. பாலியல் பலாத்காரம் என்று கூறும் போது வன்புணர்ச்சியற்ற ஏனைய பாலியல் சேஷ்டைகளை இங்கு குறிப்பிடலாம். பெண்ணின் அங்கங்களை தொடுதல் அவதூறு வார்த்தைகளை பேசுதல் போக்குவரத்து வண்டிகளில் மறைமுகமாக பெண்களிடம் உடல் ரீதியான சேஷ்டைகள் புரிதல் யாவும் பாலியல் தொந்தரவுகளாக அமையும்

(தொடரும்)

சரோஜா சிவசந்திரன் (M.A.)
மகளீர் விவகார அமைச்சின்
தேசிய மகளிர் குழுவின் அங்கத்தவர்


# மூலிகை மருத்துவம்

## அறுகம்புல்

**BIN cynodon dactylon**

**E.N conch grass**

மறுபெயர் :- மூதண்டம்,மேகாரி, தூர்வை



உபயோகம் :- வேர்,இலை

சுவை :- இனிப்பு

வீரியம் :- சீத

செய்கை :- துவர்ப்பி, சிறுநீர் பெருக்கி, குருதிப்போக்கடக்கி, வறட்சி அகற்றி

குணம் :- இதனால் கோழை, கண் புகைச்சல், தலைநோய்கள், குருதி அழற்சி அடைவதால் ஏற்படும் நோய்கள் மருந்துகளின் வெப்பம் தணியும்

உபயோகம் :- அறுகம்புல்லினை மஞ்சளுடன் சேர்த்தரைத்துப் பூச சொறி சிரங்கு படர்தாமரை என்பன தீரும்.

அறுகம்புல்லை இடித்துப் பிழிந்து கண்ணில் இட கண்புகைச்சலும் மூச்சுவிட மூக்கில் இருந்து குருதி வடிதலும் தணியும். வெட்டுக்காயம் குருதி வடிதல் ஆகியவற்றிற்கு அறுகம்புல்லை அரைத்துக் கட்ட குருதி குறையும்

வேர் :- 1/4பலம் வேரை எடுத்து 10 வெண்மிளகு சேர்த்து குடிநீர் செய்து பசு எண்ணெய்யுடன் கூட்டி உட்கொள்ள மருந்தால் ஏற்படும் தீங்கு இரச வேட்காடு, மூலக்கடுப்பு, நீர் அடைப்பு, நீர்க்கடுப்பு, வெட்டை நோய் என்பன தணியும்.

வேதை தயிரில் அரைத்து கலக்கிக் கொடுக்க நாட்பட்ட வெள்ளை குணமாகும்.

ரி. உமா
(3 ஆம் வருடம்) லங்கா சித்த - ஆயுர்வேதக் கல்லூரி - சுன்னாகம்.

# யோகாசனமும் ஆரோக்கிய வாழ்வும் 8



(சென்ற வாரத் தொடர்ச்சி)

6. பின் மூச்சை உள்ளிழுத்துக் கொண்டு தலையைக் கைகளோடு சேர்த்தவாறு முதுகெலும்பின் அடிப்பகுதியிலிருந்து தரைக்கு இணையாக உயர்த்தி தொடர்ந்து மூச்சை உள்ளிளுத்தவாறு நிமிர்ந்து நேரான நிலைக்கு வரவும்.

7. மூச்சை வெளிவிட்டுக் கொண்டு இரு கைகளையும் பக்கவாட்டில் தோள்களுக்கு இணையாக இறக்கி கைகளை ஆரம்ப நிலைக்கு கொண்டுவரவும்.

**பலன்கள்**

உடம்பின் பின்புறம் உள்ள எல்லா தசைகள், இடுப்பெலும்பு, தொடை எலும்பு, தசை நார்கள், கால் நரம்புகள் நன்றாக நீட்டப்படும். முதுகுத்தண்டு, இடுப்பு எலும்புகள் முறுக்கேறும். தலைப்பகுதியிக்கு ரத்த ஓட்டம் அதிகரிக்கும். ஜீரண உறுப்புக்கள் மற்றும் நாளமில்லா சுரப்பிகள் நன்கு வேலை செய்யும். இடுப்பு பகுதியில் அதிகமாக காணப்படும் ஊளைச்சதைகள் மற்றும் கொழுப்புக்கள் குறையும். கல்லீரல், மண்ணீரல்களின் இயக்கம் அதிகரித்து ஜீரண சம்பந்தமான பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும். நீரிழிவும் நீங்கும்.

**அர்த்தச் சக்கராசனம்**

(இவ் ஆசனம் பாதகஸ்தாசனத்தில் மாற்றுப் பயிற்சியாகும்.)

செய்முறை:- 1. முதுகை நேர்கோட்டில் வைத்தவாறு தடாசனத்தில் நிற்கவும்.

2. இரு மணிக்கட்டுப் பகுதிகளும் ஒட்டியவாறு இரு உள்ளங்கைகளினாலும் இடுப்பின் பின்புறத்தினை தாங்கிப்பிடிக்கவும்.

3. பின் மூச்சை இழுத்து நெஞ்சை நிரப்பிக்கொண்டு பின் மூச்சை விட்டவாறு இடுப்பிலிருந்து பின்புறம் வளைந்து , கழுத்தை வளைத்து முகம் பின்நோக்கிப் பார்த்தபடி இருக்கவும். இந்த நிலையில் சாதாரண சுவாசம் கொள்ளவும்.

4. பின்னர் மூச்சை வெளிவிட்டபடி நேரான நிலைக்கு வந்து உள்ளங்கைகளை விடுவிக்கவும்.

இவ் ஆசனமானது பாதிச்சக்கரம் போன்று தோற்றமளிப்பதால் அர்த்த சக்கராசனம் என்று பெயர் வந்தது.

**பலன்கள்** :- பாதகஸ்தாசத்தின் பலன்கள் இதற்கு பொருந்தும். உடம்பின் முன்புறத் தசைகள் கெண்டைக்கால் தசைகள் இடுப்பு விலா பகுதித் தசைகள் முறுக்கேறும். முதுகுத்தண்டு வளைந்து கொடுக்கும் தன்மை பெறுவதால் பலப்படும். சுவாச உறுப்புக்கள் சீரடையும். மேலும் ஆஸ்மா, கீழ் முதுகு வலி, தசைப்பிடிப்புக்கள் மற்றும் சிறுநீரகம் சம்பந்தமான நோய்கள் குணமாகும். ஆஸ்மா மற்றும் பெண்மை நீடித்து நிலைக்கும். பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் முதலிய பல உடலியல் செயற்பாட்டு ரீதியான நோய்களுக்கு சிறந்த ஆசனம். மார்புக்கூடு விரியும். மார்புச்சளி , கசம் நீங்கும்.

4. திரிகோணாசனம்

செய்முறை :- 1.முதுகை நிமிர்த்தி நேராக நிற்கவும் (தடாசனம்) இந்நிலையில் சாதாரண சுவாசம் கொள்க.

2 இடக்காலிலிருந்து வலக்காலை ஒரு மீற்றர் வரை இடைவெளி விட்டுத் தள்ளி வைத்துக் கொள்ளவும். பின் இரு கைகளையும் மூச்சை இழுத்தவண்ணம் தோள்பட்டை அளவுக்கு பக்கவாட்டில் உயர்த்தவும்.

3. மூச்சை வெளிவிட்ட வண்ணம் சரியாக வலது பக்கவாட்டில் வலக்கை விரல்கள் வலது பாத கணுக்காலை தொடும் வரை பக்கவாட்டில் வளைந்து இடக்கை உயர்ந்து வலக்கையும் இடக்கையும் ஒரே நேர்கோட்டில் அமையுமாறு இருக்கவேண்டும். இடது உள்ளங்கை முன்னோக்க பார்வை இடது விரல்களின் மேல் இருக்கும்படி வைத்து சாதாரணமாக 1 நிமிடம் வரை சுவாசிக்கவும். (உச்சநிலை)

4. பின் மூச்சை இழுத்தவாறு முன்பு போல் கைகளை கிடைமட்டத்திற்கு கொண்டுவரவும்.

5. மூச்சை வெளிவிட்டவாறு கைகளை கீழே விடவும். பின் வலக்காலை இடக்காலுக்கு அருகில் கொண்டுவரவும்.

***குறிப்பு:- இதே போல் மாற்றுப்பயிற்சியாக மறுபுறமும் (இடக்கால் செய்ய வேண்டும்)***

(தொடரும்)

எஸ்.நதிபரன்

---

# HOME டிப்ஸ்

★ முட்டையை வேகவைக்கும் போது சிறிது உப்பு போடவும் முட்டை விரியாது தோல் உரிப்பது எளிது.

★ தேங்காய்ப் பாலுடன் சிட்டிகை அளவு மக்காச்சோளம் சேர்ப்பதால் கொதிக்கும்போது திரிந்துபோகாமல் இருக்கும்.

★ பன்னீர் தயாரித்த பிறகு கிடைக்கும் 'வே' (whey) தண்ணீரைக் கொண்டு சப்பாத்தி மாவு பிசையலாம். பஜ்ஜி தயாரிக்கக் கடலைமாவுடன் சேர்க்கலாம்.

★ தேங்காய்ப் பாலை ஒரு இரவு முழுவதும் குளிர்சாதனப் பெட்டியில் வைத்தால் அதன்மீது வெண்மையாக ஒரு படலம் படியும். அதை எடுத்து மட்டன்/ சிக்கன் பொரிக்க எண்ணெய்க்குப் பதிலாக பயன்படுத்தலாம்.

★ பழைய சோற்றோடு நறுக்கிய வெங்காயம் மிளகாய்ப் பொடி உப்பு சேர்த்து நன்றாகக் கலந்து ஸ்டார் வடிவத்தில் அமைத்து வெயிலில் காய வைக்கவும். இரண்டு மூன்று நாட்கள் நன்றாகக் காய்ந்த பிறகு காற்றுப்புகாத போத்தலில் எடுத்து வைக்கவும். தேவையானபோது பொரித்துச் சாப்பிடலாம். சாப்பிடும்போது வடகம் போல் பொரித்தும் பயன்படுத்தலாம்.

★ பச்சை சட்னியோடு தயிர் சேர்ப்பதற்குப் பதிலாக எலுமிச்சைச் சாறு சேர்க்கவும். அதிக ருசியோடு இருக்கும். நீண்ட நாட்களுக்குக் கெடாமல் பச்சை நிறத்தோடு சட்னி இருக்கும்.

★ முந்திரியைப் பொரிப்பதற்குப் பதிலாக வறுக்கவும். அதிக ருசியுடன் புதியதாக இருக்கும்.

★ முட்டையைப் பொரிக்கும்போது நெய்யில் சிறிது வினிகரும், உப்பும் சேர்க்கவும். சீக்கிரமாக உடையாமல் அவை ஒன்று சேரும்.



★ காளானை வேக வைக்கும்போது ஒரு வெள்ளி நாணயத்தை அந்தப் பாத்திரத்தில் போடவும். நாணயம் கறுப்பாக மாறினால் காளான் நச்சுத் தன்மை உடையது; அது சாப்பிட ஏற்றதல்ல என்பதை அறியலாம்.

★ எந்த ஊறுகாய்க்கும் காய்ச்சாத எண்ணெயை ஊற்ற வேண்டாம். நன்றாகக் காய்ச்சி ஆறியபின் எண்ணெயைச் சேர்ப்பதால் ஊறுகாயில் பூஞ்சைக் காளான் பிடிக்காது. நீண்ட நாட்களுக்கு ஊறுகாய் கெடாமல் இருக்கும்.

★ சப்பாத்தி மாவோடு சிறிது அரிசி மாவு கலப்பதால் லேசான சப்பாத்திகளைத் தயாரிக்க முடியும். அவை எளிதில் ஜீரணம் ஆகும்.

யாழ்ப்பாண வாழ்வியல் பொருட்காட்சி சிறப்பு மலர்

# யாழ்ப்பாணத்தின் மரபுரிமைகளை அடையாளப்படுத்தும் பொருட் காட்சி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1974 இல் ஒரு வளாகமாக தொடங்கப்பட்ட நிகழ்வில் கருத்துரை வழங்கிய அரசியல் தலைவர்களும், கல்விமான்களும் பண்பாட்டால் தனித்து அடையாளப்படுத்திப் பார்க்கப்படும் யாழ்ப்பாணத்தின் பண்பாட்டு மரபுரிமைகளைக் கண்டறியவும், அவற்றைப் பாதுகாக்கவும் இவ்வளாகம் களமமைத்துக் கொடுக்கும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தியிருந்தனர். அந்த நம்பிக்கையை அடைவதற்கு கடந்த காலச் சூழ்நிலைகள் பல தடைகளாக இருந்த போதிலும் பல்கலைக்கழகம் அந்த நோக்கத்தை அடையவேண்டும் என்பதில் ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்ததென்பதை கடந்த காலத்தில் நடந்தேறிய சில பண்பாட்டு நிகழ்வுகள் கோடிட்டுக்காட்டுகின்றன. அந்த நிகழ்ச்சிகளின் இன்னொரு கட்ட வளர்ச்சியாகவே இன்று தொடங்கவுள்ள 'யாழ்ப்பாணப்பண்பாடு' என்ற கருப்பொருளில் அமைந்த கண்காட்சியையும், கருத்தரங்கையும் பார்க்கிறேன்.

ஒரு வட்டாரத்தின் அல்லது ஒரு இனத்தின் தனித்துவமான அடையாளம் என்பது அப்பிரதேச மக்களின் மொழி, மதம், கலை, பண்பாடு என்பவற்றின் தொன்மை, தொடர்ச்சி, மாற்றம், வளர்ச்சி என்பவற்றின் ஊடாகவே பார்க்கப்படுகிறது. தென்னாசியாவில் தொடர்ச்சியான வரலாற்று மரபுகொண்ட நாடு என்ற பெருமைக்குரிய இலங்கை வரலாற்று மூலங்களில் இற்றைக்கு 2600 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வடஇலங்கை அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணம் பாளி மொழியில் நாகதீபம் எனவும், தமிழ் மொழியில் நாகநாடு எனவும் தனித்து அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் அந்த வரலாற்று இலக்கியங்களில் யாழ்ப்பாணத்தின் பூர்வீக பண்பாட்டு வரலாறு புகைபடர்ந்த நிலையிலேயே காணப்படுகிறது. 1970 களின் பின்னர் இலங்கைத் தொல்லியற் திணைக்களத்தினூடாக வெளிக்கிளம்பிய நவீன தொல்லியல் ஆய்வுகளும், 1980 பின்னர் எமது வரலாற்றுத் துறையினர் மேற்கொண்ட கள ஆய்வுகளும் யாழ்ப்பாணத்தின் தொடக்ககால மக்களது பண்பாட்டு வரலாற்றை வெளிச்சத்திற்கு கொண்டு வர உதவின. ஆயினும் அந்த வரலாற்று உண்மைகள் யாழ்ப்பாண மக்களிடமோ அல்லது இலங்கை மக்களிடமோ முழுமையாகச் சென்றடைந்ததெனக் கூறமுடியாது.

2010இல் யாழ்ப்பாணத்தில் பிராந்திய தொல்லியற் திணைக்களத்தை இலங்கை அரசு அமைத்ததை தொடர்ந்து அத்தொல்லியற் திணைக்களத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தொல்லியற் பிரிவினர் இணைந்து மேற்கொண்ட தொல்லியல் ஆய்வுகளும், யாழ்ப்பாணத்து மரபுரிமைத் தொல்லியற் சின்னங்களைக் கண்டறித்து பாதுகாக்க நடாத்தப்பட்ட பயிற்சிப்பட்டறைகளும் யாழ்ப்பாணத்து மக்களிடையே தமது மரபுரிமைகளைத் திரும்பிப் பார்க்க வேண்டு என்ற ஆவலை முன்பொருபோதும் இல்லாத அளவிற்கு ஏற்படுத்தியுள்ளன. அந்த ஆர்வத்தை ஓரளவேனும் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற எண்ணப்பாடு இக்கண்காட்சியின் ஒரு நோக்கமாகும்.

உலகமயமாக்கல், அதைதொடர்ந்து எழுந்த பின்நவீனத்துவக் கருத்துக்கள், பல்லினப்பண்பாடு பற்றிய தற்போதைய வாதங்கள் என்பன தேசம், தேசியம், நாடு என்ற எல்லைகளை உடைத்து உலக நாடுகளை ஒன்று சேர வைத்துள்ளன. இவை தவிர்க்க முடியாத வளர்ச்சியாகப் பார்க்கப்பட்டாலும் பண்பாட்டு ரீதியில் இவை வளர்ச்சியடைந்த நாடுகளின் நாகரீகம் வளர்முக நாடுகளின் பாரம்பரிய பண்பாட்டில் மேலாதிக்கம் செலுத்த தொடங்கியுள்ளன என்பதில் சந்தேகமில்லை.

இந்த மாற்றம் யாழ்ப்பாணத்திற்கும் பொருந்தும். ஒரு கிராமத்து சந்தையில் நவீன பாவனைப் பொருட்களை வாங்க முடியும் என்ற நிலை எமது பண்பாட்டில் நீண்ட காலம் இருந்த பாவனைப் பொருட்கள், கலை வடிவங்கள், சமயச் சின்னங்கள் மறைந்து போகக் காரணமாகிறது. இன்று அவை குறைந்த விலையில் பிற பொருட்களின் உற்பத்திக்காக விற்கப்படுவது யாழ்ப்பாணத்தில் தீவிரமாக நடைபெற்று வருவதைக் காண முடிகிறது. இவை எமது பாரம்பரிய பொருட்கள் மறைவதை மட்டும் குறிக்கவில்லை. கூடவே அவற்றின் மொழியும், அப்பொருட்களைக் கொண்டு பயன்படுத்தி வந்த சமூக, சமயச் சடங்குகளும், வாழ்க்கை முறைகளும் காலப்போக்கில் முற்றாக மறைந்து போவதற்கும் அவை காரணமாக அமைகின்றன. ஆகவே அத்தகைய பொருட்களை காட்சிப்படுத்துவதன் மூலம் எமது பாரம்பரிய சடங்கு முறைகளையும், வாழ்க்கை முறைகளையும் பாதுகாத்துக் கொள்வது இக்கண்காட்சியின் இன்னொரு முக்கிய நோக்கமாகும். இன்னொருவகையில் கூறுவதானால் நாம் எங்கிருந்து வந்தோம் என்பதை எடுத்துக் காட்டி, எங்கே செல்கிறோம் என்பதை மக்களிடம் எடுத்துச் சொல்வதாக இக்கண்காட்சி அமைகிறது.

இந்த இடத்தில் இந்த மாபெரும் பொருட்காட்சி நடைபெற காரணகர்த்தாவாக இருக்கும் கலைக்கேசரி குடும்பத்திற்கும், பொருட்க்காட்சிக்கு வேண்டிய அனைத்து தேவைகளையும் உரிய காலத்தில் நிறைவேற்றி தந்த துணைவேந்தர் அவர்களுக்கும், மற்றும் கலைப்பீடாதிபதி அவர்களுக்கும் பொருட்காட்ச்சிக்கு வேண்டிய பயனுள்ள படங்களைத் தந்துதவிய இலங்கைத் தொல்லியற் திணைக்களத்திற்கும், இரவு பகல் பாராது கடந்த ஒரு மாதகாலமாக இப்பணியில் ஈடுபட்டு வரும் எனது சக ஆசிரியர்களுக்கும், என் மாணவர்களுக்கும், நண்பர்களுக்கும் இதயபூர்வமான என் நன்றிகள். அவர்களின் நோக்கம் நிறைவேற இறைவனைப் பிராத்திக்கிறேன்.

பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்
**தலைவர்**
**யாழ்ப்பாணத்து வாழ்வியல்**
**வரலாற்றுத்துறை யாழ்ப்பாணப்**
**பல்கலைக்கழகம் இலங்கை.**



# யாழ்ப்பாண வாழ்வியல் பொருட்காட்சி சிறப்பு மலர்

## "3000 YEARS OLD HISTORY OF JAFFNA"

*Director General, Department of Archaeology, Colombo 7*


I am extremely happy to know that the Archaeology and History Department of the University of Jaffna is going to hold an Archaeology Exhibition and Seminars for four days. Jaffna Peninsula is one of the historically significant places. It is called as "Nagadipa" and "Naganadu" in Pali and Tamil respectively. Unfortunately, extensive Archaeological research has not been done in this part or, in the recent past, due to obvious reasons. Now, the situation is favourable for research activities. A regional government Archaeology Department has been established in Jaffna and active research is going on with the help of Archaeology graduates. Jaffna has 3000 year old history behind it. Because of its strategic situation, Jaffna has had cultural and commercial ties with many countries, especially the ties and influence with South Indian ancient Hindu temples, Mosques and Churches. Adequate researches have not been done about the Hindu temples. I strongly believe that the Archaeology Department would make more research and bring out more facts about the Hindu temples.

Historical monuments are national treasures which reflect our noble past. They must identified and preserved for our future generations. I hope that the exhibition and seminars would serve the purpose. I congratulate the Archaeology Department and its Head, Prof.P. Pushparatnam on this venture, and I urge all to co-operate with him.

***I sincerely wish the exhibition and seminars all success.***

***Senarath Dissanayake Directore General***
***Department of Archaeology Colombo.***

## “எமது வரலாறும் வாழ்வும் உணர்தலும் உணரப்படுதலும்”



By : Miss. P. Rahini

## பண்பாட்டை மீட்டுருவாக்கும் பொருட்காட்சி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையும் கலைக்கேசரி மாத இதழும் இணைந்து நடாத்தவுள்ளது ‘யாழ்ப்பாண வாழ்வியல்’ என்ற தலைப்பிலான பொருட்காட்சி குறித்து வெளிவரும் சிறப்பிதழுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கை தமிழ்ப் பண்பாட்டில் யாழ்ப்பாணத்தினது பங்களிப்பு கணிசமானதாகும். உலகமயமாதல் குறைபாடு , திறந்த பொருளாதாரக் கொள்கை பிறபண்பாட்டு ஊட்டம், புலம்பெயர்வு, கையளிப்புக்குறைபாடு, பழைமை போற்றாத பண்பு முதலான பல்வேறு காரணிகளால் தொன்மைச் சிறப்புமிக்க எமது பண்பாட்டின் பல்வேறு வகைமைகளும் மிகவேகமாக வழக்கிழந்து வருகின்றன. எமது பண்பாட்டின் தனித்துவமான அடையாளங்களை உயிர்த் துடிப்புடன் தக்கவைத்து எதிர்காலச் சந்ததியினர்க்கு கையளிக்க வேண்டியது எமது தலையாய கடமையாகும். இத்தொடர்பில் பல்கலைக்கழகத்திற்கும் மிக முக்கிய பொறுப்பு இருப்பதாகவே நான் கருதுகிறேன். இக்கடமையின் பின்புலத்தில் எமது வரலாற்றுத்துறையும் கலைக்கேசரியுடம் இணைந்து இப்பொருட்காட்சியையும் அதனோடிணைந்து ஆராய்ச்சி அமர்வு மற்றும் நிகழ்வுகளையும் ஒழுங்கு செய்திருப்பது மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

பொருட்காட்சியில் கலை,பாரம்பரிய வைத்திய சமயம், நம்பிக்கைகள் தொழில் சார் உபகரணங்கள், புழங்கு பொருட்கள் , தொடர்பாடல் பொறிமுறைகள் பொழுது போக்குக் கருவிகள் முதலான பண்டைய யாழ்ப்பாணத்து மக்களின் பொருள்சார் மற்றும் பொருள்சாராப் பண்பாட்டின் பல்வேறு அம்சங்களும் காட்சிப்படுத்துவது சிறப்புக்குரியதாகும். 1974 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தொல்லியல் வரலாற்றுப் பொருட்காட்சிக்குப் பின்னர் மிகப் பெரிய அளவில் நடைபெறும் பொருட்காட்சி இதுவே எனலாம். எமது பண்பாடு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும் எமது பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்யவும் இப்பொருட்காட்சி நடத்தப்படுகிறது என்பதில் ஐயமில்லை.

அரிய உழைப்பின் வெளிப்பாடாக அமையும் இப்பொருட்காட்சியை இலங்கைத் தமிழ்ச் சமூகம் உரியமுறையில் பயன்படுத்திப் பயன் விளைவிக்க வேண்டும் என்பது எனது வேண்டுகோள். இம்முயற்சியில் கைகோர்த்துள்ள கலைப்பீடத்தினர் குறிப்பாக வரலாற்றுத்துறையினர் கலைக்கேசரியினர் கலைக்கேசரி மாத வெளியீட்டுக் குடும்பத்தினருக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

பேராசிரியர் வ. அரசரட்னம்
***துணைவேந்தர்***
***யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்***

### காட்சிப்படுத்தல் அரங்கம் - 1

யாழ்ப்பாணக்குடாநாட்டில் காணப்படும், மற்றும் அடையாளம் கண்டு கொள்ளப்பட்ட வரலாற்றுப் பழைமை வாய்ந்த இந்து, பௌத்த, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ ஆலயங்களின் புகைப்படங்கள் அவை தொடர்பாக கிடைத்த தொல்பொருட் சின்னங்கள்.





### காட்சிப்படுத்தல் அரங்கம் - 2

யாழ்ப்பாணக்குடாநாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட ஆதிக்குடியிருப்புக்களுக்குரிய பலவகைப்பட்ட தொல்லியல் சின்னங்கள், புகைப்படங்கள். 2300ஆம் ஆண்டிலிருந்து 13ஆம் நூற்றாண்டு வரையான தமிழ் வரலாற்றை வெளிப்படுத்தும் கல்வெட்டுக்கள். கி.மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து 20 ஆம் நூற்றாண்டுவரை புழக்கத்தில் இருந்த நாணயங்கள்.



### காட்சிப்படுத்தல் அரங்கம் - 3

யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய சடங்கு முறைகள் பிறப்பில் இருந்து இறப்பு வரை நடைபெறும் அனைத்து சடங்குகள், புகைப்படங்கள்.



### காட்சிப்படுத்தல் அரங்கம் - 4

இந்து நாகரீகதுறையின் காட்சியரங்கம் சமகால வழிபாட்டுச் சின்னங்கள், சிலைகள், சிற்பங்கள், ஓவியங்கள்.



### காட்சிப்படுத்தல் அரங்கம் - 5

பாரம்பரிய மீன்பிடி

பண்டு தொட்டுப் பயன்பாட்டிலிருந்து வரும் மீன்பிடிவள்ளங்கள், உபகரணங்கள், மீன்பிடிமுறைகள் தொடர்பான மாதிரிகளும், புகைப்படங்களும் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும்.



### காட்சிப்படுத்தல் அரங்கம் - 6

பாவனையில் இருந்து மறைந்து போகும் பொறிமுறை உபகரணங்கள்.



### காட்சிப்படுத்தல் அரங்கம் - 7

பனம் பொருள் உற்பத்திகள் கூடம்



### காட்சிப்படுத்தல் அரங்கம் - 8

யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய வாழ்க்கைமுறை வெளிப்படுத்தும் பல தரப்பட்ட பொருட்கள், புகைப்படங்கள்.



### காட்சிப்படுத்தல் அரங்கம் - 9

பாவனையில் இருந்து மறைந்துபோகும் பொருட்கள் (உலோகத்தால் வடிவமைக்கப்பட்டவை)



### காட்சிப்படுத்தல் அரங்கம் - 10

பாரம்பரிய வைத்தியமுறை தொடர்பான உபகரணங்கள், மூலிகைகள், ஓலைச்சுவடிகள்.



### காட்சிப்படுத்தல் அரங்கம் - 11

பாவனையில் இருந்து மறைந்துபோகும் வீட்டுப்பாவனைப் பொருட்கள் (பனை, தென்னம் பொருட்களால் செய்யப்பட்டவை)



### காட்சிப்படுத்தல் அரங்கம் - 12

'யாழ்ப்பாண வாழ்வியல்" ஆவணப்பட அரங்கம்



### காட்சிப்படுத்தல் அரங்கிற்கு வெளியே யாழ்ப்பாண வாழ்வியல் பிரதிமைகள்

# இலக்கிய இன்பம்



தமிழர் பாரம்பரியத்தில் சாதிக் கொடுமை என்பது மனித இனத்தின் சாபக் கேடாக இருக்கிறது. சாதிய ஒடுக்குமுறை மனித நாகரிகத்தில் வழக்காறாக தொன்று தொட்டு இருந்து வருகின்ற தாயினும் இன்றைய நவீன விஞ்ஞான உலகில் சாதியம் பற்றிய பார்வை குறுகி வருகின்றமை கண்கூடு.

இருந்தும் தமிழர் கலாசார மரபுபடி சாதியம் பற்றிய கருதுகோள் அன்று தொட்டு இன்று வரை மாறாமல் இருப்பது கருதத்தக்கது. தீண்டாமை என்ற சாதியக் கொடுமை அன்றும் சரி இன்றும் சரி நீறு பூத்த நெருப்பாக கனன்று கொண்டிருக்கிறது. இருப்பினும் முன்னர் இருந்தது போல் தீவிரமான சாதிய ஒடுக்குமுறை ஓரளவாயினும் வலுவிழந்து வருகின்றமை நோக்கத்தக்கது. இதற்கு தமிழர் தேசத்தில் அப்போதிருந்த இலக்கியப் போராளிகளின் ஆட்சிமுறை இச்சாதிய ஒடுக்குமுறைக்கு சாவுமணி அடித்தது எனில் மிகையில்லை.

இச்சாதிக் கொடுமை பற்றி ஈழத்துத் தமிழ் இலக்கியங்களிலே சுட்டிக்காட்டப்பட்டு வந்தன. பல ஈழக்கவிஞர்கள் தமது எழுது கோல்களால் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராக போராடினார்கள். அவர்களுள் மஹாகவி என்ற புனைபெயரைத் தாங்கிய உருத்திரமூர்த்தி குறிப்பிடத்தக்கவர். 1927 இல் யாழ்ப்பாணம் அளவெட்டியில் பிறந்தவர். 1974 இல் அவர் இறக்கும் வரை தமிழில் நனைந்த மனமும் ஆறாத பற்றும் உடையவராக திகழ்ந்தார். அத்துடன் கவிதையின் மீது அளவிடமுடியாத காதல் உடையவராகவும் விளங்கினார். அவரது கவிதைகளுள் 'தேரும் திங்களும்' என்ற கவிதை தீண்டாமையினால் ஏற்படும் அவலம் பற்றி எடுத்தியம்புகிறது. அவரது கதை சொல்லும் பாணியில் அமைந்த வசன கவிதையை இங்கு பார்க்கலாம்.

''ஊரெல்லாம் கூடி ஒரு
தேர் இழுக்கிறதே,
வாருங்கள் நாமும் பிடிப்
போம் வடத்தை
என்று வந்தான் ஒருவன்
வயிற்றில் உலகத் தாய்
நொந்து சுமந்திங்கு
நூறாண்டு வாழ்வதற்
காய்ப் பெற்ற மகனே
அவனும் பெருந்தோளும்
கண்களும்
கண்ணில் ஒளியும் கவ
லையிடை
உய்ய விழையும் உள
மும் உடையவன் தான்
வந்தான்;அவன் ஒரு
இளைஞன்
மனிதன் தான். சிந்
தனையாம் ஆற்றற்
சிறகுதைத்து வானத்தே
முந்தநாள்
ஏறி முழு நிலவைத்
தொட்டு விட்டு
மீண்டவனின் தம்பி
மிகுந்த உழைப்பாளி
ஈண்டு நாம் யாரும்
இசைந் தொன்றி
நின்றுடுதல் வேண்டும்''
என்று ஓர் இனிய விருப்
போடு வந்தான் குனிந்து
வணங்கி வடம்பிடிக்க
'நில்' என்றான் ஓராள்;
''நிறுத்து'' என்றான் மற்
றோராள் 'புல்' என்றான்
ஓராள்; 'புலை'என்றான்
இன்னோராள்; 'கொல்'
என்றான் ஓராள்; 'கொழுத்
து'என்றான் வேறோராள்
கல்லொன்று வீழுந்து
கழத்தொன்று
வெட்டுண்டு பல்லொடு
உதடு பறந்து சிதறுண்டு
சில்லென்று செந்நீர்
தெறித்து
மல்லொன்று நேர்ந்து
மனிதர் கொலையுண்
டார்
ஊரெல்லாம் கூடி இழுக்க
உகந்ததேர்
வேர் கொண்டது போல்
வெடுக்கென்று
நின்றுவிடப் பாரெல்லாம்
அன்று படைத்
தளித்த அன்னையோ
உட்கார்ந்து
இருந்து விட்டாள்
ஊமையாய் தான் பெற்ற
மக்களுடைய
மதத்தினைக் கண்ட படி
முந்த நாள்
வான முழுநிலவைத்
தொட்டுவிட்டு
வந்தவனின் சுற்றம்
அதோ மண்ணில்
புரள்கிறது.''

இக்கவிதையை ஆழமாகப் படிக்கும் போது தீண்டாமையின் கொடுமை பற்றி கதை வடிவில் அமையப்பெற்று இருப்பதை காணமுடியும்.

ஐம்பதுகளின் பின்னர் யாழ்ப்பாணத்தில் முனைப்புப் பெற்றிருந்த சாதிய ஒழிப்புப் போராட்டத்தில் தனது கருத்தை, கொள்கையை மனித நேயத்துடன் அணுகியுள்ளமை மஹாகவிக்கிருக்கும் கவித்துவத்தை எடுத்துக் காட்டுகிறது. இக்கவிதை எளிமையான மொழிநடையில் யாவரும் படித்து விளங்கக் கூடிய விதத்தில் கவிஞர் படைத்துள்ளமை நோக்குதற்குரியது. அத்துடன் இன்றைய விஞ்ஞான உலகிலும் தமிழர்கள் சாதி பற்றி பிரக்ஞையுடன் இருக்கிறார்கள் இதனை கவிஞர் ''முந்தநாள் முழு நிலவை தொட்டுவிட்டு மீண்டவன்'' என்பதிலிருந்து உலகம் எவ்வளவோ முன்னேறி விட்டது. மேலை நாட்டவர்கள் சாதி பற்றிய பிரக்ஞையற்று இருக்கும் போது இங்குள்ளவர்கள் தான் தீண்டாமையை வலியுறுத்தி மனித சாதியை கூறுபோட நினைக்கின்றனர். உலக சமூகத்திலே ஒரே ஒரு சாதி மாத்திரமே மனித சாதி தான் உண்டு என்பதை ''தேரும் திங்களும்'' என்ற கவிதை வாயிலாக கவிஞர் வலியுறுத்திக் கூறுகின்றார்.

எஸ்.நதிபரன்

# ஊர்ப் புதினம்



பொது இடங்களில் நிகழ்வுகளுக்குச் சென்று உங்களது மோட்டார் சைக்கிளின் புத்தம் புது ஹெல்மெட்டையோ, கால் பாதணிகளையோ (செருப்புகள்) தொலைத்த அனுபவம் உங்களுக்கு இருக்கலாம்.

இத்துன்பத்தை அனுபவிக்காத ஒருவரின் திறமை உங்களுக்கு எடுத்துக்காட்டாக அமைய உதவக் கூடும்.

ஒருவர் மோட்டார் சைக்கிளில் கோயில் திருவிழா ஒன்றிற்குச் சென்றார். சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு கச்சான் வியாபாரி ஒருவரிடம் தனது ஹெல்மெட்டை கொடுத்தார்.

திரும்பி வரும் போது 10 ரூபாவுக்கு கச்சான் வாங்குகிறார். இதனால் கச்சான் வியாபாரிக்கு இலாபம் இவரது ஹெல்மெட்டும் பாதுகாக்கப் பட்டதாகின்றது. வீட்டுக்கும் சிற்றுண்டியாக கச்சான் கிடைக்கின்றது. வேறு பொது இடங்களாயின் அருகிலுள்ள கடையில் ஹெல்மெட்டை வைத்துவிட்டு அதனை மீளப் பெறும் போது தனது வீட்டுக்குத் தேவையான பொருட்களில் ஒன்றை அக்கடையில் வாங்குவார்.

இன்னொரு அன்பர் தனது புத்தம் புதிய செருப்புடன் பொது, மங்கள நிகழ்வுகளுக்குச் செல்லும் போது வலது கால் செருப்பை ஒரு திசையிலும், இடது கால் செருப்பை இன்னொரு திசையிலும் எறிந்து விடுவார். செருப்புக்குவியல்களுக்குள் அவ்விதம் எறியும் போது பிறர் கவனிக்காதவாறும் பார்த்துக் கொள்வாராம். நிகழ்வு முடிந்து வரும் போது இரு திசைகளிலும் கழற்றிவிட்ட செருப்பை காலில் கொழுவியவாறே வீட்டிற்கு வந்துவிடுவார். செருப்பைக் களவாடுபவர்கள் ஒவ்வொரு செருப்பாகத் தேடிக் களவெடுக்கமாட்டார்கள் அல்லவா...!

நீங்களும் உங்கள் பொருட்களைப் பொது இடங்களில் பாதுகாக்க இவ்வித உத்திகளைக் கடைப்பிடித்துப் பாருங்கள்.

● சிவகாமி -

# காத்திருப்புக்கள் பொய்யாவதில்லை

தேரோட்டும் கண்ணனுக்காக
காண்டீபனின் ரதம்
காத்திருக்கின்றது

கர்ணனின் கொடைக்காக
கவச குண்டலம்
காத்திருக்கின்றது

முல்லைக் கொடிக்காக
பாரியின் தேர்
காத்திருக்கின்றது

மயிலின் தோகைக்காக
பேகனின் போர்வை
காத்திருக்கின்றது


ஔவையின் கவிதைக்காக
அதியமான் நெல்லிக்கனி
காத்திருக்கின்றது.

பாரதிதாசன் முழக்கத்திற்காக
பூமியின் தமிழோசை
காத்திருக்கின்றது

யேசுவின் வருகைக்காக
சமாதானச் சிலை
காத்திருக்கின்றது

கவிதைகளின் தூய்மைக்காக
வண்டுகளின் வட்டம்
காத்திருக்கின்றது.

நல்லை அமிழ்தன்



வானவில்
நவநாகரீக நங்கை
நாளாந்தம் நீலம்
மாரியில் தான்
பல வண்ணம்

ஆழம்?
மன்னவனே உன்மனமோ
மரியானா ஆழி
அளக்க முடியவில்லை
ஆளத்தினை

விவேகா

## விரும்பு

ஆண்மகன் மீசை அரும்பு
அடுத்ததாக பெண்ணை விரும்பு
அவள் மனமோ இளகாத இரும்பு
அவன் மனமோ அலை கடல் துரும்பு
அவளைவிட்டு இவள் பக்கம் திரும்பு
இவள் மனமோ இனிக்கின்ற கரும்பு.

விவேகா

சாகும் வரை உன்னை
மறவேன் என
அன்று சொன்னவள்...
சாகும் வரை உன்னுடன்
கதைக்கமாட்டேன் என
இன்று சொல்கிறாள்...

முட்கள் குற்றுவதால்
கோபப்பட்டு
ஒரு நாளே
வாடி விடுமா ரோஜா?

நிறைவேறாது காதல்
என்றாலும்
தடையில்லா நட்பாக
கதைக்கலாம் அல்லவா...!

காதலிக்க நீ கேட்டாய்
சம்மதித்தேன் - இன்று
மறந்திடு என்கிறாய்
முயற்சிக்கிறேன்
முடியவில்லை...
காரணம்
நிழலாய் உன் நினைவுகள்
என்னுடன்....

சியா
மாதகல்

## பல்லிழித்துப் பணம் பறித்தல் நல்லையிலே இல்லை ஐயா

நான்தான் தலைவர் நாடறிந்த பொருளாளர்
மேன்மை மிகு செயலாளர் திருமிகு ஆலயத்தை
திறமையுடன் நடாத்துகின்றோம்
மேல் நாட்டிலிருந்துவந்த ஐயா நீர் எங்களுக்கு
தாராளமாகத் தந்து எங்கள் திருப்பணிக்கு உதவுவீரென்று
பல்லி ழித்துப் பணம் பறித்தல் நல்லையிலே இல்லை ஐயா
அத்தனை பதவிப் பணிகளும் அழகாக நடக்குதிங்கே
அதற்குமேல் கந்தன் கருணையுங் கிடக்குதிங்கே
புல்லாரைப் பூசிக்காது பூசைக்கே முதலிடமாய்
ஏழை பணக்கார ஏற்றத்தாழ்வு இன்றி
வாரித்தான் வழங்கினாலும் வாய்ப்பிறக்கப் போற்றாது
மாரி போல் அருளை மக்களுக்கு அருளும் நல்லைச்
சூரனை ஒழித்தவனின் சூக்குமத்தை யாரறிவார்?

கவிமணி அன்னதாசன்

# கவிதைகள் மாதிரி

உன்
எதிரொலிகளோடு
பேசிக்கொள்ளவே
புறப்பட்டுவிட்டது...
என்
மௌன மேகங்கள்!

பின்னணியில்
இடி இருப்பது
தெரிந்தும்...
மின்னலை...
வரவேற்கிறேன்!
உன்னைப்
போல்
இருப்பதாலே...

உன்னால்
எறியப்பட்ட
ஒவ்வொரு
கற்களையும்
சிற்பமாய்
செதுக்கிக்
கொண்டிருக்கிறேன்!

என்
சடலத்தின் மீதும்
மலர்களை
தூவாதீர்கள்!
என்னவள்
வருகை என்று...
எழுந்தாலும்
எழுந்துவிடுவேன்...

குறைந்தபட்சம்
நீ
திரும்பிப்பார்த்
தாலே...
என் கண்களுக்கு
உன் கனவுகள்
தபாலில்
அனுப்பப்படும்!

உன்
தாக்குதல்
சாதாரணமானதல்ல!
எனக்கு
சாவையோ
அடையாளம்
காண்பித்தது!

உன்
இதயமும்
கடவுளைப்போல...
கல்லில்
வடித்ததா...?
கொஞ்சமும்
இரக்கமில்லையே...
கொந்தளிப்பும்
அமைதியும்
ஒரே
புள்ளியில் சந்திக்
கும்
நீ...என்னை
கிராஸ்
பண்ணுகையில்...

உன்
பார்வையில்
எரிந்துவிட்ட
பிறகு
எதற்கு...? இனி ஒரு
மரணம்



கண்ணீரையும்
பருகவேண்டி
இருக்கிறது!
உனக்காகவே
அழுவதால்...

நெடுந்தீவு
முகிலன்

# குடிமகனே, பெருங்குடி மகனே!

## நில்!, சிந்தி!!, செயற்படு!!!



(சென்றவார தொடர்ச்சி)

கணபதிப்பிள்ளை ஐயா ஒரு குமாஸ்தா. திறமையான குடிகாரர். அதே போல் பெருங்குடி மகன். ஒரு மகள். இன்னும் திருமணமாகவில்லை. மனைவியும் மிகவும் சாதுவானவள். விடுதலை நாட்களில் சாராயப் போத்தலுடன் தான் இருப்பார்.

அப்படிப்பட்டவர் அன்று வேறு விதமாக காட்சி அளித்தார். நெற்றியில் விபூதிப்பட்டை, சந்தனப் பொட்டு, குங்குமப் பொட்டு, உருத்திராட்சமாலை என்றவாறு ஒரு சைவச் சாமியாராக இருந்தார்.

அதைவிட அதிசயம் வீட்டு முன்பாக ஒரு புத்தம் புதிய அல்டோ (Alto)- கார். நான் அவரை கடைசியாக இரண்டு மாதத்துக்கு முன்புதான் சந்தித்தேன். இந்த இரு மாத இடைவெளிக்குள் பல மாற்றங்கள் எனக்கு. என்னையே நம்பவே முடியவில்லை.

''என்ன ஒரு மாதிரியாக பார்க்கிறீர்கள். ஏதாகிலும் வித்தியாசமாக இருக்கிறதா?'' என்று வினவியபடி என்னை உள்ளே அழைத்துச் சென்றார்.

''எல்லாம் உங்களுடைய உபதேசம் தான். என்னை குடிக்க வேண்டாம் என்று அறிவுறுத்தி எனது மனக்குழப்பத்தை நிவர்த்திப்படுத்த ஒரு ஞானியை சந்திக்க சொன்னீர்கள். அதன்படி இந்தியா சென்ற போது ஒரு குருவானவரை சந்தித்தேன். சும்மா இரு சுகம் கிடைக்கும் என்று அறிவுறுத்தினார். இலங்கை திரும்பியதும் எனது குமாஸ்தா வேலையை இராஜினாமா செய்து விட்டேன். குடியை விட்டேன். சும்மா இருந்து கடவுளை தியானிக்க தொடங்கினேன்.''



''அப்போது உங்கள் வாழ்க்கை செலவுக்கு...'' என்று நான் தொடங்க, ''கொஞ்சம் பொறுங்கள், எனது கதையை தயவு செய்து கேளுங்கள்'' என்றார்.

''நான் சுவாமியின் யோசனைப்படி இறைவனை நெருங்கினேன். ஒருநாள் பொருட்கள் கொள்வனவுக்காக பட்டணம் (யாழ் நகர்) சென்ற போது ஒரு அதிஷ்டலாபச் சீட்டை வாங்கினேன். குருவின் யோசனை வேலை செய்யத் தொடங்கியதோ என்னவோ முதலாவது பரிசினைப் பெற்றேன்.

கார் ஒன்றும், ஐம்பது லட்சம் ரூபா ஜக்பொட் அதிஷ்டமும் கிடைத்தது. இப்போது எனது மனம் நிம்மதி அடைந்துள்ளது. தொடர்ந்து இறைபணியில் ஈடுபடுவதோடு எனது மகளை ஒரு கரைசேர்க்க வேண்டும்'' என்று சொன்னார். 'உமக்கு ஏதாவது காசு அவசரமாக வேண்டுமா?' என்று கேட்டார். தான் பணத்தை வட்டியில் முதலீடு செய்துள்ளதாகவும், காரை ஒரு நிறுவனத்துக்கு வாடகைக்கு கொடுக்கப் போவதாகவும் தெரிவித்தார்.

சும்மா இருந்தால் சுகம் கிடைக்கும் என்று எனக்கு அறிவுரை கூறினார். பகவானின் அருளை எண்ணியபடி எனது அலுவலை முடித்துக் கொண்டு பயணத்தை தொடர்ந்தேன்.

போகும் வழியில் நடந்த மாற்றுமொரு சம்பவம் என்னை மேலும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

நேரம் பிற்பகல் 6 மணி இருக்கும் எமது ஊர் சந்தியில் ஒருவர் குடித்தபடி ஆடி, பாடி வசனங்கள் பேசிக் கொண்டிருந்தார். சில வேளைகளில் கெட்ட வார்த்தைகளும் வெளிப்பட்டன. பெண்கள் போய்வர முடியாதளவுக்கு அகோரமாக, அலங்கோலமாக இருந்தது. அவர்கள், கசிப்பு இரண்டும் சேர்த்து அருந்திவிட்டார்கள். அதாவது மது வெறி கூடிவிட்டது என்று பாதையோரத்தில் நிற்பவர்கள் கதைப்பது கேட்டது.

ஆமிக்காரர்கள் உட்பட எல்லோரும் பார்த்து இரசித்துக் கொண்டு இருந்தார்கள். ''என்னை யாரும் அணுகமுடியாது. நான் ஒருவருக்கும் பயப்படமாட்டேன். நான் ஒரு சண்டியன். நான் வைத்தது தான் சட்டம் என்று குடிவெறியில் கத்திக் கொண்டு இருந்தார்.

சாரமும் அதற்குள் அரைக்காற்சட்டையும் நகைச்சுவை நடிகர் வடிவேல் மாதிரி இருந்தார்.

சிறிது நேரத்தில் ஒரு ஜீப் வந்து அவரருகில் நின்றது. அதில் வந்த ஆமிக்காரர் இறங்கி அவரை அலாக்காக தூக்கி வாகனத்தில் போட்டார்கள்.

உடனே அழத் தொடங்கினார். அடிக்க வேண்டாம் என்று மன்றாடினார். தன்னைக் காப்பாற்றுமாறு வேண்டினார். ஒருவரும் உதவிக்கு போகவில்லை. சண்டித்தனம் வெறி எல்லாமே முறிந்து விட்டது.

நான் சென்று இராணுத்தினருடன் சிங்களத்தில் ''கதைத்தபோது இது ஒவ்வொருநாளும் நடக்கும் அடாவடித்தனம். ஊர்மக்கள் எதுவித நடவடிக்கையும் எடுப்பதில்லை. நாம் இப்போது நடவடிக்கையில் இறங்கியிள்ளோம்'' என்றார்கள். ஆனால் அவரோ என்னைப் பார்த்து கெஞ்சி மன்றாடினார். 'தான் இனி ஒரு போதும் இந்தபிழையை செய்யமாட்டேன்' என்றார். பயத்தில் அவருக்கு சிறுநீரும் கழிந்துவிட்டது.

நிலைமையை அனுசரித்து நான் ஒருவாறு இராணுவத்திடம் கதைத்து அவரை விடுதலையாக்கினேன். இப்போது அவரது மனைவியும், பிள்ளைகளும் செய்தி கேட்டு வந்துவிட்டார்கள்.

பின் அவர்களை எமது ஊரில் இருக்கும் கோயிலடிக்கு அழைத்து சென்று அறிவுறுத்தி அவர் தான் குடிக்கமாட்டேன் என்று மனைவிக்கும், பிள்ளைக்கும் சத்தியம் செய்து கொடுத்தார்.

இன்று வரை அவர் நன்றாகவே இருக்கிறார். சில குறைநிறைகள் குடும்பத்தில் இருக்கலாம். அவற்றை நிவர்த்தி செய்யும் போது ஒரு மனிதன் திருந்தி நடக்க முற்படுகிறான். அவருக்கு இருந்த குறைகள் என்ன?. அவை எவ்வாறு நிவர்த்திக்கப்பட்டன என்பதை அடுத்தவாரம் பார்ப்போம். **(தொடரும்)**

சித்தன்கேணியூர்
செல்வரத்தினம் சௌந்தரராஜன்
(ASSM-UK,AUKAP-UK)

# ‘யாழ் ஓசையின்’ வார ஜோதிட பலன்

## (23.09.11 முதல் 29.09.11 வரை)

## கலாநிதி துன்னையூர் ராம் தேவலோகேஸ்வர குருக்கள் (சாரதாபீட ஜோதிடம்)




### ★ மேஷம்

மேடராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திமமான பலனே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானமான செயற்பாடு வேண்டும். தொழில் நிலையில் சிறுசிறு பிரச்சினைகள் இருக்கும். குடும்பத்தில் அனுகூலமான பலன் ஏற்படும். பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் சற்று முயற்சி எடுக்க வேண்டும். பெண்களுக்கு மத்திம பலனுண்டு. மாணவர்கள் முயற்சி தேவை.




### ★ இடபம்

இடபராசி அன்பர்களுக்கு சிறப்பான பலா பலன்கள் அமையும் நிலையுண்டு. தொழில் நிலைகளில் சிறப்பான அனுகூலமான பலன்கள் அமையும் நிலையுண்டு. குடும்ப நிலையில் சிறப்பான அனுகூலமான பலன்கள் ஏற்படும். பணவரவு மிகவும் திருப்திகரமான நிலையில் அமையும். கடன் நிலைகளில் அனுகூலமான பலன் அமையும் பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.




### ★ மிதுனம்

மிதுனராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான பலன்கள் அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் இழுபறியின் பின்னர் வெற்றிகள் அமையும். தொழில் நிலையில் முன்னேற்றங்கள் அமையும். கடன் நிலைகளில் சிறு மந்த நிலை அமையும். மருத்துவ ரீதியான செலவுகள் ஏற்படும் நிலை இருக்கும். பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலை உண்டு. பெண்களுக்கு நன்மையுண்டு மாணவர்களுக்கு வெற்றியுண்டு.




### ★ கடகம்

கடகராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான பலா பலன்கள் அமையும். எடுக்கும் முயற்சிகளில் அனுகூலமான வெற்றி அமையும். தொழில் நிலையில் மேன்மையான பலா பலன்கள் ஏற்படும். பண வரவு மிகவும் திருப்திகரமான நிலையிலேயே அமையும். குடும்பத்தில் மகிழ்வும் சுபகாரிய பலன்களும் ஏற்படும். கடன் நிலைகளில் சுமுகமான பலா பலன்கள் அமையும். பெண்களுக்கு நன்மையுண்டு மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



### ★ சிம்மம்

சிம்மராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திமமான பலன்களே அமையும். எடுக்கும் முயற்சிகளில் நிதானம் தேவை. தேவையற்ற வீண் அலைச்சல் நிலைகள் இருக்கும். பணவரவு சற்று சுமாரான மத்திமமான நிலையில் அமையும். கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் தொடரும். உடல் நிலை சுகயீனம் மருத்துவ செலவுகள் ஏற்படும். பெண்களுக்கு மத்திம பலன் அமையும். மாணவர்கள் முயற்சி தேவை.



### ★ கன்னி

கன்னி ராசி அன்பர்களுக்கு ஓரளவுக்கு அனுகூலமான பலன்கள் அமையும். எடுக்கும் முயற்சிகளில் சற்று மத்திமமான பலனே அமையும். தொழில் நிலைகளில் நிதானமான செயற்பாடு மேற்கொள்ள வேண்டும். குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலன் அமையும். கடன் நிலைகளில் சற்று இழுபறி தாமத நிலை இருக்கும். பெண்களுக்கு மத்திம பலன் அமையும் . மாணவர்கள் முயற்சி தேவை.




### ★ துலாம்

துலா ராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திமமான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானம் தேவை. தொழில் நிலையில் அலைச்சல் இழுபறி வேலைப்பளு என்பன இருக்கும். பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலை உண்டு. குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் ஏற்படும். கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் அமையும். பெண்களுக்கு மன சஞ்சலமுண்டு. மாணவர்களுக்கு முயற்சி தேவை.



### ★ விருச்சிகம்

விருட்சிக ராசி அன்பர்களுக்கு சுமாரான மத்திமமான சிறுசிறு சிக்கல்கள் அமையும். தொழில் நிலையில் சிறப்பான முன்னேற்றம் இருக்கும். பண வரவு திருப்திகரமாக அமையும். குடும்பத்தில் மகிழ்வும் நிறைவான பலன்கள் ஏற்படும். எடுக்கின்ற முயற்சிகளில் ஓரளவிற்கு வெற்றிகள் அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலா பலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்கட்கு வெற்றி உண்டு.



### ★ தனுசு

தனுசு ராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானம் வேண்டும். தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலை இருக்கும். உடல் நிலையில் சிறு சிறு சுகயீனங்கள் ஏற்படும். பணவரவு சற்று மத்திமமான சுமாரான நிலையில் அமையும். கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் ஏற்படும். பெண்களுக்கு மன உளைச்சல் இருக்கும். மாணவர்கள் முயற்சி தேவை.



### ★ மகரம்

மகரராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான நல்ல பலாபலன்கள் அமையும் நிலையுண்டு. தொழில் நிலையில் முன்னேற்றம் இருக்கும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றி ஏற்படும். பணவரவு திருப்திகரமான நிலையிலே அமைந்திடும். குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான பலன்கள் அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்க்கு வெற்றியுண்டு.



### ★ கும்பம்

கும்பராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு நன்மை அமையும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றிகள் ஏற்படும். தொழில் நிலையில் சிறு சிறு அலைச்சல் அமைந்திருக்கும். பணவரவு சற்று சுமாரான நிலையிலேயே அமையும். உடல் நிலையில் சிறு சிறு சுகயீனங்கள் ஏற்படும். குடும்பத்தில் சற்று மத்திமமான பலாபலன்கள் அமையும். பெண்களுக்கு மத்திம பலன் அமையும். மாணவர் முயற்சி வேண்டும்.



### ★ மீனம்

மீனராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திம பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானம் தேவை. தொழில் நிலையில் சிறுசிறு அலைச்சல் இழுபறி நிலையிருக்கும். எடுக்கின்ற விடயங்களில் அலைச்சல் நிலை இருக்கும். குடும்பத்தில் சற்று மத்திம பலன்கள் அமையும் நிலை உண்டு. கடன் நிலைகளில் நிதானமான செயல் வேண்டும். பெண்களுக்கு மனச்சஞ்சல முண்டு. மாணவர்கள் நிதானம் தேவை.

# ஆவிகளின் அமாவாசை அட்டகாசம் !

ஆறு, அருவி, குளம், குட்டைகளை பார்த்த உடன் குளியல் போட விரும்புவது அனைவரின் இயல்பு. ஆனால் மேட்டூர் அணையில் மட்டம் என்ற இடத்தை பார்த்ததும் பீதியுடன் நகர்கிறார்கள் அப்பகுதியினர். இங்கு குளித்தால் அதோ கதி என்று அச்சத்தோடு சொல்கிறார்கள்.

மேட்டூர் அணையில் காவிரி கால்வாய் ஓரத்தில் அணைக்கட்டு முனியப்பன் கோயில் உள்ளது. காவிரி கால்வாய் டெல்டா பாசன கால்வாயுடன் சேரும் பகுதியில் இருக்கும் இடம்தான் மட்டம். இப்பகுதியில் குளிப்பவர்களின் உயிரை ரத்த வெறி பிடித்த ஆவிகள் காவு வாங்குவதாக பீதியுடன் சொல்கின்றனர் மேட்டூர்வாசிகள். மட்டத்தில் குளிப்பவர்கள் தண்ணீரில் மூழ்கி இறக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகவும், ஆண்டுக்கு 20 பேராவது உயிரை பறிகொடுப்பதாகவும் கூறப்படுகிறது.

காவிரி கால்வாயில் இருந்து கொட்டும் தண்ணீர், பெரிய பள்ளத்தில் விழுந்து நுரையுடன் பொங்கி பாய்ந்தோடுகிறது. அந்த இடத்தில் நீர்சுழல் இருக்கும். இந்த சுழலில்தான் கெட்ட ஆவிகள் குடிகொண்டிருப்பதாக சொல்கின்றனர் மேட்டூர் மீனவர்கள். இதனால் உள்ளூர் மக்கள் மட்டத்தில் குளிப்பதே இல்லை. விஷயம் தெரியாமல் இறங்கி குளிக்கும் வெளியூர்க்காரர்கள்தான் ஆவிகளின் பிடியில் சிக்கி இறப்பதாக திகிலூட்டும் விஷயம் சொல்லப்படுகிறது.


மட்டத்தில் யாராவது சிக்கி விட்டால் உடனே தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவிக்கப்படும். ஆனால் ஆவி பீதி காரணமாக அவர்கள்கூட உடனே தண்ணீரில் இறங்குவதில்லையாம். காவேரி பாலத்தை சேர்ந்த ஆறுமுகம் (65) என்பவரைத்தான் அழைத்து வருவார்கள். அவர் துணிச்சலோடு தண்ணீரில் இறங்கி இறப்பவர்களின் உடல்களை மீட்பதாக சொல்கிறார்கள் அப்பகுதி மக்கள்.

இதுபற்றி ஆறுமுகத்திடம் கேட்டபோது, இதுவரை 160 பிணங்களை மீட்டிருக்கேன். 10 வருசத்துக்கு முன்னால, பிள்ளைகளோடு இங்க வந்திருந்தேன். மட்டத்துல குளிச்சப்போ திடீர்னு தண்ணியில சலசலப்பு சத்தம். நேரம் ஆகஆக சத்தம் அதிகமாச்சு. என்னான்னு பாத்தபோ, வெள்ள வேட்டி, சட்டை போட்ட உருவம் ஒண்ணு, தண்ணியில இருந்து கிளம்பி போச்சு. திக்குனு ஆகிடுச்சு. அமாவாசை, பவுர்ணமிக்கு இங்க ஆவிங்க அட்டகாசம் அதிகமா இருக்கும். அப்போ குளிச்சு மாட்டிக்கிறவங்கள என்ன செஞ்சாலும் காப்பாத்த முடியாது. ஒருநாள் நான் எவ்வளவோ தடுத்தும் 3 பேரு குளிக்க போனாங்க. ஆவிங்ககிட்ட மாட்டிக்கிட்டாங்க. 2 பேர காப்பாத்துனேன். ஒருத்தர் அநியாயமா செத்துட்டார். அப்படி சாகுறவங்க ஆன்மாவும் இங்கேயே சுத்திட்டு இருக்கும். இதுக்கெல்லாம் பரிகாரம் செஞ்சாதான் ஆவிங்க சேட்டை குறையும். எனக்கும் கொஞ்சம் கிலியாகத்தான் இருக்கும்.

குவாட்டரை இறக்கிட்டுதான் உள்ளே இறங்குவேன் என்று விலாவாரியாக கூறி முடித்தார்.

மட்டத்தில் குளிக்கும்போது திடீரென கன்னத்தில் பளார் என்று யாரோ அடிப்பதாகவும், மர்மமான சத்தங்கள் கேட்பதாகவும் பலர் சொல்கின்றனர்.

அப்படி கன்னத்தில் அடி வாங்கியவர்களில் சிலர் வீட்டில் போய் சுருண்டு விழுந்து இறந்த சம்பவங்களும் நடந்துள்ளன என்று சொல்லி பயமுறுத்துகிறார்கள் உள்ளூர் மக்கள்.




# சர்வதேச சதுரங்க தரப்படுத்தல் பட்டியலில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மூவர்

அச்சுவேலி

சர்வதேச சதுரங்க தரப்படுத்தல் பட்டியலில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மூவரின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சர்வதேச சதுரங்க சம்மேளனம் மாதாந்தம் சர்வதேச ரீதியில் சதுரங்கத் தரப்படுத்தல் பட்டியலை வெளியிட்டு வருகின்றது. செப்டம்பர் மாதத்துக்கான பட்டியலில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மூவரின் பெயர்கள் இடமபெற்றுள்ளன.

காங்கேயன் ஆதவன் 1940 புள்ளிகளைப் பெற்று 41 ஆவது இடத்திலும் செல்வி சிவகுநாதன் வித்தியாராணி 1901 புள்ளிகளைப் பெற்று 70 ஆவது இடத்திலும் சிவாநந்தன் வித்தியாதரன் 1700 புள்ளிகளைப் பெற்று 195 ஆவது இடத்திலும் உள்ளனர்.

# கரவெட்டி பிரதேச செயலகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

அச்சுவேலி,

கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டுத்துறை நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டுத்துறையின் வளர்ச்சி நிதிக்காக நடத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் பிரதேச செயலகங்களில் பதிவு செய்துள்ள விளையாட்டுக்கழகங்கள் பங்குகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. போட்டிக்கான விண்ணப்ப படிவங்களை கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு பிரிவிலும் ஏனைய பிரதேச செயலகங்களில் விளையாட்டுத்துறை அதிகாரிகளிடமும் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# குளமங்கால் றோ.க.த. பாடசாலைக்கு ஹொக்கி உபகரணங்கள் அன்பளிப்பு

அச்சுவேலி

மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலைவன் பாடசாலைக்கு ஹொக்கி விளையாட்டு உபகரணங்கள் வடக்கு மாகாண ஆளுநரின் செயற்றிட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

இப் பாடசாலையில் மாணவர்கள் ஹொக்கி விளையாட்டில் திறமையாக ஈடுபாடு காட்டி வருகின்ற போதிலும் போதியளவான உபகரணங்கள் இல்லாமையால் கஷ்டப்படுகின்றனர். தமது திறமையை வெளிப்படுத்தி மாவட்டம் மற்றும் மாகாணமட்டத்தில் வெற்றி பெற்று தேசிய மட்டம் வரை சென்று வருகின்றனர்.


மாணவர்களின் திறமையை ஊக்குவிக்கும் வகையில் வடக்குமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறியின் ஆலோசனைக்கு அமைய வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் வடமாகாண கல்வி அமைச்சின் விளையாட்டுத்துறை உதவிக்கல்விப்பணிப்பாளர் இவ் உபகரணங்களை கையளித்துள்ளார்.




அராலி நிலாவெளி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இரண்டாமிடத்தினைப் பெற்றுக் கொண்ட சங்கானை யுத் அணியினரைப் படத்தில் காணலாம். (படம்- அரியாலை நிருபர்)

# சோதனைகளை தாண்டி சாதனைகள் நிலைநாட்டப்பட வேண்டும்

2011ஆம் ஆண்டு நடைபெற்ற வட மாகாண விளையாட்டுப் போட்டியில் கமலநாதன் லேகாயினி 19 வயதிற்குட்பட்டோருக்கான போட்டியில் சாதனை படைத்துள்ளார்.




இவர் இம்முறை நடைபெற்ற 400 மீற்றர் (1.06.20 செக்கன்) 400 மீற்றர் தடைதாண்டல் (1.16.00 செக்கன்) 200 மீற்றர் (29.13 செக்கன்) ஆகிய நிகழ்ச்சிகளில் முதலாமிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

வவுனியா திருநாமற்குளம் எனும் முகவரியைச் சேர்ந்த லேகாயினி ஆரம்பத்தில் வ/செட்டிகுளம் மகா வித்தியாலயத்தில் தரம் 9 வரை கல்வி கற்று அதன் பின்னர் தரம்9 இரண்டாம் தவணையிலிருந்து வவுனியா/சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் கல்விகற்று வருகின்றார். இவரிடம் இச்சாதனைகளை பற்றிக் கேட்ட போது,

1993ஆம் ஆண்டு பிறந்தேன். எனது அப்பாவைச் நான் சரியாகப் பார்க்கும் முன்பே அதே ஆண்டே அவர் இறந்துவிட்டார். அதன் பின்னர் அம்மாவின் அரவணைப்பிலேயே வளர்ந்தேன். எங்களுக்கு எமது பெரியம்மா மகன்தான் சகல உதவிகளையும் செய்து வருகின்றார்.

எனக்கு சிறுவயதிலிருந்தே விளையாட்டுத் துறையில் ஆர்வமிருந்த போது எனது பாடசாலையின் பயிற்றுனரும் உடற்கல்வி ஆசிரியருமாக கடமையாற்றும் தணிகாசலம் பத்மசொரூபனே எனக்குள் இருந்த திறமையைக் கண்டுபிடித்து என்னைப் பயிற்றுவித்தார்.

இதனால் 2009ஆம் ஆண்டு நடைபெற்ற பாடசாலைமட்ட, மாகாணப் போட்டியில் 200 மீற்றரில் 2ஆம் இடத்தைப் பெற்றேன். அதன் பின்னர் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற பாடசாலை மட்ட மெய்வன்மைப் போட்டியில் 400 மீற்றர் 400 மீற்றர் தடைதாண்டல், 200 மீற்றர் ஓட்டம் ஆகிய போட்டிகளில் முதலாமிடத்தைப் பெற்று சிறந்த வீராங்கனை என்ற பட்டமும் பெற்றேன். அதே ஆண்டே திறந்த மெய்வன்மைப் போட்டி செயலகங்களுக்கிடையே நடைபெற்றது. அதிலும் 400 மீற்றர் 400 மீற்றர் தடைதாண்டலில் முதலாமிடத்தையும் 200மீற்றரில் 2ஆம் இடத்தையும் பெற்றேன்.



பாடசாலைமட்டப் போட்டிகளில் தேசிய மட்டத்தில் சான்றிதழ் கிடைக்காவிட்டாலும் செயலகங்களுக்கிடையிலான போட்டியில் கலந்து கொண்டபோது 400மீற்றர் ஓட்டத்தில் வர்ண விருதினைப் பெற்றேன்.

க.பொ.த. (சா/த) பரீட்சையில் 2A B 2c 2s எனும் பெறுபேற்றினைப் பெற்று உயர்தரத்தில் கலைத்துறையில் கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றேன்.

எனது பயிற்றுனருக்கு இடமாற்றம் ஏற்பட்டதால் என்னால் தொடர்ச்சியான பயிற்சியைப் பெறமுடியவில்லை. இதனால் எனது ஆளுமை சிறிது குறையைத் தொடங்கியது. ஆனால் அவருக்கு மீண்டும் எமது பாடசாலைக்கு இடம் மாற்றம் கிடைத்ததால் தற்போது தொடர்ச்சியான பயிற்சியை பெறுகின்றேன். எனது பாடசாலையிலும் குடும்பத்திலும் விளையாட்டிற்கு பூரண ஒத்துழைப்புக் கிடைத்துள்ளது. இதனால் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெறவிருக்கும் 400 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் சாதனை படைப்பேன் என்ற நம்பிக்கையோடு பயிற்சி பெற்றுவருகின்றேன் என்றார்.

இவரின் பயிற்றுனர் பத்மரூபன் கருத்துத் தெரிவிக்கையில்,

இவரை எமது இல்ல விளையாட்டுப் போட்டியில்தான் இனங்கண்டேன். இயற்கையாகவே இவரிடம் திறமையிருப்பதைக் கண்டு பயிற்சியளித்தேன். இவர் என்னிடம் தொடர்ச்சியான பயிற்சியை மேற்கொண்ட போது 200 மீற்றரை 28.6 செக்கன்களில் ஓடினார். ஆனால் சிறிது காலம் நானும் இல்லை. அதனால் தற்போது 29.3 செக்கன்களிலேயே ஓடுகின்றார். இவரிற்கு தான் விரும்பிய மாதிரி பயிற்சி கொடுப்பதற்குப் போதிய வசதிகள் இல்லாமல் உள்ளது.

தற்போது தேசிய மட்டத்தில் சாதனை படைப்பது 90% தான் சாத்தியம் என நினைக்கின்றேன். ஆனால் நிச்சயமாக அடுத்தாண்டில் சாதனை படைப்பார் என நூறு வீதம் நம்புகின்றேன். இதற்கு இறைவனுடன் சம்பந்தப்பட்ட அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

(நெடுங்கேணி நிருபர்)
க.கனகராஜா

# சம்பியன் லீக் இருபது-20 கிரிக்கெட்

## இன்று ஆரம்பம்

கிரிக்கெட் ரசிகர்களுக்கு மீண்டுமொரு அதிரடி விருந்தை அளிக்கவிருக்கும் சம்பியன் லீக் இருபது -20 கிரிக்கெட் தொடர் இன்று கோலாகலமாக இந்தியாவில் ஆரம்பமாகின்றது. கிரிக்கெட் உலகில் தற்போது அதிக ரசிகர்களை தன்னகத்தே கட்டிப் போட்டிருக்கும் அதிரடியும் விறுவிறுப்பும் நிறைந்த இந்த இருபது-20 கிரிக்கெட் போட்டி பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் ஆரம்பமாகின்றது.

4 ஆவது ஆண்டில் களம் கண்டுள்ள, நாடுகளின் கழக அணிகளுக்கிடையே நடைபெறும் இப்போட்டியில் இம்முறை 10 அணிகள் கிண்ணத்துக்காக போராடுகின்றன. இதில் அண்மையில் நடைபெற்று முடிந்த 4 ஆவது ஐ.பி.எல். இருபது-20 தொடரில் முதல் 3 இடங்களையும் பெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ், ரோயல் சலென்ஜர்ஸ் மற்றும் மும்பை இந்தியன்ஸ் ஆகிய அணிகள் நேரடியாக போட்டிக்கு தகுதி பெற்றதுடன் தென்னாபிரிக்காவின் ஹாப் ஹோபர்ஸ், சவரல்ற் வாரியர்ஸ், அவுஸ்திரேலியாவின் வாரியர், தெற்கு அவுஸ்திரேலியா ஆகிய அணிகளும் நேரடியாக தகுதி பெற்றன.

இதனிடையே மீதி 3 அணிகளுக்குரிய இடத்தினை பூர்த்தி செய்ய 6 அணிகளுக்கிடையே கடந்த 19 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை ஹைதராபாத்தில் தகுதிச்சுற்றுப் போட்டி நடைபெற்றது. இதில் ட்ரினிடாட், சோமர் செட், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் ஆகிய அணிகள் மிகுந்த போராட்டத்தின் மத்தியில் இத்தொடருக்கு தகுதி பெற்றுள்ளன.

இதில் இலங்கையின் றுகுணு அணி தகுதிச் சுற்றில் ஒரு போட்டியில் மாத்திரம் வெற்றி பெற்று பிரதான சுற்றுக்கான தகுதியை இழந்தது.

இந்நிலையில், இந்த சம்பியன் லீக்கின் கடந்த 3 ஆண்டுகால பயணத்தை பார்ப்போமானால் அனைத்து அணிகளும் சவால் நிறைந்தவையாகவே உள்ளன. கடந்த 2008 ஆம் ஆண்டு முதலாவது சம்பியன் லீக் இருபது-20 தொடர் இந்தியாவில் நடைபெற்றது.



**இன்று ஆரம்பமாகும் சம்பியன் லீக் இருபது-20 கிரிக்கெட் போட்டி 23 போட்டிகளை உள்ளடக்கி 16 நாட்கள் நடைபெறவுள்ளது.**

**இறுதிப்போட்டி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி சென்னையில் நடைபெறவுள்ளது.**

இந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, அகிய நாடுகளைச் சேர்ந்த 8 அணிகளுக்கிடையே நடைபெற்ற இத் தொடர் பாதியிலே கைவிடப்பட்டது. நவம்பர் மாதம் 26 ஆம் திகதி மும்பையில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலையடுத்தே அது கைவிடப்பட்டது.

இதனையடுத்து கடந்த 2009 ஆம் ஆண்டு பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் மீண்டும் இந்தியாவிலேயே தொடர் நடைபெற்றது. 12 அணிகள் களம் கண்ட இத்தொடரில் பாகிஸ்தானுக்கு இடமளிக்கப்படவில்லை. மும்பைப் பயங்கரவாதத்தாக்குதலின் எதிரோலியாலேயே இதில் பாகிஸ்தானுக்கு இடமளிக்கவில்லை.

இதில் இறுதிப்போட்டியில் 159 ஓட்டங்களை டிரினிடாட் அணிக்கு வெற்றி இலக்காக நிர்ணயித்த அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் அணி 118 ஓட்டங்களைப்பெறுவதற்குள் அவ்வணியின் சகல விக்கெட்டுக்களையும் பறித்து 41 ஓட்டங்களால் வெற்றி பெற்று கிண்ணத்தை கைப்பற்றியது.

இதனையடுத்து கடந்த 2010 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் சம்பியன் லீக் இருபது-20 தொடர் நடைபெற்றது. 10 அணிகள் களம் கண்ட இத் தொடரின் இறுதிப்போட்டியில் தென்னாபிரிக்காவின் வாரியர்ஸ் அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 129 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயிக்க பதிலெடுத்தாடிய சென்னை சுப்பர்கிங்ஸ் அணி இரு விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்களைக் குவித்து 8 விக்கெட்டுக்காளல் அபார வெற்றி பெற்றது. இதனையடுத்து கடந்த ஆண்டு சம்பியன் லீக் கிண்ணத்தை தனதாக்கியது.

இந்நிலையில், கடந்த 3 தொடர்களிலும் வீரர்களின் பதிவுகளைப் பார்க்கும் போது அதிக ஓட்டங்களைப்பெற்ற துடுப்பாட்ட வீரர்கள் வரிசையில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியைச் சேர்ந்த இந்தியாவின் முரளி விஜய் 293 ஓட்டங்களுடன் முதலிடத்திலுள்ளார். இது கடந்த 2010 ஆம் ஆண்டு பெறப்பட்டது. இதேவேளை 2, 3 ஆவது இடங்களில் தென்னாபிரிக்காவின் ஜேக்கப்ஸ் (292), ஜே.பி. டுமினி (290 ) [illegible]

அதிக விக்கெட்டுக்களை பெற்ற பந்து வீச்சாளர்கள் வரிசையில் முதல் மூன்று இடங்களில் மேற்கிந்திய தீவுகளின் பிராவே 16 விக்கெட்டுக்களுடனும், அவுஸ்திரேலியாவின் கிளன்ற் மைக்கே 14 விக்கெட்டுக்களுடன் இந்தியாவின் அஸ்வின் 13 விக்கெட்டுக்களுடன் உள்ளனர்.

அதிக சிக்ஸர்களைப்பெற்ற வீரர்கள் வரிசையில் மேற்கிந்தியதீவுகளின் கிரன் போலாட் 28 சிக்ஸர்களுடன் முதலாவது இடத்திலும் இந்தியாவின் சுரேஷ் ரெய்னா 12 சிக்ஸர்களுடன் 2 ஆவது இடத்திலும் அடுத்து இடத்தில் நியூஸிலாந்தின் ரோஸ் டெய்லர் 11 சிக்கஸ்களுடனும் உள்ளனர்.

இதனிடையே கடந்த காலத்தில் அணிகளின் பதிவுகளைப் பார்க்கும் போது சென்னை சுப்பர் கிங்ஸ், தென் அவுஸ்திரேலியா ரெட்பாக்ஸ், நியூ சவுத் வேல்ஸ், ட்ரினிடாட் , தென்னாபிரிக்கா வாரியர்ஸ் ஆகிய அணிகள் முன்னிலையில் உள்ளன.

இந்நிலையில் இன்று ஆரம்பமாகின்ற சம்பியன் லீக் இருபது-20 தொடர் வரலாற்றில் பலமாற்றங்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 10 ஆவது உலகக்கிண்ணத் தொடரையடுத்து நடந்து முடிந்த 4 ஆவது ஐ.பி.எல். தொடரே இத்தொடரின் மீதான அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

உலகக்கிண்ணத் தொடரினையடுத்து ஐ.பி.எல். தொடரில் குதித்த வீரர்கள் தமது அபார திறமைகளை வெளிப்படுத்தினார். இதனால் அத்தொடர் இறுதிப் போட்டி வரை பெரும் விறுவிறுப்பை ஏற்படுத்தியது. இதில் துடுப்பாட்டத்தில் மிரட்டிய ரோயல் சலென்ஜர்ஸ் அணியின் கிறிஸ்கெய்ல் மற்றும் பந்து வீச்சில் மிரட்டிய மும்பை இந்தியன்ஸ் அணியின் லசித் மலிங்க ஆகியோர் இத்தொடரிலும் அவ்வாறே அபார ஆட்டத்தினை வெளிப்படுத்துவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனிடையே நடப்பு சம்பியனாக களமிறங்கும் சென்னை சுப்பர்கிங்ஸ் அணி இம்முறையும் கிண்ணத்தை தக்கவைத்துக்கொள்ள கடுமையாக போராடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வணியில் இடம் பெற்றுள்ள அவுஸ்திரேலியாவின் மைக்கல் ஹஸி அணியின் வெற்றிக்கு முக்கிய பங்கு வகிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அண்மையில் இலங்கை அணியுடனான தொடரில் இவரது துடுப்பாட்டம் மோலோங்கிக் காணப்பட்டது. இதில் இலங்கை அணியுடனான டெஸ்ட் தொடரில் 3 ஆவது போட்டியில் முதல் இனிங்ஸில் சதத்தினையும் 2 ஆவது இனிங்ஸில் அரைச்சதத்தினையும் பெற்ற இவர் ஆட்டநாயகனுக்குரிய விருதையும் தொடர் நாயகனுக்குரிய விருதையும் வென்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அண்மையில் இங்கிலாந்து அணியுடனான தொடர்ச்சியான தோல்வியில் துவண்டுள்ள இந்திய அணியின் வீரர்கள் இத்தொடரில் தமது திறனை நிரூபிப்பார்களா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

இதில் நடப்பு சம்பியனாக களமிறங்கும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் மஹேந்திரசிங் டோனி மீது அதிக எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. இங்கிலாந்து அணியுடனான அனைத்து போட்டிகளையும் இவரது தலைமையிலேயே இந்திய அணி பறிகொடுத்து தரப்படுத்தலிலும் வீழ்ச்சி கண்டுள்ளமையினால் இதில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைமையை எவ்வாறு இவர் நகர்த்தப்போகிறார் [illegible]

இந்நிலையில், 23 போட்டிகளை உள்ளடக்கி 16 நாட்கள் நடைபெறவுள்ள இத்தொடர் இறுதிவரை விறுவிறுப்பை ஏற்படுத்தும் என்பது மறுப்பதுக்கில்லை. இருபது-20 என்றாலே அங்கு அதிரடிக்கே முதலிடம். ஆரம்பம் முதல் இறுதிவரை ஓயாது வீரர்களின் துடுப்பாட்ட மட்டைக்கும் எதிரணியின் பந்து வீச்சுக்குமிடையே இடம்பெறும் அதிரடியான போராட்டமாகவே இருக்கும்.

எனவே சவால் அதிகம் நிறைந்துள்ள இத்தொடரில் இம்முறை சம்பியன் லீக் இருபது-20 கிண்ணத்தை கைப்பற்றப்போகும் அணி என்பது இறுதிவரை பெரும் எதிர்பார்ப்பையே ஏற்படுத்தவுள்ளது.



**ப.சுகிர்தன்**

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில்

# வடமாகாணத்தில் மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்ற மாணவர்கள்

முல்லைத்தீவு



ப.சேதுராகவன் (194 புள்ளிகள்)

வவுனியா



ச.சர்மிகா (193 புள்ளிகள்)

யாழ்ப்பாணம்



ர.நிதூஷிகா (192 புள்ளிகள்)

கிளிநொச்சி



ச.டர்சன் (190 புள்ளிகள்)

மன்னார்



அ.றினோசன் (188 புள்ளிகள்)

# யாழ். குடாநாட்டு நிகழ்வுகள்



யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோரும் வரவேற்கப்படுவதை படத்தில் காணலாம்.

(படம் : நெடுந்தீவு நிருபர்)




கரவெட்டி தஞ்சை ஐங்கரன் அறநெறிப் பாடசாலையின் 6ஆம் ஆண்டு நிறைவு விழாவில் கலை இளமாணி ஆர்.காஷ்ய மகேஷ் குழுவினர் இன்னிசை வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம் : வடமராட்சி நிருபர்)



வேலணை சாட்டி சிந்தாத்திரை மாதா தேவாலய வருடாந்த விழாவின் இறுதி நாளின்போது தேவ அன்னையின் திருச்சொரூபம் பவனியாக எடுத்துவரப் படுவதை படத்தில் காணலாம்.

(படம் : நெடுந்தீவு நிருபர்)




வலி.கிழக்கு பிரதேச செயலக பண்பாட்டுப் பேரவை நடத்திய 'சிறுகதை பயிலரங்கு' நிகழ்வில் கலந்துகொண்ட மாணவிக்கு உதவிப்பிரதேச செயலர் செல்வி ச.பிரேமினி சான்றிதழ் வழங்குவதை படத்தில் காணலாம்.

(படம் : அச்சுவேலி நிருபர்)

Printed and published by Express Newspapers (Cey) Ltd. at No. 185, Grandpass Road, Colombo 14. On Friday September 23, 2011